# உதயன்



23

www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 289 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 25 திங்கட்கிழமை (10/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

## மூன்று மாகாண சபைகளிலும் அரசுக்கு வெற்றி

கொழும்பு, செப்.10

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றுமுடிந்த கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தலில் வெற்றிபெற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிவாகை சூடியுள்ளது.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் பங்காளிக் கட்சிகளின் உதவியுடன் அரசு தனது பலத்தை நிலைநாட்டினாலும், தமிழ் மக்களின் ஆதரவை - கணிசமானளவு வாக்குகளை அதனால் பெறமுடியாமல் போயுள்ளது என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

அத்துடன், வடக்கு, கிழக்கு பிரிவுக்குப் பின்னர் முதல் முறையாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருமலையையும், மட்டக்களப்பையும் தன் வசப்படுத்தி அந்த மாகாணத்தில் 11 ஆசனங்களைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் விருப்பு வாக்குப் பட்டியலிலும் கூட்டமைப்பு வேட்பாளர்களே முதன்மை வகித்துள்ளனர்.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அடித்தளம் - கோட்டை என வர்ணிக்கப்படும் கிழக்கு மாகாணசபையில் அதற்கு

பார்க்க பக்கம் 4

# கூட்டாட்சிக்குத் தயார்

## முஸ்லிம் காங்கிரஸுக்கு கூட்டமைப்பு அழைப்பு

கொழும்பு, செப்.10

கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்குத் தாராளமான விட்டுக்கொடுப்புகளுடன் செயற்படுவதற்குத் தயாராக இருக்கிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றுப் பகிரங்கமாகவே அறிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள் வெளிவந்துள்ள சூழ்நிலையில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுக்களை நடத்துவீர்களா? என்று கேட்டபோதே இந்த அறிவிப்பை விடுத்த சம்பந்தன், மேலும் கூறியதாவது,


அரசு தனது வளங்களைத் துஷ்பிரயோகம் செய்த நிலையில் பயமுறுத்தல்கள், லஞ்சம், ஊழல்கள் தலைவிரித்தாடிய நிலையில் தமிழ்

பார்க்க பக்கம் 4

### கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 08/09/2012




| | |
|---|---|
| அரசு | 14 |
| தமிழர் | 11 |
| முஸ்லிம்கள் | 7 |
| ஐ.தே.க. | 4 |
| தே.சு.மு. | 1 |



**ஆசனங்கள்**

திருகோணமலை: தமிழ் அரசு -3, இலங்கை அரசு -3, மு.கா. -2, ஐ.தே.க. -1, தே.சு.மு. -1

மட்டக்களப்பு: தமிழ் அரசு -6, இலங்கை அரசு -4, மு.கா. -1

அம்பாறை: இலங்கை அரசு -5, மு.கா. -4, ஐ.தே.க. -3, தமிழ் அரசு -2

**வாக்குகள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை அரசு | 200,044 | தமிழ் அரசு | 193,827 | | |
| மு.கா. | 132,917 | ஐ.தே.க. | 74,901 | தே.சு.மு | 9,522 |

**5** பளையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் அடுத்த வருடம் டிசெம்பரில் நிறைவடையும்.

**8** இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, தனது 100 ஆவது ரொக்கெட்டை நேற்று விண் வெளிக்கு அனுப்பியது.

**9** சீனாவில் ஏற்பட்ட நில நடுக்கத் தால்சாவடைந்தோரின் எண்ணிக்கை 80ஆக உயர்ந்துள்ளது, 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

**15** மட்டக்களப்பு கோரளைப் பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும்காற்றால் 36 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது

## பெரும்பான்மைப் பலத்தை கூட்டமைப்பு நிரூபிக்கும்

### கிழக்கு ஆளுநருக்கு சம்பந்தன் கடிதம்

கொழும்பு, செப்.10

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்கப் போதுமான - கணிசமான உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் இல்லாதமையால் முதலமைச்சர் பதவிக்குப் பெரும்பான்மைப் பலம்கொண்ட தரப்பிலிருந்து ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும், இதற்கமைய அறுதிப் பெரும்பான்மை கொண்ட குழுவை விரைவில் அறியத் தரவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள் ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இதர கட்சியொன்றின் உதவியுடன் 15

பார்க்க பக்கம் 4

## முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு கோரி கூட்டமைப்பும் அரசும் தீவிர முயற்சி

கொழும்பு, செப்.10

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைப்பலம் கிடைக்காத சூழ்நிலையில், மாகாண ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாகியிருக்கிறது.

இதனால் கிழக்கில் ஆட்சியொன்றை அமைப்பதற்கான வியூகங்கள் நடைபெற்றுவருவதுடன், இதற்கான மந்திராலோசனைகள் பல்வேறு மட்டங்களில் நடத்தப்பட்டுவருகின்றன.

நேற்றுக்காலை மு.கா. தலைவருடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட தமிழ்த் தேசியக்

பார்க்க பக்கம் 4

## சப்ரகமுவவில் முதன்முதலாக இரு தமிழ் பிரதிநிதித்துவம்

கொழும்பு, செப்.10

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றெடுப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையில் சேவல் சின்னத்தில் களமிறங்கிய முக்கூட்டுக் கட்சிகள் வரலாற்றில் முதல் தடவையாக அந்தமாகாணத்தில் இரு தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்துள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 25 ஆயிரத்து 985 வாக்குகளைப்பெற்று இரண்டு ஆசனங்களை இந்த முக்கூட்டுக் கட்சிகள் பெற்றுள்ளன.

இதனடிப்படையில், கேகாலை மாவட்டத்தில் 8 ஆயிரத்து 971 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், இரத்தினபுரி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 14 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றி

பார்க்க பக்கம் 4

## சந்தேக நபர்கள் சரண்

மன்னார், செப்.10

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரினாலும், புலனாய்வுத் துறையினராலும் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் 11 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி இடம் பெற்ற

பார்க்க பக்கம் 4

## இரு மனித எச்சங்கள் கிணற்றில் இருந்து மீட்பு

### வேலணையில் பரபரப்பு

யாழ்ப்பாணம், செப் 10

வேலணை வைரவர் கோயிலடிப் பகுதியில் கிணறு ஒன்றில் இருந்து இரண்டு மனித மண்டையோடுகள் உட்பட மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டன. கயிற்றால் கல்லுடன் கட்டப்பட்டு, கிணற்றுக்குள் வீசி படுகொலை செய்யப்பட்டவர்களுடைய எச்சங்களாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த கோயிலடிப் பகுதியிலுள்ள கிணற்றினை துப்பரவு செய்ய முயன்ற சமயம் மேற்படி மண்டையோடு ஒன்று இருப்பதை பொது மக்கள் அவதானித்துள்ளனர். இதுகுறித்து கிராம சேவகர் ஊடாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதன் பின்னர் நேற்று மதியம் குறித்த கிணற்றிலிருந்து மண்டை ஓட்டை மீட்க முயன்ற சமயம் இன்னொரு மண்டை யோடும் மனித எச்சங்களும் கிணற்றுக்குள் இருப்பது கண்டு [illegible] அதன்பின்னர் இரண்டு

பார்க்க பக்கம் 4

## திருநெல்வேலியில் வாள்வெட்டு குடும்பஸ்தர் துடிதுடித்துச் சாவு

### நேற்று மாலை கொடூரம்



யாழ்ப்பாணம், செப்.10

வாள்களுடன் ஆட்டோக்களில் வந்த நபர்கள் இளம்குடும்பஸ்தர் ஒருவரைச் சினிமாப் படப் பாணி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தல் முடிவுகள்

**அநுராதபுரம் மாவட்ட மதவாச்சி தேர்தல் தொகுதிகட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 27288
ஐக்கிய தேசியக் கட்சி - 11856
மக்கள் விடுதலை முன்னணி - 1661

**அநுராதபுரம் மாவட்டம் - ஹொரவப்பொத்தான தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 27911
ஐக்கிய தேசியக் கட்சி - 14167
மக்கள் விடுதலை முன்னணி - 1294

**அநுராதபுரம் மாவட்டம் - அநுராதபுரம் கிழக்கு தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 31099
ஐக்கிய தேசியக் கட்சி - 18726
மக்தள் விடுதலை முன்னணி - 2759

**அநுராதபுரம் மாவட்டம் - அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 31520
ஐக்கிய தேசியக் கட்சி - 19624
மக்கள் விடுதலை முன்னணி - 1429

**அநுராதபுரம் மாவட்டம் - கலாவெவ தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 43408
ஐக்கிய தேசியக் கட்சி - 25372
மக்கள் விடுதலை முன்னணி - 1913

**அநுராதபுரம் மாவட்டம் - மிஹிந்தல தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 22923
ஐக்கிய தேசியக் கட்சி - 10936
மக்கள் விடுதலை முன்னணி - 853

**அநுராதபுரம் மாவட்டம் - கெக்கிராவ தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 29848
ஐக்கிய தேசியக் கட்சி - 15457
மக்கள் விடுதலை முன்னணி - 751

**அநுராதபுரம் மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 234387 (13 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி -126184 (7 ஆசனங்கள்)
மக்கள் விடுதலை முன்னணி - 11684 (1 ஆசனம்)

**பொலன்னறுவை மாவட்டம் - மின்னேரியா தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 25770
ஐக்கிய தேசியக் கட்சி - 14138
மக்கள் விடுதலை முன்னணி - 1847

**பொலன்னறுவை மாவட்டம் - மெதிரிகிரிய தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 25641
ஐக்கிய தேசியக் கட்சி - 19090
மக்கள் விடுதலை முன்னணி - 863

**பொலன்னறுவை மாவட்டம் - பொலன்னறுவை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 48222
ஐக்கிய தேசியக் கட்சி - 33880
மக்கள் விடுதலை முன்னணி - 1418

**பொலன்னறுவை மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 104165 (6 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி - 69943 (4 ஆசனங்கள்)

**இரத்தினபுரி மாவட்டம் - எஹெலியகொட தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 31996
ஐக்கிய தேசியக் கட்சி - 20400

**இரத்தினபுரி மாவட்டம் - இரத்தினபுரி தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 40478
ஐக்கிய தேசியக் கட்சி - 22416

**இரத்தினபுரி மாவட்டம் - பெல்மதுளை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 27335
ஐக்கிய தேசியக் கட்சி - 14703

**இரத்தினபுரி மாவட்டம் - பலாங்கொடை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 39286
ஐக்கிய தேசியக் கட்சி - 15993

**இரத்தினபுரி மாவட்டம் - இறக்குவானை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 31775
ஐக்கிய தேசியக் கட்சி - 22520

**இரத்தினபுரி மாவட்டம் - நிவித்திகல தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 32527
ஐக்கிய தேசியக் கட்சி - 16388

**இரத்தினபுரி மாவட்டம் - கலவான தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 21978
ஐக்கிய தேசியக் கட்சி - 1446

**இரத்தினபுரி மாவட்டம் - கொலன்ன தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 43056
ஐக்கிய தேசியக் கட்சி - 26708
மக்கள் விடுதலை முன்னணி - 2815

**இரத்தினபுரி மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு -274980 (15 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி - 156440 (8 ஆசனங்கள்)
வேறு கட்சிகள் - 17014 (1ஆசனங்கள்)

**கேகாலை மாவட்டம் - தெடிகம தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 28888
ஐக்கிய தேசியக் கட்சி - 17484
மக்கள் விடுதலை முன்னணி - 875

**கேகாலை மாவட்டம் - கலிகமுவ தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 22401
ஐக்கிய தேசியக் கட்சி - 12903
மக்கள் விடுதலை முன்னணி - 553

**கேகாலை மாவட்டம் - கேகாலை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 25536
ஐக்கிய தேசியக் கட்சி - 10807

**கேகாலை மாவட்டம் - ரம்புக்கனை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 22836
ஐக்கிய தேசியக் கட்சி - 10980
மக்கள் விடு்தலை முன்னணி - 638

**கேகாலை மாவட்டம் - மாவனல்ல தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 26084
ஐக்கிய தேசியக் கட்சி - 19940
மக்கள் விடுதலை முன்னணி - 534

**கேகாலை மாவட்டம் - அரநாயக்க தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 19506
ஐக்கிய தேசியக் கட்சி - 9672
மக்கள் விடுதலை முன்னணி - 212

**கேகாலை மாவட்டம் எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 21927
ஐக்கிய தேசியக் கட்சி - 14310

**கேகாலை மாவட்டம் - ருவன்வெல்ல தேர்தல் தொகுதி**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 19116
ஐக்கிய தேசியக் கட்சி - 15562

**கேகாலை மாவட்டம் - தெரணியகல தேர்தல் தொகுதி**
**கட்சிகள் பெற்ற வாக்குகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 17707
ஐக்கிய தேசியக் கட்சி - 14294


**கேகாலை மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 213734 (11 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி - 130417 (6 ஆசனங்கள்)
வேறு கட்சிகள் - 3971 (1 ஆசனம்)

# கூட்டமைப்பின் சார்பில் வென்றோர்



இரா.துரைரெத்தினம் | ஞா.கிருஷ்ணபிள்ளை | மா.நடராசா | கோவிந்தன் கருணாகரம் | பிரசன்னா இந்திரகுமார் | கி. துரைராசசிங்கம்



த.கலையரசன் | அ.தமிழ்நேசன் | சி.தண்டாயுதபாணி | கு.நாகேஸ்வரன் | ஜே.ஜெனார்த்தனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

## மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் தொகுதிவாரியான முடிவுகள்

மட்டக்களப்பு மாவட்டம் - மட்டக்களப்பு தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 44863
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு - 31194
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 13964

மட்டக்களப்பு மாவட்டம் - பட்டிருப்பு தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 34705
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 8603
ஐக்கிய தேசியக் கட்சி - 331
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 72

மட்டக்களப்பு மாவட்டம் - கல்குடா தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 22965
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 21876
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 8604
ஐக்கிய தேசியக் கட்சி - 1014

மட்டக்களப்பு மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள்
மற்றும் ஆசனங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 104682 (6 ஆசனங்கள்)
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 64190 (4 ஆசனங்கள்)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 23083 (1 ஆசனம்)

அம்பாறை மாவட்டம் - கல்முனை தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 22884
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 11702
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 5990
ஐக்கிய தேசியக் கட்சி - 1134

அம்பாறை மாவட்டம் - சம்மாந்துறை தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 25611
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 12610
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 8767
ஐக்கிய தேசியக் கட்சி - 1174

அம்பாறை மாவட்டம் - பொத்துவில் தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 31952
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 23385
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 22179
ஐக்கிய தேசியக் கட்சி - 6684

அம்பாறை மாவட்டம் - அம்பாறை தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு -46409
ஐக்கிய தேசியக் கட்சி -35578
மக்கள் விடுதலை முன்னணி - 1861
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1490

அம்பாறை மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள்
மற்றும் ஆசனங்கள்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 92530 (5 ஆசனங்கள்)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -83658 (4 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி - 48028 (3 ஆசனங்கள்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 44749 (2 ஆசனங்கள்)

திருகோணமலை மாவட்டம் - திருகோணமலை தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 28067
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 8642
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 7949
ஐக்கிய தேசியக் கட்சி - 2979

திருகோணமலை மாவட்டம் - சேருவில தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 17785
ஐக்கிய தேசியக் கட்சி - 7148
தேசிய சுதந்திர முன்னணி - 6450
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 5014
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 2390


திருகோணமலை மாவட்டம் - மூதூர் தேர்தல் தொகுதி
கட்சிகள் பெற்ற வாக்குகள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 14617
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 13011
ஐக்கிய தேசியக் கட்சி - 12318
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 10213


திருகோணமலை மாவட்டம் - கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் மற்றும் ஆசனங்கள்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு -44396 (3 ஆசனங்கள்)
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு - 43324 (3 ஆசனங்கள்)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -26176 (2 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி -24439 (1 ஆசனம்)
தேசிய சுதந்திர முன்னணி -9522 (1 ஆசனம்)


## கிழக்கில் தொகுதிவாரியாக கட்சிகள் பெற்ற வாக்குகள் வீத அடிப்படையில்




## மாவட்ட ரீதியான ஆசனப் பகிர்வும் வாக்குகளும் ஒரே பார்வையில்




# கிழக்கின் ஆட்சியைத் தீர்மானிப்பது மு.கா. தீர்க்கமான முடிவு குறித்து இன்று ஆராயும்

## கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் நம்பிக்கை

அம்பாறை,செப்.10

''கிழக்கு மாகாணசபை ஆட்சியை தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டுமென்ற முஸ்லிம் மக்களின் ஆதங்கத்தை அழமாக உள்வாங்கி அதனடிப்படையில் கட்சி சரியான முடிவெடுக்கும்'' இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகம் எம் .நிஸாம் காரியப்பர் கருத்துத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் கருத்துக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவான வெற்றியைக் கிழக்கு மாகாணத்தில் பெற்றிருக்கின்றது.

இந்த வெற்றிக்காக வாக்களித்த கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்குக் கட்சி சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உண்மையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று முடிந்ததோர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இந்தத் தேர்தல் முடிவுகள் மிகத் தெளிவாக நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் பல உண்மைகளை எடுத்துக்காட்டியுள்ளது.

அரசு 14 ஆசனங்களையும், விமல் வீரவன்ச சார்ந்த கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதினொரு ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 4 ஆசனங்களையும் கொண்டு 15 ஆனங்கள் பெறப்பட்டுள்ளன.

இதில் மற்றொரு விடயம் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பெற்ற மொத்த வாக்குகளில் ஆறாயிரம் வாக்குகளே வித்தியாசம் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் கிழக்கு மாகாணசபை ஆட்சியை யாரிடம் பொறுப்புக்கொடுப்பது என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானத்தில் தங்கியுள்ளது.

இந்த முக்கியத்துவமான முடிவைக் கட்சிக்கும், சமூகத்துக்கும் பலன் அளிக்கக்கூடிய வகையில் எமது கட்சி எடுக்கும். இது குறித்து கட்சி முக்கியத்தர்கள் சேர்ந்து கட்சியின் அதி உயர்பீடக் கூட்டத்தை நடத்தி முஸ்லிம்களின் எதிர்காலம் சம்பந்தமாக காத்திரமாக சிந்தித்து முடிவெடுக்கப்படும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து தான் கிழக்குமாகாணசபை ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் அமைக்க வேண்டுமென அதிகூடிய முஸ்லிம்கள் கோரிநிற்கின்றனரே - எனக் கேட்டபோது

நிச்சயமாக மக்களின் விருப்பங்களை மிகவும் ஆழமாக அவர்களது கருத்துக்களை உள்வாங்கி அதன் அடிப்படையில் கட்சி சரியான முடிவெடுக்குமென நான் எதிர்பார்க்கிறேன்'' -என்றார். (10-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித மண்டையோடுகளும் ஏனைய எலும்புத் துண்டங்களும் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. ஒரு மண்டையோடு ஆணுடையது என்றும் மற்றையது பெண்ணுடையது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இரு மனித எச்சங்களும் ஒரு வருடத்துக்கும் குறைவான காலப் பகுதியிலேயே கிணற்றினுள் போடப்பட்டிருக்க வேண்டும் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் மனித எச்சங்களாக மீட்கப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்று நம்பப்படும் தொப்பி மற்றும் ஆடைகளும் கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





மீட்கப்பட்ட மண்டையோடுகள் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. (ங-4-5)

## சப்ரகமுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளன. ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும், சாந்தினிதேவி தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் இந்தத் தேர்தலில் முக்கூட்டாக இணைந்து போட்டியிட்டன.

இந்தத் தேர்தலில் 13 ஆயிரத்து 821 மேலதிக வாக்குகளைப் பெற்று ஜே.வி.பியைத் தோற்கடித்து இந்த முக்கூட்டுக்கட்சிகள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளன.

சப்ரகமுவ மாகாணத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 4 இல்ட்சத்து 88 ஆயிரத்து 714 வாக்குகளைப் பெற்று 28 ஆசனங்களுடன் முதலாம் இடத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி 2 இலட்சத்து 86 ஆயிரத்து 857 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களுடன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இ.தொ.கா. தலைமையிலான முக்கூட்டுக் கட்சி 25 ஆயிரத்து 985 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைக் கைப்பற்றிய இதே வேளை, ஜே.வி.பி. 12 ஆயிரத்து 164 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. கேகாலையில் பாஸ்கரனும், இரத்தினபுரியில் இராமச்சந்திரனுமே வெற்றி பெற்றவர்களாவர்.

## திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் பலர் முன்னிலையில் துரத்தித் துரத்தி வெட்டிக் கொலை செய்து விட்டு மறைந்தனர். இதன் போது மேலும் இருவர் படுகாயமடைந்தனர். காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

குடாநாட்டை பரபரப்பில் ஆழ்த்திய இந்தச் சம்பவம் திருநெல்வேலி சிவன்அம்மன் கோயிலுக்கு முன்னால் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த நாதன் ஜென்சிலின் (வயது-26) என்பவரே தலையில் கடு மையான வாள் வெட்டுக்கு இலக்காகி, மூளை வெளி யேறி சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் விமலதாசன் (வயது- 27) மற்றும் நல்லூர் தலங்க ாவில் பிள்ளையார் கோயி லடியைச் சேர்ந்த திருச்செல்வம் ஜசிந்தன் (வயது- 27) ஆகிய இருவரும் படுகாய மடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள விமலதாசன் கூறும்போது,

''உயிரிழந்த ஜென்சிலின் ஒரு பிள்ளையின் தந்தை. அவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. நானும் ஜென்சிலினும் மாரியம்மன் வீதியில் உள்ள வயல் கரையோரத்தில் நேற்று மாலை வழமை போன்று உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென அந்த இடத்துக்கு மூன்று ஆட்டோக்களில் வாள்கள் மற்றும் கொட்டன்களுடன் வந்த சிலர் எம்மைப் பலமாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்று விட்டனர்.

எனக்கு தலையில் வாள்வெட்டொன்று விழுந்தது. பின்னர் இடுப்பு,கை,போன்ற பகுதிகளில் கொட்டன்களாலும் தாக்கினர். பலமான வெட்டுக்காயம் காரணமாக என்னால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. அந்த இடத்திலேயே கிடந்தேன். பின்னர் சற்றுநேரத்தில் அயலவர்களும், உறவினர்களும் வந்தே என்னை வைத்தியசாலையில் அனுமதித்தனர். அப்போதுதான் ஜென்சிலின் பேச்சுமூச்சின்றிக் குப்புறக் கிடப்பதையும், அவரது தலையில் ஏற்பட்ட காயத்துக்கூடாக மூளைப்பகுதி வெளியேறி இருந்ததையும் கண்டேன்.'' என்றார்.

''சம்பவம் தொடர்பில் நேற்று இரவு வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனினும் இதுதொடர்பாக தீவிரமான புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்'' என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்னிரவுவரை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தவரின் சடலம் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-4-16)

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனங்களையே கொண்டிருப்பதாக இத்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சம்பந்தன் அரசுக்கு எதிராக தேர்தலில் நின்றோரில் 22 பேர் வெற்றியீட்டியுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இந்த 22 பேர் சார்பிலேயே தாம் இந்தக் கடிதத்தை அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

''முதலமைச்சர் பதவிக்குயாரை அமர்த்துவது என்பது பற்றியும், அறுதிப் பெரும்பான்மைப் பலம் குறித்தும் நாங்கள் உங்களுக்கு விரைவில் அறியத்தருவோம். 15 பேர் என்ற பலத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் உறுதியான ஒருவரைத் தரமுடியாது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.க. ஆகியவற்றின் சார்பில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்'' - என்றும் சம்பந் தன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் ஒன்றைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் அரச திணைக்களப் பணியாளர்கள், பொலிஸ் காண்ஸ்டபிள் ஒருவர், பொதுமக்கள் என 19 பேர் இது வரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலரை மன்னார் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையிலேயே தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் 11 பேர் நேற்றுபொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் என்றும், குறித்த சந்தேக நபர்களிடம் முழுமையான வாக்குமூலத்தை பெற்றுக் கொண்ட பின் அவர்கள் இன்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளதாகவும் மன்னார் பொலி ஸார் தெரிவித்தனர். (ங-12)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தேர்தல் முடிவுகள் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டதுடன், கிழக்கில் ஆட்சியமைப்பது குறித்தும் முக்கிய ஆலோசனைகளை நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதியின் விசேட செய்தியுடன் அரசின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான சஜின் வாஸ் குணவர்தன, அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துள்ளார். கிழக்கில் ஆட்சியமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வரும்பட்சத்தில், அதற்கு ஆதரவைத்தருமாறு ஜனாதிபதி விடுத்திருக்கும் கோரிக்கையை சஜின்வாஸ் இந்தச் சந்திப்பின் போது தெரியப்படுத்தியிருக்கிறார் என அறியமுடிகின்றது.

இதேபோல் அரச தரப்பிலுள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு மாகாண ஆட்சிக்கு ஆதரவளிக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், கிழக்கு மாகாணத்திற்கான சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆலோசனை நடத்திவிட்டே இறுதித் தீர்மானத்தை எடுக்கப்போவதாக அமைச்சர் ஹக்கீம் தம்முடன் பேசியவர்களுக்குப் பதிலளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7 ஆசனங்களே கிடைத்துள்ளன. இதனால் தனித்துக் களமிறங்கிய தற்கான இலக்கை மு.காவால் அடையமுடியாமல் போயுள்ளது எனக் கூறப்படுகின்றது.

மலையகத்தைப் பொறுத்த மட்டில் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் மலையக தமிழ்க் கூட்டமைப்பு 2 ஆசனங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையில் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து 'முக்கட்சி' கூட்டொன்றை அமைத்துப் பொதுச் சின்னத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

சப்ரகமுவ மாகாணத்தில் ஒரு ஆசனத்தைப் பெறுவதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாக இருந்தது. எனினும், வாக்களிப்பில் தோட்டப்புற மக்கள் காட்டிய அதிக அக்கறை காரணமாக 2 தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய பிரதான இரு கட்சிகளின் வாக்கு வங்கிகளில் இந்தத் தடவையும் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மாகாண சபைகளை தாம் கைப்பற்றுவோம் என ஐ.தே.க. சூளுரைத்திருந்தாலும் அதன் கனவை அரச தரப்பு தகர்த்தியுள்ளது.

எனினும், அம்பாறையில் ஐ.தே.க. எதிர்பார்த்ததைவிட அதற்கு அதிகளவான ஆசனங்கள் கிடைத்துள்ளமையானது அக்கட்சிக்கு ஆறு தல் தரும் விடயமாக அமைந்துள்ளது.

### முதலாவது முடிவு

236 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன. முதலாவது தேர்தல் முடிவுகள் அறிவிப்பாக தபால்மூல வாக்களிப்பின் முடிவுகள் நள்ளிரவுக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் அளிக்கப்பட்ட தபால்மூல வாக்குகளின் பெறுபேறுகளே முதன்முதலில் வெளியாகின.

இனி மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் விவரங்களை பார்ப்போம்.

### கிழக்கு மாகாணம்

நடந்து முடிந்த கிழக்கு மகாண சபைத் தேர்தலில் 14 ஆசனங்களைக் கைப்பற்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அந்த மகாணத்தில் முதன்மை வகித்தாலும், தமிழ் மக்களின் ஆதரவு கூட்டமைப்புப் பக்கமே வீசியுள்ளது எனத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. 85 சதவீதமான தமிழ் மக்கள், கிழக்கு வாக்களிப்பில் ஈடுபட்டிருப்பார்களாயின், இன்றைய தேர்தல் முடிவுகள் கூட்டமைப்புக்கே சாதகமாக இருந்திருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

### திருமலை மாவட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம்

திருகோணமலை மாவட்டத்தில் கடும் போட்டிக்கு மத்தியில் அதிகளவு வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இம்முறை சுமார் 11 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு திருகோணமலை மாவட்டத் தேர்தலில் 44 ஆயிரத்து 396 வாக்குகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் 3 ஆசனங்களை வென்றுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு திருமலையில் 43 ஆயிரத்து 324 வாக்குகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் 3 ஆசனங்களை இந்தக் கட்சி கைப்பற்றியுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு 59 ஆயிரத்து 784 வாக்குகள் கிடைத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 26ஆயிரத்து 176 வாக்குகளைப்பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது. இதற்கு 2 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி 24 ஆயிரத்து 439 வாக்குகளைப் பெற்றதன் மூலம் ஓர் ஆசனத்தையும், தேசிய சுதந்திர முன்னணி 9 ஆயிரத்து 522 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

### மட்டு. மாவட்டத்திலும் தமிழ்க் கூட்டமைப்புக்குப் பெரும் வெற்றி

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 4ஆயிரத்து 682 வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.

கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய மூன்று தொகுதிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 682 வாக்குகள் கிடைத்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட சுமார் 38 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம் 6 ஆசனங்களை வென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதனை படைத்துள்ளது.

அதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 64 ஆயிரத்து 190 வாக்குகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்று 4 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 23 ஆயிரத்து 83 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்ததுடன், ஓர் ஆசனத்தை வென்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2 ஆயிரத்து 434 வாக்குகளைப் பெற்றுள்ள போதும் ஆசனம் எதுவும் கிடைக்கவில்லை.

### கிழக்குத் தேர்தலின் இறுதிமுடிவுகள்

கிழக்கு மாகாணத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 2 இலட்சத்து 44 வாக்குகளைப் பெற்று, 2 போனஸ் ஆசனங்களுடன் 14 உறுப்பினர்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 827 வாக்குகளைப் பெற்று 11 உறுப்பினர்களையும், ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 917 வாக்குகளைப் பெற்று மு.கா. 7 உறுப்பினர்களையும், 74 ஆயிரத்து 901 வாக்குகளைப்பெற்று ஐ.தே.க. 4 உறுப்பினர்களையும் பெற்றுள்ளன.

### சப்ரகமுவ மாகாணம்

கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய சப்ரகமுவ மாகாணத்திலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ளது.

இந்த இரு மாவட்டங்களிலும் 4 இலட்சத்து 88 ஆயிரத்து 717 வாக்குகளை மொத்தமாகப் பெற்று 2 போனஸ் ஆசனங்களுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 28 ஆசனங்களையும், 2 இலட்சத்து 86 ஆயிரத்து 857 வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆசனங்களையும், 25 ஆயிரத்து 985 வாக்குகளைப் பெற்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

### வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக 3 இலட்சத்து 38 ஆயிரத்து 552 வாக்குகளைப் பெற்று 2 போனஸ் ஆசனங்களுடன் 21 ஆசனங்களைப் பெற்று அரச தரப்பு வெற்றிவாகை சூடியுள்ளது.

ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 127 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களுடன் வடமத்திய மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

அத்துடன், 16 ஆயிரத்து 66 வாக்குகளைப் பெற்று ஜே.வி.பியும் வடமத்திய மாகாணத்தில் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது.

## கூட்டாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்கள் தமது மன உணர்வுகளை இந்தத் தேர்தலின் மூலம் வெளிக்காட்டியுள்ளனர். இப்போது சாவி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கைகளில் உள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கு நிம்மதியான வாழ்வே இன்றைய தேவை. எல்லா மக்களும் ஒத்துழைத்து வாழக்கூடிய வகையில் நாங்கள் செயற்படுவோம் என்பதைக் குறிப்பிட்டு வைக்க விரும்புகிறோம்.

அரசை எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகளான தமிழ்க் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் என்பன 22 ஆசனங்களுடன் அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் உள்ளன. இந்தப் பின்னணியின் கீழ், கிழக்கு மாகாண சபையில் கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்குத் தாராளமான விட்டுக் கொடுப்புடன் செயற்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே இருக்கிறது - என்றும் குறிப்பிட்டார் சம்பந்தன்.(ங-சி-40-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டர் குழு கல்வீச்சு நடத்தி அடாவடி

# மன்னார் கருசல் மாதா ஆலய ஆராதனைகளை குழப்ப முயற்சி

## மத அனுட்டானம், இன ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயலெனக் கண்டிக்கிறார் செல்வம் எம்.பி.

மன்னார், செப்.10

**மன்னார் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தின் ஆராதனைகளைக் குழப்புவதற்கு காடையர் குழுவொன்று முயற்சி செய்தமை மத அனுட்டானங்களையும், இன ஒற்றுமையையும் சீர் குலைக்கும் செயலெனக் கூறித் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன்.**

அது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனைகள் இடம்பெற்றபோது அப்பகுதிக்கு வந்த காடையர் குழுவொன்று ஆலயத்தினுள் கற்களை வீசித் தாக்குதல்களை நடத்தியதோடு பட்டாசுகளைக் கொளுத்தி ஆராதனைகளைக் குழப்ப முயற்சி செய்துள்ளனர்.

இது மத அனுட்டானங்களையும், இன ஒற்றுமையையும் சீர்குலைக்கும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

அண்மையில் தென் பகுதியில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பல்வேறுபட்ட தமிழ் அமைப்புக்களும் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்ததோடு இந்த நாட்டிலே தமிழ், முஸ்லிம் மக்கள் வாழுகின்ற இடங்களில் தமது வழிபாட்டுத் தலங்களை அமைத்து வழிபட முடியும் எனவும் கூறியிருந்தது.

இந்த நிலையில் மன்னார் கருசல் கிராமத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் மீது அப் பகுதிக்கு வரும் காடையர்கள் தாக்குதல்களை நடத்துவது வழக்கமாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் கருசல் புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வேஸ்பர் ஆராதனைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த காடையர் குழுவொன்று ஆலயத்தை நோக்கிக் கற்களினால் எறிந்து விட்டு பட்டாசுகளையும் கொளுத்தி போட்டுள்ளது.

குறித்த கல் வீச்சில் திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்தந்தை ஒருவரும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மேலும் ஆலயத்துக்கு வெளியில் சென்று பார்க்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் குறித்த காடையர்களினால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளனர்.

இதனால் அன்றைய தினம் இடம் பெற்ற வேஸ்பர் திருவிழா குழப்பமடைந்த நிலையிலே காணப்பட்டது.

மேலும் இந்தப் பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் குறிப்பிட்ட ஒரு காடையர் குழு மேற்கொண்ட குறித்த நடவடிக்கையினால் அக் கிராமத்தில் பெரிய ஒரு இனக்கலவரத்தை தோற்றுவிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

எனவே தொடர்ந்தும் இதுபோன்ற சம்பவம் இடம் பெறாது இருக்க வேண்டுமாயின் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட குழுவினர் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் தமிழ்,முஸ்லிம் மக்களின் ஒற்றுமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். மேலும் இந்தச் சம்பவத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-12)

## வவுனியா ஆஸ்பத்திரியின்
# சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு தனியான மின்சார வசதி

நெளுக்குளம்,செப்.10

இனிவரும் காலங்களில் வவுனியா பொது மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கென தனியான மின்சார வசதி ஏற்படுத்தப்படும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மருத்துவமனையின் அத்தியட்சகர்.

மின்சாரம் தடைப்பட்டதால் கடந்த 5 ஆம் திகதி சத்திரசிகிச்சைகள் தடைப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளமை தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள மின்பிறப்பாக்கி 200 கே.வி மின்சாரத்தையே உற்பத்தி செய்து வருகின்றது.

கடந்த 5 ஆம் திகதி இந்த மின் பிறப்பாக்கியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் மருத்துவமனையின் ஏனைய பகுதிகளுக்கும் வழங்கப்பட்டதால் சத்திரசிகிச்சைப் பிரிவுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டது .

இதனால் சத்திரசிகிச்சைகள் பாதிக்கப்பட்டன .

இனிவரும் காலங்களில் இது போன்று நிகழாத வண்ணம் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கென தனியான மின்சார வசதி ஏற்படுத்தப்படுமென அவர் தெரிவித்தார். (க- 402)

# புனரமைக்கப்படும் வீதிகளால் முல்லைத்தீவு மக்கள் அவதியில்

பல மாதக் கணக்கில் வேலைகள் பூர்த்தியாகாமல் கற்கள் பரவிக் காணப்படுகிறது

முல்லைத்தீவு,செப்.10

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லை மாவட்டத்தில் புனரமைப்புச் செய்வதாகக் கூறி ஒப்பந்தகாரர்கள் ஒழுங்காக இருந்த கிரவல் வீதியை வெட்டி கற்களை பரவி மாதக் கணக்கில் விடுவதால் மக்களின் போக்குவரத்து தடைப்பட்டதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து பண்டாரவன்னிக் கிராமம் ஊடாக முல்லை வீதியைச் சென்றடையும் வீதிக்குக் கற்களைப் பறித்துச் சிறிது காலம் குவியலாக இருந்து தடையாக இருந்த நிலையில் தற்போது அவை பரவப்பட்டு மாதக்கணக்காகின்றது.

இதனால் மக்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இவ்வீதியூடாக முல்லைத்தீவுக்குச் செல்வோர் 4 கிலோ மீற்றர் தூரம் வரை சுற்றியே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. இதேபோன்று சின்னச்சாளம்பன் வீதியும் காணப்படுகின்றது. வேலைகளைப் பொறுப்பேற்கும் ஒப்பந்த காரர்கள் மக்களுக்கு இடையூறான செயற்பாடுகளில் ஈடுபடுவதையே காணமுடிவதாக இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொதுவாகவே வீதி வேலைகள், அரச அலுவலகங்களுக்கான கட்டட வேலைகள், வீட்டுத்திட்டங்கள் என்பனவற்றைப் பொறுப்பேற்கும் ஒப்பந்தகாரர்கள் ஏனோ தானோவென்ற ரீதியில் செயற்படுவதையே இங்கு காணமுடிகின்றது. (க-500)

### ஆயுதங்கள் மீட்பு

வவுனியா,செப்.10

வவுனியா கனகராயன் குளம் பகுதியை அண்டிய பகுதியில் விசேட அதிரடிப் படையினர் ஒரு தொகுதி ஆயுதங்களை மீட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-56 ரக துப்பாக்கி 1, அதன் ரவைகள்9, மோட்டார் ஆயுதங்கள் 6, மோட்டார் குண்டுகள் 3, என்பன கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-4)



கிளிநொச்சியின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் வான் பகுதியில் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-18)

### புரட்சிக் கவிஞனுக்கு வவுனியாவில் விழா

வேப்பங்குளம்,செப்.10

வவுனியாவில் பாரதி விழா சிறப்புடன் இடம்பெறவுள்ளது. வவுனியா கலை, இலக்கிய, நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த விழா நாளை செவ்வாய்க்கிழமை குருமண்காட்டுச் சந்தியிலுள்ள பாரதியார் சிலைக்கு அருகே இடம்பெறவுள்ளது.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இந்த விழாவின்போது முதலில் பாரதியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து பாரதி நினைவுச் சொற்பொழிவுகள், கவியரங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

(க-421)

## டெங்கு நுளம்பை பெருக்குவோர் மீது வவுனியாவில் நடவடிக்கை

வவுனியா,செப்.10

வவுனியாவில் டெங்கு நுளம்புகள் பெருகக் காரணமாக இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் வைத்திய அதிகாரிகள் தொடர்ந்து கடும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

வவுனியா நகரின் மத்திய பகுதியில் பால்சபை, நகரசபை விடுதி, நகரசபை மைதானம், நகரசபைப் பூங்கா, கலாசார மண்டபம், நகரசபை விடுதிகள், வர்த்தக நிலையங்கள் எனப் பல இடங்கள் டெங்கு நோயை உண்டு பண்ணும் நுளம்புகள் பெருகும் இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன என்று வவுனியா பொதுச் சுகாதார வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இத்தகைய நுளம்பு பெருகக் காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வவுனியா பஸ் நிலையம், வவுனியா பூங்கா, நகரசபை விடுதிகள், நகரசபை மைதானம், பால்சபை வவுனியா உள்வட்ட வீதி, வெளிவட்ட வீதி ஆகிய பகுதிகளில் புகை அடிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் வவுனியா பொதுச் சுகாதாரப் பிரிவினர் பொது மக்கள் உதவியைத் தினமும் நாடிவருகின்றனர்.

இந்தப் பகுதியில் டெங்கு நோயாளர்கள் பலர் இனங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

### சமளந்துளாய் விநாயகர் உற்சவம்

முல்லைத்தீவு,செப்.10

சமளந்துளாய் விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முல்லை. மாவட்டத்தில் பண்டாரவன்னியனின் பரம்பரை ஊரான கற்சிலைமடுக் கிராமத்தில் விவசாயத்துக்கான காவலனாகக் காட்சி கொடுத்தருளிக் கொண்டிருக்கும் ஸ்ரீசமளந்துளாய் விநாயகர் ஆலய உற்சவம் 10 நாள்கள் இடம் பெறும்.

26 ஆம் திகதி அன்று வேட்டைத் திருவிழாவும், 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-500)

# வறட்சியால் உணவின்றி கால்நடைகள் இறக்கவில்லை

## வவுனியா கால்நடை மருத்துவர் கூறுகிறார்

வவுனியா,செப்.10

வறட்சியால் உணவின்றி எந்தவொரு கால்நடையும் இறந்ததாக வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லையென கால்நடை மருத்துவர் கே.தபோதினி தெரிவித்துள்ளார்.

கால்நடைகளைப் பெருக்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். தற்சமயம் நோய்த் தடுப்பு மருந்துகளைக் கால்நடைகளுக்கு ஏற்றி வருகின்றோம். பேராதனையில் இருந்து கொல்லைப்புறத்தில் வளர்ப்பதற்கான கோழிகளை இறக்குமதி செய்துள்ளோம். முட்டைகளில் இருந்து குஞ்சுகளைப் பொரிக்க வைத்து மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகித்து வருகின்றோம்.

மீள்குடியமர்ந்த மக்களுக்கு இந்தக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 7 ஆயிரத்து 500 கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளோம். ஒரு கோழிக்குஞ்சு 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மன்னார்ப் பகுதியிலும் உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு பெருமளவான கோழிக்குஞ்சுகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் மன்னார் பகுதிக்குத் தற்போது கோழிக்குஞ்சுகள் விநியோகிப்பதை நிறுத்தியுள்ளோம். அடுத்த மாதம் முதல் கோழிக்குஞ்சு விநியோகத்தை முற்றாக நிறுத்தவுள்ளோம்- என்றும் அவர் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

**குருக்கள், கணக்குப்பிள்ளை தேவை**
**வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்**

மேற்படி ஆலயத்திற்கு குருக்கள் ஒருவரும், கணக்குப்பிள்ளை ஒருவரும் தேவை.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை தங்கள் சுயவிவரத்துடன் 20.09.2012 க்கு முன் தலைவர் / செயலாளர் என முகவரியிடப்பட்டு ஆலய முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**குருக்கள்:-** குருக்கள் பட்டம் பெற்றவராகவும், ஆலயத்தில் தங்கி இருக்கக்கூடிய வராகவும் இருத்தல் வேண்டும். (ஆலயத்தில் வீடு வசதி உண்டு)

**கணக்குப்பிள்ளை:-** 35 வயதிற்கு மேற்பட்டவராகவும், ஓரளவு படித்தவராகவும், வேலணையில் நிரந்தரமாக குடியிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

நா.பாலச்சந்திரன் தலைவர் — க.மு.வரதராஜா செயலாளர்

(22743)(3)

## பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகள்

தொழில் வாய்ப்பற்ற மற்றும் தொழில் தேடும் பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகள் நவாலி தெற்கு ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தில் நடைபெற்று வருகின்றன.

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட தொழில் வாய்ப்பற்ற பெண்களின் வாழ்வா தார தொழில் மேம்பாடு கருதியே மேற்படி துரித பயிற்சித் திட்டம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இதில் அழகுக் கலை, மெழுகுதிரி தயாரித்தல், தையல் பயிற்சி என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக வலி.தென்மேற்கு பிரதேச பெண்களுக்கான அழுகுக் கலைப் பயிற்சி ஒறிபிளேம் நிறுவன அனு சரணையில் இடம் பெறுகின்றது.

அடுத்த மாத முற்பகுதியில் தையல் பயிற்சி வகுப்பு இடம்பெறும் என நிறுவனத் தலைவர் செ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பயிற்சிகளை பெறவிரும்பும் பெண்கள் ஹேமலதா நிறுவன பயிற்சி ஒருங் கிணைப்பாளர் திருமதி கனகசிங்கம் இந்திராணியுடன்தொடர்பு கொள்ளுமாறு நிறு வனத் தலைவர் கேட்டுள்ளார். (16-41)

## செயலமர்வு

நூலகம் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் பனையோலை ஆவணப்படுத்தல் செயலமர்வு நேற்று ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை தமிழ் பேசும் சமூகங்களின் ஆவணப்படுத்தலின் அவசியம் பற்றி யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர் கு.குருபரனும், இலங்கை தமிழ் பேசும் சமூகங்களின் ஆவணப்படுத்தல் சார்ந்த எமது இன்றைய நிலை என்ற தலைப்பில் முனைவர் ஜெ.அரங்கராஜும் சர்வதேச நியமனங்களுடனான உலக நாடுகளின் ஆவணப்படுத்தல் எனும் தலைப்பில் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட 2 ஆம் வருட மாணவன் சி.சேரனும் புதிய தொழில் நுட்பங்களினூடான பல்வேறு பரிமாண ங்களினூடாக ஆவ ணப்படுத்தல் எனும் தலைப்பில் மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல்பீடத்தின் 2 ஆம் வருட மாணவன் க.சுரேஸ் குமாரனும் உரை நிகழ்த்தினர். (16-13)

**வீடு தேவை**

மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைதியான சூழலில் சிறிய குடும்பத்திற்கு வீடு ஒன்று தேவை.

(22748)(3) தொடர்பு: 0775006769

**PERSONAL CLASSES**
**விஞ்ஞானம்**

- தரம் 6,7,8,9,10,11
- Past paper class O/L

உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0754168928

(22738)(3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் மண்ணில்
18 ★ 05 ★ 1981

தெய்வமாய் விண்ணில்
10 ★ 09 ★ 2010

**அமரர் இராசரத்தினம் செந்தில்பிரகாஸ்**

ஈராண்டுகள் சென்றதப்பா நீங்கள்
எம்மை விட்டு ஆனாலும் நீங்காது எம் பாசம்
மாறாது எம் துயரம் எம்மை விட்டு நெடுந்தூரம்
சென்றதேனோ இன்று பிரகாஷ் என்றுரைக்க
அவனியில் நீ இல்லை ஆனாலும் உந்தன்
வசந்த நினைவுகள் எம்முடன் நீடித்துவாழும்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (22739)(6..8) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி சிவசுப்பிரமணியம்



காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவசுப்பிரமணியம் (செட்டி மணியம்) நேற்று (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னாச்சிப்பிள்ளை (தபால் திணைக்களம் மலேசியா), தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- அன்னம்மா (ஆசிரியர், வைத்தியர்) தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாலசௌந் தரியின் அன்புக் கணவரும், அருட்குமரன் (லண்டன்), அருட்செல்வி (ஆசிரியை வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அருட்சோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி (லண்டன்), யோகேஸ்வரன் (மொபிற்றல் டீலேஸ், யாழ்ப்பாணம்), கிருஸ்ணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சந்தோஷ், சருஷ்ன், மயூரி (லண்டன்), கிசால்வன், தேசிகன், சுஜீவன், கார்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரனும், ஞானம்பிகை, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விஸ்வேஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம்) மகேஸ்வரி மற்றும் அம்பிகை பாகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2012) செவ்வாய் காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பயிரிக்கூடல்,
காரைநகர். (22745)(3)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### காசிலிங்கம் கதிர்வேல்



கொட்டடியைப்பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிலிங்கம் கதிர்வேல் நேற்று (09.09.2012) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 12.15 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - அன்னலஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அருமை மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், சசிதரன் (கணக்காளர், லண்டன்), விஜிதரன் (மெய்வல்லுனர் பயிற்றுனர், கச்சேரி- வவுனியா), ஜெகதரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமலதா (நிர்வாக உத்தியோகத்தர், லண்டன்), சிவகௌரி (ஆசிரியை,கிளி/கோயில் வயல் அ.த.க. பாடசாலை), மனோநிதி (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும், தருணின் பாசமிகு பேரனும், தையல்நாயகி (திருகோணமலை), அருள்வேல் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்திகேசு, புவனேஸ்வரி (லண்டன்), மயில்வாகனம் (கனடா), மகாலிங்கம் (வவுனியா), லோகநாதன் (ஒப்புநோக்குநர், வலம்புரி), காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், கணேசலிங்கம் (செம்பருத்தி, மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லில்லிதிரேஸ் (கனடா), தனபாக்கியலஷ்மி (வவுனியா), சிவமலர், கௌரி (ஆசிரியை, யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை, 11.09.2012, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

67/21 பிஸ்கால் வீதி,
ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (22740)(3.6.7)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### குருசுமுத்து நேசராசா

(சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக முன்னாள் தலைவர்)



நவாலி சென்.பீற்றர்ஸ்வீதியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து நேசராசா நேற்று முன்தினம் (08.09.2012) சனிக்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான குருசுமுத்து மரியாசி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகனும், ஏஞ்சலாவின் அன்புக் கணவரும், றஜீன், ஜனா ஆகியோரின் அன்புத் தந்தையும், மரீனா, பிறிக்கிற் ஆகியோரின் மாமனும், றஜீனா, மெலானி, இலான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி சென்.பீற்றர்ஸ் வீதி,
மானிப்பாய். (22741)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்ல தருணம் இது; நழுவ விடலாமோ?!

நாட்டின் ஏனைய மாகாணங்களில் மட்டுமன்றி, கிழக்கு மாகாணத்திலும் தனக்கு மக்கள் ஆதரவு உண்டு என்பதனைக் காட்ட வேண்டும் என்ற அரசாங்கத்தின் விருப்பம் நேற்றைய தேர்தலில் நிறைவேறியுள்ளது; நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் பூகோள காலக் கூட்டத்தொடருக்கு முன்னதாக, தனக்குச் சார்பான சில கூடுதல் புள்ளிகளை (கடு தண் ணீணிடிணஞண்ஜ) தன்வசப்படுத்த வேண்டும் என்று அரசு போட்ட திட்டத்தில் ஒரு பகுதி அதற்குக் கிட்டியுள்ளது என்று கூடச் சொல்லலாம்.

கிழக்கு மாகாண சபையின் எல்லைக்குள் அடங்கும் மூன்று மாவட்டங்களிலும் திருகோணமலை (28% ) மட்டக்களப்பு (28%) அம்பாறை (34%) என்ற வகையில் வாக்குகளைப் பெற்றுள்ளதால் அச்சபையின் பெரும்பான்மை இடங்கள் அரசிடமே சென்றுள்ளன. அதாவது மொத்தத்தில் 2,00,044 வாக்குகளைப் பெற்று முதலாவது பெரும்பான்மை இடங்களைத் தன்வசப்படுத்தி உள்ளது.

இதேவேளை, வரிசையில் இரண்டாவதாக 1,93,827, வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சியும், 1,32,917 வாக்குகளைப் பெற்று மூன்றாவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தமக்குள்ள அமோக மக்கள் ஆதரவை வெளிப்படுத்தி உள்ளன.

தேர்தல் பெறுபேறு - மக்கள் தீர்ப்பு - அமைந்துள்ள வாய்ப்பாட்டின் பிரகாரம், அரசாங்கத் தரப்புக்கு கிடைத்த மக்களின் வாக்குகளைவிட தமிழரசுக் கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் கிடைத்த மொத்த (கூட்டு) வாக்குகள் அதிகம் என்பது தேர்தல் எண்கணிதம்.

அதாவது அரசாங்கத் தரப்புக்கு மொத்தம் 2,00,044 வாக்குகளே கிடைத்திருக்க, தமிழரசுக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் மொத்தம் 3,25,744 வாக்குகள் கிடைத்துள்ளன. அரசாங்கத்தை ஆதரித்த மக்களைவிட, தமிழ், முஸ்லிம் கட்சிகளை ஆதரித்து வாக்களித்த மக்களின் எண்ணிக்கை 1,25,700 பேர் அதிகம் என்பதனை வாக்களிப்பு எண்கணிதம் வீதம் எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பு அரசுகளின் திட்டமிட்ட சிங்கள மக்களுக்கான குடியேற்றங்களின் விளைவுகளால் போலன்றி, தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக கிழக்கின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருபவர்கள். அதனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்தால் - அமைப்பதால் - இரண்டு சிறுபான்மை இனங்களினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் தத்தமது மக்களின் - வாக்காளர்களின் நலன்களையும் உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கு இலகுவில் வழி பிறக்கும் - வழி திறக்கப்படும்.

தமிழ், முஸ்லிம் தரப்பினர் ஒன்று சேர்ந்து, கிழக்கு மாகாண சபை அரசை அமைத்தால் அதற்கு யாரைத் தலையாரியாக்குவது - தலையாரிப் பதவியை - மாகாண சபையின் முதல் அமைச்சர் பதவியை - யாரிடம் வழங்குவது என்ற பென்னம்பெரிய கேள்வி எழவே செய்யும்.

இரண்டு தரப்பினரும், தத்தமது மக்கள் இதுவரை எவ்வாறு நடத்தப்பட்டார்கள், தமது மக்களின் பல்துறைசார் நலன்கள், உரிமைகள் எவ்வாறு நசுக்கப்பட்டன என்பது குறித்து அட்சர கணிதம் எழுதிப் பார்த்து, தத்தமது இனங்களின் முன்னேற்றம் எந்தெந்த வகைகளில் முடக்கப்பட்டன என்பதனை கேத்திர கணித வாய்ப்பாடுகளாக்கி, அலசி ஆராய்ந்து தமக்கிடையே ஒரு சுமுகமான முடிவை எட்டுவது ஒன்றும் கடினமான வகுப்பறைப் பாடமாக இருக்க மாட்டாது.

இருதரப்புகளும் ஒன்றிணைவதால் பெரும்பான்மையின மக்கள் மீது எந்த வகையிலும் பாரபட்சமோ புறக்கணிப்போ இடம்பெறக் கூடாது. அந்த நிலையைப் பூரணமாகத் தழுவிக் கொண்டால் அரசியல் புலத்தில், வேண்டத் தகாத முட்கள் முளைக்க இடமிராது என்று நம்பலாம்.

மாகாண சபையின் முக்கியமான பதவி முதலமைச்சருடையதாகும். மக்கள் நலன்களையும், மாகாணத்தின் வளர்ச்சியையும் அவரே தலைமையேற்று நடத்த வேண்டும். இரண்டு தரப்புகள் ஒன்று சேர்ந்து செயலாற்றும் போது பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும் நட்புறவுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டால் பிணக்கு மற்றும் பிசகு நிலைகள் உண்டாகா.

மொத்தத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் தரப்பும் தமிழர் தரப்பும் ஈட்டிக்கொண்ட வெற்றிகள், அவர்களை அரசியலில் ஒன்றிணைய வழி செய்ய வேண்டும் என்பதே இருதரப்பு மக்களின் பெரு விருப்பமாக உள்ளதை அறியமுடிகிறது.

அதாவது, தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை பெருவாரியாக வழங்கித் தமிழரசுக் கட்சியைத் தெரிவு செய்தமைக்கு நன்றி செலுத்தும் வகையில் தலைவர்கள் புதிய திசை நோக்கி நடக்க வேண்டியது அவசியமாகிறது.

இரு தரப்பு மக்களினதும் - வாக்காளர்களினதும்- நலன்களைக் கருதி மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை முதலில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரிடம் கையளிப்பதால் எவ்வித நட்டமும் இடம்பெறப்போவதில்லை என்பதே தமிழ் வாக்காளர்களின் விருப்பமாக உள்ளதை மிகத் தெளிவாக அறியமுடிகிறது.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2008ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. சட்டப்பிரகாரம் ஐந்து வருட ஆட்சிக்காலம் முடிவுற்று, அடுத்த வருடம் 2013 மே மாதத்தின் - பின்னரே நடத்தப்பட வேண்டும். ஆனால் மேலே குறிப்பிடப்பட்டது போன்று, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பூகோள கூட்டத் தொடருக்கு முன்னதாக (தெற்கு, மேற்கு மக்களைப் போலவே) கிழக்கு மக்களும் அரசின் செயற்பாடுகளை ஆதரிக்கிறார்கள் என்று அனைத்துலகத்துக்குக் காட்டுவதற்கு இலங்கை அரசு விரும்பியதன் விளைவே நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட தேர்தல். அது குறித்து, இப்பத்தியில் அவ்வப்போது எடுத்தியம்பி உள்ளோம்.

இரண்டு சிறுபான்மை இன மக்களினதும் தலைவர்கள் இணைந்து செயற்பட்டால், அதனால் உண்டாகும் பலம் இரு தரப்புகளுக்கும் இது வரை கிடைக்காத அரசியல், பொருளாதார, மற்றும் அபிவிருத்தித் துறைகள் சார்ந்த விருத்திகளை ஈட்ட வழி செய்யும்.

வேண்டுமானால், இரண்டு சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தலைவர்கள் இருவர், தலா இரண்டரை வருடங்களுக்குப் பதவி வகிக்க இணங்கிக் கொள்வது, இணைப்பில் தேவையற்ற பிணக்குகள் தோன்றாமல் தடுக்க வகை செய்யும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்காளர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில், தலைமைப் பீடங்கள் தமக்குள் புரிந்துணர்வுடனும், புத்திசாலித் தனத்துடனும் செயற்பட்டால் எல்லாம் நல்லதாகவே நகர்ந்து செல்லும்.

நல்ல தருணமடா, இதனை நழுவ விடுவாயோ?- என்று இரண்டு சிறுபான்மை இனங்களினதும், மக்கள் கூட்டங்களின், இசை ஒலி லையில் வந்து விழுகிறது. சிந்தியுங்கள், மக்கள் குரல்களுக்கு செவிசாயுங்கள், தலைவர்களே. இன்றே செய்மின், அதனையும் நன்றே செய்மின்!

# நெல்லியடியில் பறந்த புலிக்கொடி இரு தென்னிலங்கையர் விசாரணை

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.10

நெல்லியடி ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடி காட்டிச் சென்றவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களுக்குரிய தென்பகுதி நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக நெல்லியடியில் கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முகத்தை மறைத்த வண்ணம் இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் தோன்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் புலிக்கொடியை ஏந்தியவாறு பயணித்து முதியவர்ஒருவரையும்இடித்து வீழ்த்தி விட்டுச் சென்றிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுக்காத நிலையில் அந்த மோட்டார் சைக்கிள் இலக்கங்கள் பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றைப்பொலிஸாருக்குவழங்கிய நீதிமன்று அது பற்றி விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதன்படி பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர். புலிக்கொடி காட்டியவர்கள் பயணித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள்களில் ஒன்றின் இலக்கம் ஓட்டோ ஒன்றினுடையது என்பது தெரியவந்துள்ளது.

அந்த இரண்டு இலக்கங்களும் கொழும்பு 15 மற்றும் கொழும்பு ஜாஎல பகுதிகளைச் சேர்ந்தவர்களுடையவை.

அவர்களில் ஒருவர் சிங்களவர். மற்றையவர் முஸ்லிம். மோட்டார் சைக்கிள் இலக்கத்துக்கு உரியவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இருவரும் வாகன இலக்கங்களுக்குரியவர்கள் என்ற அடிப்படையிலேயே தற்போது விசாரணை இடம்பெறுகிறது.

அவை பற்றிய விவரங்கள் அனைத்தும் ஒக்ரோபர் 12 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

# 34 உள்ளூராட்சி சபைகளிலும் 1700 கி.மீற்றர் வீதி திருத்தம்

## திட்டவரைபு இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் 34 உள்ளூராட்சி சபைகளின் ஆயிரத்து 700 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 50 கிலோ மீற்றர் வீதம் 34 உள்ளூராட்சி சபைகளுக்குமாக மொத்தம் ஆயிரத்து 700 கிலோ மீற்றர் வீதி மீள புனரமைக்கப்படவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இதில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 16 உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று 800 கிலோ மீற்றர் வீதிக்கான மதிப்பீடுகள், அதற்கான வரை படங்கள், தொகுப்புகள் என்பன யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த மதிப்பீடுகளின் விவரம் தொகுக்கப்பட்டு கொழும்பு உள்ளூர் ஆளுகை நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்படவுள்ளது. (ம-41)

# கல்வி நிதியத்துக்கு நிதி வழங்கல்

தென்மராட்சி, செப்.10

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் கல்வி அபிவிருத்தி புலமைப் பரிசில் நிதியத்தில் மேலும் ஒரு நிதி நேற்று முன்தினம் இணைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அஞ்சல் ஊழியரான சாவகச்சேரி கோவில்குடியிருப்பைச் சேர்ந்த அமரர் அ.பரமநாதன் நினைவாக அன்னாரின் ஓராண்டு நினைவு தினமான நேற்று முன்தினம் அவரது குடும்பத்தின் சார்பில் லயன் பரமநாதன் குகனேசன் கல்வி வளர்ச்சி புலமைப்பரிசில் நிதியத்திற்கென 50 ஆயிரம் ரூபாவை மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஷிடம் கையளித்தார்.

மன்றத்தின் வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தி புலமைப் பரிசில் நிதியத்திற்கு 20 இற்கு மேற்பட்டோரின் நினைவு நிதியத்திலிருந்து சுமார் 100 மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி நிதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# நன்கொடைநிதி இருவருடங்களாக உள்ளூராட்சி சபைகளுக்கு இல்லை

யாழ்ப்பாணம், செப்.10

கடந்த இரண்டு வருடங்களாக சனசமூக நிலைய நன்கொடை மற்றும் தாய் சேய் நல நன்கொடை நிதி வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு கிடைக்கவில்லை.

சனசமூக நிலையங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக வருடாந்தம் வழங்கப்படும் சனசமூக நிலைய நன்கொடை நிதியை உள்ளூராட்சி ஆணையாளர் வழங்க முன்வரவேண்டும்.

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் முன்னாள் சமாசத் தலைவரான வை.செகரராஜசிங்கம் இவ்வாறு கடிதம் மூலம் கோரியுள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுகளில் 'ஏ' தர சனசமூக நிலையங்களுக்கு 5 ஆயிரமும், 'பி' தர சனசமூக நிலையங்களுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது இந்த நிதியை எதிர்பார்த்து யாழ்.மாவட்டத்தில் 945 சனசமூக நிலையங்கள் உள்ளன - என்று அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-41)

# வேலணையில் முப்பரிமாண கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், செப்.10

முதன் முதலாக வேலணையில் முப்பரிமாணம் தொடர்பான நூலகங்களின் கண்காட்சி நடைபெறவுள்ளது.

முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதனின் வழிகாட்டலில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூன்று பரிமாணங்களை உள்ளடக்கிய இந்தக் கண்காட்சியில் உள்ளூரில் சேகரிக்கப்பட்ட, தயாரிக்கப்பட்ட அற்புதமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இன்று காலை 9 மணி முதல் கண்காட்சியை பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பார்வையிடலாம்.

முப்பரிமாண கண்காட்சியில் சிறுவர் பகுதி, வளர்ந்தோர், வாசிப்புப் பகுதி, தொலைக்காட்சிப் பகுதி என 12 பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன என்று நூலகர் செல்வி.எஸ்.வித்தியா அறிவித்துள்ளார்.

முப்பரிமாண நூலகம் தொடர்பாகவும் சிறப்பு விளக்கம் அளிக்கப்படும் எனவும் நூலகர் கூறினார். (ம-50)

# ரயில் பாதை திருத்தப் பணி 2013 டிசெம்பர் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், செப்.10

பளையில் இருந்து காங்கேசன் துறை வரையிலான ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் அடுத்த வருடம் டிசெம்பரில் நிறைவடையும்.

இந்தப் புனரமைப்பு பணிகளுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ரயில் பாதை புனரமைப்பின் போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

இந்தத் தடைகளுக்கு பிரதேச செயலர்கள் பிரதேச சபைகளுடன் இணைந்து உடன் தீர்வு காண வேண்டும்.

[illegible] பளையில் இருந்து காங்கேசன் துறை வரையிலான புனரமைப்புக்கு ரயில்வே திணைக்கள திட்ட முகாமைத்துவப் பிரிவு துரித அபிவிருத்தியின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2014 இந்தத் திட்டம் முடிவுறுத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதும் 2013 டிசெம்பருடன் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையோரங்களில் உள்ள வாழிடங்கள், சிறு ஆலயங்களை விலக்கி ரயில் பாதை அமைக்க வழிவகுக்க தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், உடுவில், நல்லூர், சாவகச்சேரி பிரதேச செயலர்கள் உடன் முன்வர வேண்டும்-என்று அவர் மேலும் கூறினார் (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் வறட்சியால் உற்பத்தி பாதிப்பு:

# மரக்கறிகளின் விலைகளில் கிடுகிடு உயர்வும் தட்டுப்பாடும்

நெளுக்குளம்,செப்.10

வவுனியாவில் மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாதவாறு திடீரென அதிகரித்துக் காணப்படுவதுடன் தட்டுப்பாடும் நிலவுவதால் பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் வறட்சி காரணமாகத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிப் பயிர்கள் வாடிய நிலையில் இருப்பதைக்காண முடிகின்றது. இதனால் மரக்கறி வகைகளின் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை குளத்து மீன்களைக் குறைந்த விலைக்குப் பெற்றுக் கொண்ட வவுனியா மக்கள் குளங்கள் வற்றி மீன்களும் இறந்ததால் அவற்றைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இங்குள்ள பலர் மன்னாரிலிருந்து எடுத்து வரப்படும் மீனை அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலையிலே உள்ளனர். இதனால் மீனையோ அல்லது மரக்கறியையோ பெற முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர். தம்புள்ளவிலிருந்து எடுத்து வரப்படும் மரக்கறிகளின் விலைகள் சாதாரண மனிதன் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலையிலுள்ளதுடன் சந்தைக்குத் தாமதமாக வருவதால் மக்களுக்குப் பயன் எதையும் விளைவிப்பதாகத் தெரியவில்லை.

இதனால் நுகர்வோர் மாத்திரமன்றி வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

மேலும் மரக்கறிகளுக்கென விலைகள் எதுவும் நிர்ணயிக்கப்படாததால் சில வியாபாரிகள் தமது மனம் போனவாறு விலைகளைக் கூட்டி இவற்றை விற்பனை செய்வதையும் காண முடிகின்றது.

எனவே மரக்கறிகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துத் தமக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு நுகர்வோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-402)

## மின்சாரத்துக்காக காத்திருக்கும் விவேகானந்த நகர் மக்கள்

### பாரபட்சம் காட்டுவது ஏன்?

கிளிநொச்சி விவேகானந்த நகர் கிராமத்துக்கான மின் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் இது தொடர்பாகப் பல தரப்பினரிடமும் தொடர்பு கொண்டும் பயன் எதுவும் இல்லை எனவும் இந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீளக்குடியமர்வு செய்யப்பட்ட விவேகானந்த நகர் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆனால் இந்தக் கிராமத்தைக் கடந்து பல கிராமங்களுக்கு ஏற்கனவே மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் விவேகானந்த நகருக்கான மின்விநியோகம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தமக்கு மின்சாரத்தைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறு மின்சாரசபை உட்பட பல்வேறு தரப்பினரிடமும் மனுக்களைக் கையளித்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நடைபெற்று முடிந்த கரைச்சிப் பிரதேச சபைத் தேர்தலில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் முழுக்க முழுக்கக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததால் இந்தக் கிராமம் பழிவாங்கப்பட்டு வருகின்றதோ என்ற சந்தேகமும் மக்களிடையே எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## குருமண்காட்டுச் சந்தியில் கூடும் இளைஞரால் பெண்களுக்கு இம்சை

### அட்டகாசத்தை அடக்க எவருமில்லையா?

நெடுங்கேணி,செப்.10

வவுனியா குருமண் காட்டுச் சந்திப் பகுதியில் இளைஞர் குழுவொன்றினால் வீதியில் செல்லும் பெண்கள் இம்சைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லும் பெண்களே இவ்வாறு இந்த இளைஞர் குழுவினால் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த இளைஞர்கள் பெண்களுடன் பாலியல் சேஷ்டைகளில் ஈடுபடுவதோடு மோசமான வார்த்தைப் பிரயோகங்களையும் பிரயோகித்து வருகினறனர்.

இதனால் பெண்கள் குறித்த வீதியில் செல்வதை நிறுத்தியுள்ளதாகவும் சிலர் வேலைக்குச் செல்வதற்குப் பின்னடித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பல முறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ள போதிலும் இளைஞர்களின் அட்டகாசம் அடங்கியதாகத் தெரியவில்லை.

தினமும் மதியம், மாலை, இரவு வேளைகளில் குருமண்காட்டுச் சந்தியில் பெருமளவு கூடும் இளைஞர்கள் இத்தகைய இழி செயலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இவர்கள் அளவுக்கு அதிகமாக மதுவை அருந்திவிட்டுப் போதை தலைக்கேறிய நிலையில் இவ்வாறு செயற்படுவதால் சாதாரண பொதுமக்கள் இவர்களிடம் நியாயம் கேட்க முடியாதுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-402)



கிளிநொச்சி - யாழ். குடிதண்ணீர்த் திட்டத்தின் முதற் கட்டமாக வீதி அகலிப்பு இடம்பெறும் இடங்களில் குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. (க-50)

## வசதிகள் இல்லாத நிலையில் சின்னச்சாளம்பன் அ.த.க. பாடசாலை

நெடுங்கேணி,செப்.10

ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் அ.த.க. பாடசாலை பௌதிக வளங்கள், உட்கட்டுமான வசதிகள் எதுவுமின்றி அவல நிலையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் ஆசிரியர் வளம் போதியளவு இருந்தும் கட்டட வசதி, கிணறு, மலசலகூட வசதிகள் என்பன இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலை தாம் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட நாளிலிருந்து கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதாக இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தக் கிராம மக்கள் நாளாந்த கூலி வேலைகளை மேற்கொண்டே தமது வாழ்க்கையைச் சிரமத்துடன் கழித்து வருகின்றனர்.

இதுவரை இந்தப் பாடசாலைக்குரிய வசதிகள் எதுவும் செய்து கொடுக்காமையால் தமது பிள்ளைகளின் கல்வியே பாதிக்கப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

(க-435)

## பெரும் சூழலியல் ஆபத்தை எதிர்கொள்ளும் வன்னேரிக்குளம்

### குஞ்சுக்குளத்தில் 400 ஏக். வயல் உவராகின

அக்கராயன்,செப்.10

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமம் பெரும் சூழலியல் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்னேரிக்குள கிராமத்தின் வடக்குப் பகுதிக் கிராமங்களான குஞ்சுக்குளம், நாச்சங்குடா ஆகியன உவராக மாறியுள்ளன.

குஞ்சுக்குளத்திலுள்ள 400 ஏக்கருக்கும் மேலான வயல் நிலங்களும் உவரடைந்துள்ளன. குஞ்சுக்குளம் அணைக்கட்டு அமைந்திருப்பதன் காரணமாக வன்னேரிக்குளத்தின் மத்திய பகுதிகள் உவரடையாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஆனைவிழுந்தான் கிராமத்தின் மேற்குப் பகுதி உவரடைய ஆரம்பித்துள்ளது. வன்னேரிக்குளத்தின் ஐயனார்புரம் 10 ஆம் ஒழுங்கை ஊடாகவும் ஆனைவிழுந்தான் அம்மன் கோயில் ஊடாகவும் வன்னேரிக்குளத்தின் மையப்பகுதியை நோக்கி உவராபத்து நெருங்கி வரும் அபாய நிலை உருவாகி வருகிறது. வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராமங்கள் உவரடையும் ஆபத்து தொடர்பாக நாடாளுமன்ற

வன்னேரிக்குளத்தின் ஐயனார்புரம் ஊடாகவும் ஆனைவிழுந்தான் அம்மன் கோயில் ஊடாகவும் வன்னேரிக்குளத்தின் மையப் பகுதியை நோக்கி உவராபத்து.

உறுப்பினர்கள், அரச அதிபர், பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் ஆகியோருக்கு மீளக்குடியமர்ந்த மக்கள் முறைப்பாடுகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையென மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆனைவிழுந்தான் மேற்கில் இருந்து குஞ்சுக்குளம் வரையான பகுதிக்கு உவர்த்தடுப்பணையை அமைப்பதன் மூலமாக வன்னேரிக்குளம் மற்றும் ஆனை விழுந்தான் ஆகிய கிராமங்களைப் பாதுகாக்க முடியுமென கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-18)

## அலங்கார உற்சவம்

நெளுக்குளம்,செப்.10

வவுனியா, முதிரைத் தோட்டம் அருள்மிகு தேடி வந்த பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி பத்து நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி விநாயக சதுர்த்தி வழிபாடுகளும், 1008 சங்காபிஷேகத்துடன் 10 ஆம் நாள் திருவிழாச் சிறப்பாக இடம்பெறுமெனவும் உற்சவ கால பிரதமகுரு நந்தாவி முத்து ஜெயந்திநாதக் குருக்கள் தெரிவித்தார்.

(க-402)

## சித்திவிநாயகர் ஆலயத்தில் சிறப்பான பொங்கல் விழா



நெடுங்கேணி,செப்.10

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள சின்னச்சாளம்பன் சித்தி விநாயகர் ஆலயப் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

முத்துஐயன்கட்டு குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயக் குருக்களான லிங்கேஸ்வரன், சின்னச்சாளம்பன் சித்திவிநாயகர் ஆலயப் பூசகர் இந்திரன் ஆகியோர் தலைமையில் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றது.

(க-435)

## வீதி ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகள் செலுத்தினர் தண்டம்

அக்கராயன்,செப்.10

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகள் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டமும் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் வரி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு எதிராகக் கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இதேபோன்று கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஒலி எழுப்பத்தடை விதிக்கப்பட்ட பகுதியான நீதிவான் நீதிமன்றின் முன்பாக ஒலி எழுப்பியமை தொடர்பாகவும் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும் கடந்த ஜூலை மாதம் 07 ஆம் திகதி கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வழியனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவரை முழங்காவில் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அத்துடன் கடந்த ஜூலை மாதம் 10ஆம் திகதி கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வரியனுமதிப் பத்திரமின்றி லொறியொன்றைச் செலுத்தியமை தொடர்பாக ஒருவரை முழங்காவில் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய ஒருவரைக் கடந்தமாதம் 12 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நீதிவான் எம்.ஐ.வகாப்தீனால் இவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம், ஐயாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில் 500 வெட்டுக்குத்து முறைப்பாடுகள்

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் வாள்வெட்டு மற்றும் கத்தியால் கீறி சிறுகாயங்கள் என்று சுமார் 500 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பிறரது தூண்டுதல்களால் சிலர்பணம் பெற்றுக் கொண்டு இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவ்வாறு இதுவரை எந்த முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை என்று யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

தனிப்பட்டவர்களது முரண்பாடுகள் காரணமாக ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினர் மீது நேரடியாக பிரச்சினைகளில் ஈடுபடாது அடியாள்களுக்குப் பணம் கொடுத்து இவ்வாறான தாக்குதல்களை நடத்துகின்றனர். ஆனால் பணம் பெற்றுக் கொண்டு சிலர் வாள்வெட்டுக் காரியங்களில் ஈடுபடுகின்றனர் என்று முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

யாராவது பதிவு செய்வார்களாயின் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் கூறினார். (ம-4)

# வடமராட்சிக்கு ஜனவரிக்கு முன் லக்ஸபான மின்சாரம் கிடைக்கும்

## மின் பொறியியலாளர் தகவல்

வடமராட்சி, செப்.10

வடமராட்சிப் பிரதேசத்துக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் இரு மின் பாதைகள் ஊடாக லக்ஸபான மின்சாரம் கிடைத்து விடும் என்று மின்சார சபைப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

தறபோது சுன்னாகத்திலிருந்து வல்லை ஊடாக வடமராட்சிக்கு மின்சாரம் கிடைத்து வருகின்றது. எதிர்காலத்தில் மருதங்கேணியில் இருந்து வல்லிபுரக் கோயில் ஊடாகவும் சாவகச்சேரி கனகன்புளியடியில் இருந்து கரவெட்டி ஊடாகவும் லக்ஸபான நீர் மின்சாரம் ஜனவரி மாதத்துக்குள் வடமராட்சிக்குள் வந்துவிடும்.

லக்ஸபான மின்சாரம் கிடைத்ததும் வல்லைச் சந்தியிலிருந்து வடமராட்சிக்கு வரும் மின்பாதை உடுப்பிட்டி ஊடாக மாற்றப்படும்.

வல்லைச் சந்தியிலிருந்து - வல்லை உப்பு றோட் சந்தி வரையான மின்பாதையில் நீரேரியில் இருந்து வெளிப்படும் உப்புக் காற்றால் உப்புப் படிவங்கள் கம்ப கேபிள்களில் படிந்து விடுகின்றன.

இதனால் மின்சாரம் தடைப்பட்டு விடுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே வல்லையூடாக மின்பாதை மாற்றப்படுகிறது என்று கன மின் பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

லக்ஸபான மின்சாரம் கிடைத்ததும் வடமராட்சிப் பிரதேசத்துக்கு மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

## அராலி- வேலணை கடற்பாதை ஜெய்க்கா திட்டத்தில் புனரமைப்பு

### திட்ட வரைபுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

அராலி- வேலணை கடற்பாதை ஜப்பான் ஜெய்க்கா திட்டத்தின் ஊடாகப் புனரமைக்கப்படும்.

இதற்கான சகல தரவுகளும் வரைபடங்களும் ஏற்கனவே ஜெய்க்கா நிபுணர் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

அராலி- வேலணை கடற்பாதை புனரமைப்புப் பணி ஏன் தாமதமாகிறது என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார்.

இதன்போதே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் மேற்கண்ட விடயத்தைக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 5 வருடங்களாக இதன் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இதற்கான அனைத்துத் திட்ட வரைபுகளும் ஜெய்க்காவிடம் வழங்கப்பட்டுள்ளன.

நிதி உதவி அளிக்கப்பட்டதும் இந்தப் பெரிய அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று கூறினார்.

இதற்கு அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஜப்பான் ஜெய்க்கா திட்டத்தில் ஒப்படைக்கப்பட்ட கருத்திட்டங்களின் விவரங்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கூறினார். (ம-41)

## மறைந்திருந்து தாக்குதல் இருவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, செப்.10

மறைவான இடம் ஒன்றில் வைத்து தாக்கியதில் குடும்பஸ்தருக்கு முன் வாய்ப் பற்கள் நான்கு பறந்தன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் தவசிகுளத்தில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிரபாகரன் (வயது-32) என்பவர் தாக்குதலில் முன் பற்கள் உடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி தனங்களப்பு பகுதியில் மறைந்திருந்த தாக்கியதில் அதே இடத்தைச் சேர்ந்த விவேகானந்தன் பிரகாஸ் (வயது-33) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)



திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் பதினைந்து பயனாளிகளுக்கு தலா பத்து கோழிக்குஞ்சுகள், கூடு என்பன வழங்கப்பட்டன. பயனாளி ஒருவருக்கு வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி குஞ்சுகளைக் கையளிக்கிறார். (ம-7)

## டெங்கிலிருந்து பாதுகாத்தல் தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம், செப்.10

டெங்கு நுளம்பு மலேரியா போன்றவற்றில் இருந்து பிரதேச மக்களைப் பாதுகாக்கவும் கழிவுப் பொருள்களான பிளாஸ்ரிக் போன்றவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பாகவும் நல்லூர் பிரதேச சபைத்

தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நல்லூர் பிரதேச சபையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நுளம்பு நோய் தடுப்பு பிரிவு அதிகாரி இ.சிவசங்கர் கலந்து கொண்டு டெங்கு, மலேரியா போன்ற நோய்களைத் தடுப்பது தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

டெங்கு தடுப்பு தொடர்பான கண்காட்சி ஒன்றை நடத்தவும் அது தொடர்பாக கருத்துப் படங்களை மாணவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

வாழைநார், பிளாஸ்ரிக் போன்றவற்றால் செய்யப்படும் பொருள்களைக் காட்சிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். (ம-7)

## வீதி விபத்துக்களில் சிக்கி ஐவர் காயம்

தென்மராட்சி, செப்.10

வீதி விபத்துக்களில் சிக்கி ஐந்து பேர் காயமடைந்த வெவ்வேறு சம்பவங்கள் நேற்று முன்தினம் இரவு தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றன.

மட்டுவில் சந்திரபுர பகுதியில் வேகமாக வந்த ஓட்டோ தடம் புரண்டதில் அதில் பயணித்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கனகரத்தினம் சிவரூபன் (வயது-23), அருளம்பலம் நவரூபன் (வயது-23 ஆகியோரும்-

வீதி அகலிப்பு பணிகளுக்காக போடப்பட்டிருந்த கற்களில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் கிட்லர் (வயது-55), அவரது மகளான கிட்லர் ஜெயா (வயது-39), மந்துவில் தவரஞ்சன் (வயது-31) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த ஐவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

# குடாநாட்டில் பாலியல் துஷ்பிரயோகம் ஆறு முறைப்பாடு கடந்த வாரம் பதிவு

## இரு சம்பவங்களில் உறவினர்கள் சம்பந்தம்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக பொலிஸ் நிலையங்களில் கடந்த வாரத்தில் மட்டும் ஆறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோக சம்பவங்களும் காதலால் உண்டான சம்பவங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைக் கூறினார். யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 6 முறைப்பாடுகளும் மாங்குளத்தில் ஒரு முறைப்பாடுமாக ஏழு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதில் 3 முறைப்பாடுகள் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### காதலால் வந்த வினை

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக கடந்த 2 ஆம்திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபரும் சிறுமியும் காதல் கொண்ட நிலையில் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். கடந்த மே 2 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றபோதும் கடந்த 5 ஆம் திகதியே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

### சந்தேகநபர் தலைமறைவு

கடந்த 2 ஆம் திகதி பிரஸ்தாப சிறுமியை புதுக்குடியிருப்புக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்துத் துஷ்பிரயோகம் செய்துவிட்டு சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டார். அங்கு சென்ற மானிப்பாய் பொலிஸார், சிறுமியை மீட்டதோடு சம்பவத்துக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளர்களான கணவன் மனைவி இருவரையும் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற மற்றொரு பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். 16 வயதுப் பெண் தனது சொந்த வீட்டில் தங்கியிருந்த போது அங்கு தங்கியிருந்த ஒன்றுவிட்ட சகோதரனான பதுளையைச் சேர்ந்த 17 வயதுடைய நபரே இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று கடந்த5ஆம்திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் 15 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த ஜனவரி மாதம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இது பற்றி கடந்த 3 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே பிரிவைச் சேர்ந்த 31 வயதான நபரே இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

### மிருகமானார் பெரிய தந்தை


கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மனநலம் குன்றிய 18 வயதுப் பெண் அவரது பெரிய தந்தையாரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 4 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 17 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த வருடம் நவம்பர் 21 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். சிறுமியின் தாயின் இரண்டாவது கணவரே பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கடந்த 5 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகங்கள் நடந்து காலங்கடந்து முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்கள் சிறுமிகள் கருத்தரித்து வைத்தியசாலைக்குச் சென்ற போது பதிவானவை. செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கருக்கலைப்புச் செய்தார் என்று கூறி பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது என்று அவர் மேலும் கூறினார். (ம-4-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் பாய்ந்தது 100 ஆவது ரொக்கெட்



இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, தனது 100 ஆவது ரொக்கெட்டை நேற்று விண்வெளிக்கு அனுப்பியது.

கல்வி, காலநிலை, ஒளிபரப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளுக்காக செயற்கைக்கோள்களை இஸ்ரோ விண்வெளிக்கு அனுப்பி வருகின்றது.

இது வரை 62 செயற்கைக்கோள்களையும் 37 ரொக்கெட்களையும் இஸ்ரோ விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை 9.51 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி- 21 என்ற ரொக்கெட்டை விண்ணுக்கு அனுப்பியது.

விண்வெளித்துறையில் இந்தியாவுக்கு போட்டியாக விளங்கும் பிரான்ஸ் நாட்டின் ஸ்பாட்-6 மற்றும் ஜப்பானின் ப்ரோயிடர்ஸ் என்ற இரண்டு செயற்கைக் கோள்களை இந்த ரொக் கெட் சுமந்து செல்கிறது.

சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வை பிரதமர் மன்மோகன் சிங் நேரில் பார்வையிட்டார்.

# நேற்றைய பேரணியில் 20 ஆயிரம் பேர்; ஆயிரக்கணக்கில் பொலிஸ் குவிப்பு

கூடங்குளம், செப்.10

கூடங்குள அணுமின் நிலையத்தை நோக்கி ஆயிரக்கணக்கான எதிர்ப்பா ளர்கள் கடற்கரை வழியே பேரணியாகச் சென்றனர். இதனால் அங்கு நேற்று பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.




கூடங்குளம் அணுமின் நிலையம் அருகே கடற் கரையில் பல்லாயிரக் கணக்கில் குவிந்திருக்கும் எதிர்ப்பாளர்களிடம் அரசுத் தரப்பில் நடத்தப்பட்ட பேச்சு தோல்வி அடைந்துள்ளது. பொதுமக்கள் கூடியிருக்கும் இடத்தில் ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருப்பதால் பெரும் பதற்றம் நிலவியது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணியை உடனே நிறுத்த வேண்டும் என்பது கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் கருத்து. இதனை வலியுறுத்தி கூடங்குளம் அணு மின் நிலையத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதையடுத்து நேற்றுக் காலை இடிந்தகரை தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை என்பதால் கூடி பிரார்த்தனை செய்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கூடங்குளத்தை நோக்கிச் சென்றனர். இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர். ஆனால் அறிவித்த வீதியில் வராமல் இடிந்தகரையில் இருந்து கடற்கரை வழியாக சென்று கூடங்குளத்தின் பின் பகுதி வழியாக முற்று கையிட பேரணியின் பாதை திடீரென மாற்றப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் தங்களின் பாதுகாப்புப் பணியை மாற்றுவதில் சிரமம் ஏற்பட்டது. அதற்குள் கூடங்குளம் எதிர்ப்பு போராட்டக்காரர்கள் அணு மின் நிலையத்துக்கு மிக அருகில் கடற்கரையில் திரண்டனர்.

தங்களது போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த போராட்டக் குழுவினர்,

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணியை நிறுத்தினால் மட்டுமே இந்த இடத்தை விட்டு நகருவோம் என்று அறிவித்துவிட்டு அசையாமல் நின்றனர். இதனால் நெல்லை மாவட்ட ஆட்சியர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினர். ஆனால் இந்தப் பேச்சு பயனளிக்கவில்லை.

ஏற்கனவே 9 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொலிஸார் கூடங்குளம் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஆயிரக்கணக்கான கிராமத்தினர் முற்றுகையிட்டுப் போராட்டத்தில் குதித்துள்ளதால் அங்கு பெரும் பரபரப்பு நிலை காணப்பட்டது.

# மஹிந்தவுக்கு எதிரானபோராட்டம் தடைகளை மீறித் தொடரும்

### வைகோ சூளுரை

சென்னை, செப்.10

இந்தியாவுக்கு வரும் ராஜபக்ஷவுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டாலும் அதையும் மீறி போராட்டம் நடத்துவோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

ம.தி.மு.க. அரசியல் ஆய்வு மையச் செயலாளர் மு.செந்தில்தீபன் தொகுத்த 'நாடாளுமன்றத்தில் வைகோ' நூல் வெளியீட்டு விழா, சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு வைகோ பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களைக் கொன்று குவித்தவர் ராஜபக்ஷ. சாஞ்சி நிகழ்ச்சியில் பங்கேற்க அவரை வரவேற்றதாகக் கூறிய பா.ஜ.க. தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் பின்னர் இல்லை என்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை சென்றபோது சுஷ்மா மட்டும் ராஜபக்ஷவை ஏன் தனியாகச் சந்தித்தார் என்ற கேள்வி இன்னும் அப்படியே இருக்கிறது.

சாஞ்சிக்கு வரும் ராஜபக்ஷவுக்கு கறுப்புக் கொடி காட்டுவதற்காக சென்னையில் இருந்து பஸ்களில் பயணிக்கிறோம். நாம் நடத்தும் சிலுவைப் போருக்கு ஆதரவு தாருங்கள் என்று மத்தியப் பிரதேச முதல்வருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அவர் ஆதரவு தராமல் எங்கள் போராட்டத்துக்கு தடை விதித்தாலும் அதை மீறிப் போராட்டம் நடத்துவோம் - என்றார்.

# சென்னை உயர் நீதிமன்றத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

### ஜனாதிபதி பிரணாப் பங்கேற்பு



சென்னை உயர் நீதிமன்றத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் தலைவர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தனிம் நடைபெற்ற இந்த விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, மத்திய சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தமிழக ஆளுநர் ரோசய்யா, முதல்வர் ஜெயலலிதா, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இக்பால், உச்ச நீதிமன்ற நீதிபதி அல்டமாஸ் கபீர் மற்றும் ஏராளமான நீதிபதிகள், சட்டத்தரணிகள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும். அகில இந்திய நீதிப்பணிகள் துறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

விழாவில் 150 ஆவது ஆண்டு விழா நினைவு கல்வெட்டை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

# சீன - இலங்கை உறவு இந்தியாவைப் பாதிக்கும்

### விஸ்வ இந்து பரிஷத் தலைவர்

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு இந்தியாவுக்கு அச்சுறுத்தலானது என்று விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் தலைவர் எஸ்.வேதாந்தம் தெரிவித்தார்.

சென்னையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''சீனாவும் - இலங் கையும் நெருங்கிய உறவைப் பேணுகின்றன. குறிப்பாக இராணுவ ரீதியான தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டுள்ளன. இதற்கிடையில் இந்தியா விடமிருந்து காஷ்மீரைக் கையகப்படுத்தியுள்ள பாகிஸ்தானுடனும் மிக நெருங்கிய தொடர்புகளைச் சீனா வைத்துக்கொண்டுள்ளது. இது பிற்காலத்தில் இந்தியாவுக்குப் பெரிய அச்சுறுத்தலாக அமையும்''-என்றார்.

# அரச மருத்துவமனையில் திடீர் தீ 3 பேர் சாவு; 10 பேர் படுகாயம்

ஜார்க்கண்ட் மாநிலம் பொக்காரோ பகுதியில் செயற்பட்டு வந்த தனியார் மருத்துவமனையில் தீ விபத்து ஏற்பட்டதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மருத்துவமனையில் செயற்பட்டு வரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சை பிரிவு குளிரூட்டப்பட்ட அறை என்பதால் அங்கு தீ விறுவெறுவென பரவியிருக்கிறது. இதில், நோயாளிகள் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தனர்.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் தரப்பில் , தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த ஏ.சி.யில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்தில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்கள் அங்கேயே மீண்டும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# போர்க்குற்றவாளி மஹிந்தவை இந்தியாவுக்கு அழைக்காதே!

### டில்லியில் முழக்கம்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் இந்திய நாடாளுமன்ற வளாகத்திலுள்ள காந்தி சிலை அருகே கடந்த வெள்ளிக்கிழமை அரை மணிநேரம் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

இலங்கை ஜனாதிபதி மத்திய பிரதேசத்தில் நடக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்கென 20ஆம் திகதி இந்தியா வருகிறார். அவரது வருகைக்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

'இந்திய அரசே இலங்கை ஜனாதிபதியை இந்தியாவுக்குள் அனுமதிக்காதே', 'தமிழர்களின் உணர்வுகளை காயப்படுத்தாதே', 'போர்க்குற்றவாளி இலங்கை ஜனாதிபதியை இந்தியாவுக்கு அழைக்காதே' போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளைக் கையிலேந்தி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

மீண்டும் 12 மணிக்கு அவை கூடியதும் திருமாவளவன் அதே அட்டையை ஏந்தியவாறு மக்களவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே நின்று, போர்க்குற்றவாளி இலங்கை ஜனாதிபதியை அழைக்காதே! என்று தொடர்ந்து முழக்கங்களை எழுப்பினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் லிங்கமும் இதே கோரிக்கைகளை முன்வைத்து கோஷம் [illegible] ஒத்திவைக்கப்பட்டது.




டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற மேரிகோமிற்கு விருது வழங்கிக் கௌரவித்தார். அருகில் உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா பெற்றெடுத்த பேர்த்தி



சிக்காக்கோவில் செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் தாய் ஒருவர், தனது மகளின் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.

சிக்காக்கோவைச் சேர்ந்தவர் சின்டி ரூட்ஜெல்( வயது 53). அவரது மகள் எமிலி ஜோர்டான்(வயது 29), மருமகன் மைக்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு எமிலி கர்ப்பமானார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரது கர்ப்பப்பையின் வாயில் புற்றுநோய் இருப்பதைக் கண்டறிந்தனர். இதையடுத்து கருவை கலைத்ததுடன் எமிலியின் கருக்குழாய் அகற்றப்பட்டது.

குழந்தைக்காக ஏங்கிய எமிலிக்கு சிக்காக்கோ மருத்துவமனை நம்பிக்கை அளித்தது. செயற்கைக் கருத்தரிப்பு மூலம் எமிலியின் கருமுட்டையை மைக்கின் விந்தணுவுடன் சேர்ந்து அதை எமிலியின் தாய் சின்டியின் கருப்பையில் ஏற்றினர். சின்டி இந்த வாரம் தான் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார். அதற்கு எல்லி என்று பெயர் வைத்துள்ளனர்.

இது குறித்து சின்டி கூறுகையில், எமிலிக்கு குழந்தை பிறக்காது என்பதை கேள்விப்பட்டு மனமுடைந்துவிட்டேன். அதன் பிறகு செயற்கைக் கருத்தரிப்பு மூலம் நான் என் மகளுக்கு எனது பேத்தியைப் பெற்றெடுத்துக் கொடுத்தது மகிழ்ச்சியாக உள்ளது - என்றார். (3)

## ஹெலிகொப்டர் மலையில் மோதி 3 பேர் சாவு

ரஷ்யாவில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹெலிகாப்டர் நேற்று முன்தினம் தகெஸ்தான் குடியரசின் ஒரு மலைப்பகுதி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இது குறித்து ரஷ்ய உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஆலெக் கூறுகையில், பாட்லிக் கிராமம் அருகே ஹெலிகொப்டர் சென்ற போது அங்குள்ள மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

மி-35 என்ற ரக ஹெலிகொப்டரே கடும் பனியால் வழி தவறி விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்தார். (3)



சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் பிரதமர் லீ ஹெய்சன லூங் தலைநகர் பீஜிங்கில் சீனாவில் துணைப் பிரதமர் லீகெசியாங்கை சந்தித்தபோது.

# சிரியாவின் துயரங்களை நேரில் பார்த்த செஞ்.சங்கத் தலைவர்

## பெற்றோரை இழந்த குழந்தைகளின் கதைகளைக் கேட்டு பேரதிர்ச்சி

டமாஸ்கஸ், செப். 10

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய தலைவரான பீட்டர் மாரெர், தனது 3 நாள் சிரியா பயணத்தின் போது அங்குள்ள துயரக் காட்சிகளைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்தார்.

தலைநகரான டமாஸ்கஸின் அருகே உள்ள முதாமியா, காபோன், ஹரஸ்டா போன்ற இடங்களுக்குத் தான் சென்ற போது அங்கு பல பகுதிகளில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

கட்டடங்கள் தரைமட்டமாகி உள்ளன. மக்கள் வாழ்வதற்கான எந்தவித அடிப்படை வசதிகளும் காணப்படவில்லை.

பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகளின் கண்ணீர்க் கதைகள் கேட்போர் மனத்தில் சோகச் சுமையை அழுத்துகின்றன என்றார்.

ஜூலை 1 முதல் புதிய தலைவராக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் பொறுப்பேற்றிருக்கும் மாரெர், கடந்த சில வாரங்களில் மனிதநேய உதவிகளை அதிவேகத்தில் முடுக்கிவிட்டுள்ளார்.

சிரியாவில் மருந்துகளின் இருப்பு குறைந்துவிட்டது. முறையான பயிற்சி பெற்ற தகுதியடைந்த மருத்துவர்கள் இல்லை.

எனவே காயம்பட்டோரும் உயிருக்குப் போராடுவோரும் சரியான மருத்துவ சிகிச்சையின்றித் தவிக்கின்றனர் என்று ஜெனிவாவில் வெள்ளியன்று நடந்த செய்தியாளர் கூட்டத்தில் மாரெர் தெரிவித்தார்.

**அசாத்துடன் சந்திப்பு**

இவர் சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் அசாதைச் சந்தித்துப் பேசியபோது, அசாத், தனது அரசு மேற்கொண்டுள்ள மருத்துவ மற்றும் மனிதநேய உதவிகள் குறித்து விளக்கினார்.

அசாத் மாரெரிடம், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், பாரபட்சமில்லாமல் சுதந்திரமாகச் செயல்படும் வரை சிரியாவில் மருத்துவசேவை செய்ய அனுமதி உண்டு என்றார்.

## பெரும் புயலை சந்திக்கும் நிலையில் உலகப் பொருளாதாரம்

உலகப் பொருளாதாரம் ஒரு மாபெரும் புயலைச் சந்திக்கவுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியின் கோமோ ஏரியின் அருகே உள்ள செர்னோபியோ நகரில் ஆண்டுதோறும் உலகப் பொருளாதார நிபுணர்கள் கூடி விவாதிப்பது வழக்கம்.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது

இதில் பேசிய பெரும்பாலான சர்வதேச நிபுணர்களும், உலகம் ஒரு மாபெரும் பொருளாதாரப் புயலைச் சந்திக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார தேக்கம் தொடரப் போகிறது, அமெரிக்க பொருளாதாரத்தை அந்த நாட்டு அரசியல் போட்டி கீழே தள்ளிவிடப் போகிறது, இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆபிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைய ஆரம்பித்து விட்டது, இத்தோடு ஈரானின் அணு ஆயுத விவகாரத்தால் நிலவும் ஆபத்தான சூழல்.. இவை அனைத்தும் சேர்ந்து உலகை ஒரு புரட்டு புரட்டிபோடப் போகின்றன என்றனர் இந்த மாநாட்டில் பேசிய பல நிபுணர்கள்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அதிகரித்து வரும் கடன் சுமையும் அந்த நாடுகளின் அரசியல் நிலைவரமும் உலகை வாட்டும் முக்கியமான கவலைக்குரிய விடயங்கள் என்று கூறும் நிபுணர்கள், இதனால் யூரோ நாணயத்தின் மதிப்பு அதிவேகமாக சரிந்து வருவதையும் சுட்டிக் காட்டினர்.

இந்த நிலையில் உலகின் பணக்கார நாடுகளின் கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச பொருளாதார வளர்ச்சி சரிய ஆரம்பித்து விட்டது.

அடுத்த சில காலத்துக்கு உலகின் முதல் 7பணக்கார நாடுகளின் வளர்ச்சி விகிதம் வெறும் 0.3 சதவீதமாகத் தான் இருக்கும். இதனால் சர்வதேச அளவில் முதலீடுகளும் வர்த்தகமும் ஸ்தம்பிக்கும். இதன் எதிரொலியாக வேலைவாய்ப்புகளும் குறையும் என்று தெரிவித்துள்ளார். (3)

## வங்கியில் கொள்ளையடிக்க முயன்ற சிறுமி கைதானார்

மொஸ்கோ, செப் 10

ரஷ்யாவில் இஷ்கெவ்ஸ்க் மாகாணத்தில் உள்ள வங்கி ஒன்றில் கொள்ளையடிக்க முயன்ற 14 வயது சிறுமி கைது செய்யப்பட்டாள்.

இஷ்கெவ்ஸ்க் மாகாணம் உரால்ஸ் நகரில் உள்ள பிரபல வங்கி ஒன்றில் இந்தச் சிறுமி வெள்ளைநிற முகமூடி அணிந்து நுழைந்தாள்.

திடீரென அங்கிருந்த பெண் ஊழியரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றாள்.

உடனே அங்கு நின்ற பாதுகாப்பு அதிகாரிகள் அவளைச் சுற்றி வளைத்துப் பிடித்தனர். அப்போது அவள் எனக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வேண்டும் என்று கூச்சலிட்டாள்.

இதன் பின்னர் பொலிஸாரிடம் அந்தச்சிறுமி ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர்கள் நடத்திய விசாரணையில் வீட்டை விட்டு வெளியேறித் தற்கொலை செய்ய பணம் தேவைப்படுகிறது எனவும் அதற்காகவே கொள்ளையடிக்க முயன்றேன் எனவும் தெரிவித்தாள்.

தனது தாயார் விவாகரத்துச் செய்த பின்னர் வேறொருவரைத் திருமணம் செய்து கொண்டதுடன் தன்னை அவர் கொடுமைப் படுத்துவதாகவும் இதன் காரணமாகவே தற்கொலைக்குத் தான் முயல்வதாகவும் அந்தச் சிறுமி கூறினாள்.

தற்போது பொலிஸாரின் பாதுகாவலில் இருக்கும் இந்தச்சிறுமி விசாரணை முடியும் வரை உரால்ஸ் நகரை விட்டு வெளியேற கூடாது என்ற நிபந்தனையுடன் பொலிஸார் அவளை விடுவித்துள்ளனர். (3)

## அடுத்தடுத்து நிலநடுக்கம் சீனாவில் 80 பேர் சாவு

### 7 லட்சம் மக்கள் பாதிப்பு



சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால்சாவடைந்தோரின் எண்ணிக்கை 80ஆக உயர்ந்துள்ளது, 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுனான், குய்சூ மாகாணங்களில் கடந்த வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

லூசிகி நகரில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இதையடுத்து 16 முறை தொடர்ந்து நில அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர்.

கட்டடங்கள் நொறுங்கியதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. 700க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மீட்புப் படையினரால் நிவாரணப் பணிகளை வேகமாக செய்ய முடியவில்லை. இடிபாடுகளில் சிக்கி மேலும் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பல இடங்களில் மின்சாரம், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் 7 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக நொருங்கி நாசமாகியுள்ளன. வீதிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 3வது நாளாக மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. (3)

## பாக். ஹக்கானி இயக்கத்தால் அமெ. பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று அமெரிக்கப் பாதுகாப்பு துறையின் தலைமை அலுவலகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இது பற்றி பென்டகன் ஊடகச் செயலாளர் ஜார்ஜ் லிட்டில் தெரிவித்ததாவது, பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்கப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கா தொடர்ந்து இராணுவ தாக்குதல் நடத்தும். இந்தப் புதிய இயக்கத்தின் தொடர்புகள் மற்றும் தாக்குதல்களைத் தடுக்க உளவு அமைப்புகளின் செயல்பாடுகளைப் பலப்படுத்துவோம்.

அந்த இயக்கத்துக்கு வந்து சேரும் நிதியை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். பாகிஸ்தானிடம் அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ஹக்கானி அமைப்புக்கு எதிரான அரசின் வலுவான நடவடிக்கையால், ஆப்கனிஸ்தானில் நமது இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களையும், அப்பகுதியில் இதுபோன்ற இயக்கங்களின் செயல்பாட்டையும் தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (3)

## வியட்னாமில் நிலச்சரிவு 29 பேர் சாவு

வியட்னாம் நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 29 பேர் பலியானார்கள்.

இதில் யின்-பை என்ற இடத்தில் மட்டும் 17பேர் பரிதாபமாக இறந்தனர். சுரங்கப்பணியில் ஈடுபட இவர்கள் சென்றபோது மண்ணில் புதைந்து உயிரிழந்து விட்டார்கள்.

இருப்பினும் மத்திய பகுதியில் இருக்கும் தேயிலைத் தோட்டங்களும் [illegible] அதிக சேதமின்றி தப்பிவிட்டன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிக்கரகுவாவில் வெடித்தது எரிமலை மக்கள் அலறியடித்து ஓட்டம்



மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான நிக்கரகுவாவில் சான்கிறிஸ்டோபல் என்ற எரிமலை உள்ளது.

அந்த நாட்டிலேயே உயரமான எரிமலையாக கருதப்படும் இது 5,700 மீற்றர் உயரமுள்ளதாகும்.

அடிக்கடி வெடித்து சிதறும் இந்த எரிமலை மீண்டும் தீக்குழம்புகளைக் கக்கத் தொடங்கியுள்ளது. நேற்றுத் திடீரென எரிமலை மீண்டும் வெடித்துச் சிதறியது. முதலில் புகை மட்டும் வந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் கழித்து பயங்கர சத்தத்துடன் எரிமலை வெடித்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பகுதி மக்கள் அலறி அடித்துக்கொண்டு தமது இருப்பிடங்களை கைவிட்டு தலை தெறிக்க ஓடத் தொடங்கினர்.

எரிமலை இன்னும் பெரிய அளவில் வெடித்து சிதறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அந்த பகுதியில் உள்ள 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த மலையையொட்டி தான் கோஸ்ட்டாரிக்கா நாடு உள்ளது. அங்கும் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.(3)

## ஜேர்மனியின் இராணுவச் சீர்திருத்தத்தால் தலைவர்கள் கவலை

ஜேர்மனியில் இனி இராணுவப் பயிற்சி கிடையாது, இராணுவ வீரர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் என்று அரசு தெரிவித்திருப்பது ராணுவத் தலைவர்களுக்கு மிகுந்த கவலையளித்துள்ளது, இந்தச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2017ஆம் ஆண்டில் இராணுவப் பணியாளர்களின் எண்ணிக்கை 170,000 ஆகக் குறைக்கப்படும், என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் தோமஸ் டி மேஜர் தெரிவித்தார்.

மக்களும் இராணுவத்தினரும் இத்திட்டம் வெற்றி பெறாது என 75சதவீதம் பேரும், விரைவில் திரும்பப் பெறப்படும் என 90சதவீதம் பேரும் கூறுகின்றனர். 62 சதவீதம் பேர் வேறு வழியில் இராணுவச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்றனர்.

1700 இராணுவத்தலைவர்களில் 5 சதவீதம் பேர் இந்தச் சீர்திருத்தங்களில் தங்களுக்கு ஆர்வமில்லை என்றனர்.

ஒக்ரோபரின் இறுதியில் நடக்கும் கூட்டத்தில் அடுத்து வரும் மாற்றங்களும் சீர்திருத்தங்களும் குறித்து விரிவாகச் சிந்தித்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

## ஈரான் மீது கட்டுப்பாடுகளை விதிக்க பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி கோரிக்கை

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் மற்ற ஐரோப்பிய நாடுகளையும் ஈரான் மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்குமாறு அவசரப்படுத்தியுள்ளன. ஜேர்மனியின் வெளியுறவுத் துறை அமைச்சர் குய்டோ வெஸ்ட்டெர்வெல் ஈரான் எந்த நல்ல முடிவையும் தெரிவிக்காததால் உடனடி நடவடிக்கை தேவை என்றார்.

இவரதுகருத்திற்கு பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் லாரண்ட் ஃபேபியஸும் பிரிட்டனின் வெளியுறவுத் துறை அமைச்சர் வில்லியம் ஹேக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர். சைப்பிரஸில் நடந்த கூட்டத்திற்குப் பின்பு இந்த மூவரும் ஈரான் மீதான கட்டுப்பாடுகளைக் கடுமையான முறையில் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றனர்.

வெஸ்ட்டெர்வெல், ராய்ட்டருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:-

ஈரான் பேச்சுவார்த்தைக்கு இசைந்துவராததால் அடுத்தகட்ட நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். அந்த நடவடிக்கை அடுத்த ஆண்டுக்கானது அல்ல, அடுத்த வாரங்களுக்கானது என்ற இந்தக் கட்டுப்பாடுகளின் உடனடித்தேவையை வலியுறுத்தினார்.

ஜூலையில் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்கு விதித்த கட்டுப்பாடு, இஸ்லாமிய குடியரசு நாடுகளிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இன்னும் ஐந்து நாள்களில் ஈரான் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றார் ஃபேபியஸ்.

இது இவ்வாறிருக்க கனடா அரசு, தனது நாட்டிலுள்ள ஈரான் தூதரகத்தை மூடிவிட்டு அதிகாரிகளை ஐந்து நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறிவிட்டது. ஈரான், சிரியாவின் அப்பாவி பொதுமக்களைக் கொன்று குவிக்க அதன் இராணுவத்துக்கு உதவுவதாலும் ஐநாவின் அணுசக்தி கண்காணிப்பாளர்களுக்குப் போதிய ஒத்துழைப்புக் கொடுக்க மறுப்பதாலும் ஈரானுக்கென்று ஒரு தூதரகம் தனது நாட்டில் தேவையில்லை என்று கூறிவிட்டது.

தனது நாட்டு மக்கள் ஈரானுக்குப் போவது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்நாடு ஆபத்தானது மற்றும் நட்புணர்வில்லாதது என்று கனடா கருதுகிறது.(3)

## ஐரோப்பாவில் காலநிலை மாற்றத்தால் பனிப்பாறை வெகுவாக உருகுகின்றது

பூமியின் வடகோடியில் உள்ள ஆர்டிக் பிரதேசம் முழுவதும் பனிப்பாறைகளால் ஆனது.

பூமியின் வெப்பநிலை சமீபகாலமாக அதிகரித்து காணப்படுகிறது. ஆனால் குறைந்த பாகை (மைனஸ் டிகிரி )குளிர் இருந்தும், இந்த வருடம் பனிப்பாறைகள் வெகு வேகமாக உருகி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களில் இல்லாத வகையில், கடலில் மிதக்கும் இந்த பனிப்பாறைகள் உருகி மெலிந்து வருவது ஐரோப்பாவின் காலநிலையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

உருகிய பனிப்பாறைகள் ஸ்வல்பார்ட் மற்றும் கிரீன்லாந்து வழியாக ஆர்டிக் பிரதேசத்தை விட்டு வெளியே செல்லும்போது அதை ஆராய உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்த ஒரு புரிந்துணர்வுக்கு நாம் வரவேண்டும் என்று நோர்வே ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் இப்பனிப்பாறைகள் மீது பட்டு மீண்டும் எதிரொளிப்பதால், அவை மீண்டும் மேலே ஆகாயத்திற்கு அனுப்பப்பட்டன.

ஆனால் பனிப்பாறைகள் உருகி இப்பிரதேசத்தை விட்டு விலகிச் செல்வதால், நேரடியாக வெப்பத்தை உறிஞ்சிமேலும் பிரச்சினையை உருவாக்கும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (3)

# மரண அறிவித்தல்



## கந்தையா ஜீவகாருண்யம்

[ தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர், முன்னாள் இணைப்பாளர் - பாண்டியன் குளம் - துணுக்காய் அபிவிருத்தி கழகம் (PTDO) ]

ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல.2, கடைவீதி, மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜீவகாருண்யம் நேற்று முன்தினம் *(08.09.2012)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அமிர்தம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிரோன்மணி (ஆசிரியை - கிளி/ இந்துக் கல்லூரி) தம்பதியரின் மருமகனும், கோமலாம்பிகையின் அன்புக் கணவரும், அரவிந்தன், நவநீதன், லிங்கரூபன், பொன்குமரன், நேசகாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலகவதி, புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயராமச்சந்திரன், சதாசிவம், தற்பராதேவி, கமலராணி, பவளராணி, காலஞ்சென்ற வைகுந்தவாசன் மற்றும் குலசபாநாதன், சச்சிதானந்தன், நிர்மலா, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும், நளினியின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று *(09.09.2012)* ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அணிஞ்சியன் குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(கி/3180) (45.6.7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14 . 11 . 1925

மறைவு 11 . 08 . 2012

இல. 150, நாவலர் றோட், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சிவசிதம்பரம் பரம்தில்லைராஜா

கடந்த 11.08.2012 அன்று இறையடி சேர்ந்த எங்கள் மாமா 31 நாள் ஆனாலும் உங்கள் அன்பு முகம் மனதில் நீங்காது நிலைத்து நின்று அன்புக் கதை பேசுதையா. மாமா தங்கள் கணீரென்ற நாதம் சேர்ந்த குரல் எம் காதில் ஒலிக்கின்றது.

ஈழத்து இசை ரசிகர்களை தங்கள் மறைவுச் செய்தி அதிரச் செய்தது. விண்ணகத்தே வாழ்வதற்காய் விடை பெற்று சென்றின்று 31 நாள் பறந்தோடிச் சென்றதனால் மண்ணகத்தே அவர் நிலையை மனதிற்குள் நிறைத்து நாம் என்றென்றும் அவர் ஆத்ம சாந்திக்காய் என் சார்பிலும் என் சகோதரி சார்பிலும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும் ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகின்றோம்.

13 ஆம் கட்டை,
குமாரசாமிபுரம், விசுவமடு.

**பேரப்பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.**

(சி/3117)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(07)

எந்தக்காரியத்தையும் செய்வதற்கு ஓரளவிற்காவது துணிச்சல் தேவைப்படுகிறது. துணிச்சல் இல்லாமல் செயற்பட்டு வெற்றி காண்பது முடியாத காரியம்.

எனவே தான் 'துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டம் தான்' என்று பெரியவர்கள் சொன்னார்கள்.

அலை கடலையும் சாதாரணமாக எண்ணினால் அது கூட ஆழமற்றதாகி விடுகிறது. எனவே காரியசாதனை புரிய நீங்கள் எண்ணினால் பயத்தை ஒதுக்கி வைத்துவிட்டுத் துணிச்சலை துணையாகக் கொள்ளுங்கள்.

**வெளிச்சத்தைக் கண்டு பயப்படும் பேய்கள்**

பயம் என்கிற ஒன்று தனியாக இல்லை. எண்ணங்களில் ஏற்படும் மாற்றம் ஒரு குறிப்பிட்ட நிலைக்குத் தான் பயம் என்று பெயர் சொல்லி அழைக்கிறோம். பெரும்பாலும் நம்மிடையே சில வகைப் பயங்கள் வாழ்நாள் பூராகவும் நிலைத்து விடுகின்றன. இந்தப் பயங்களின் ஆரம்பம் என்னவென்று பார்த்தால் குழந்தைப் பிராயத்தில் நம்முடைய மனதில்விதைக்கப்பட்ட சில தவறான எண்ணங்களாக இருக்கும். இந்த எண்ணங்கள் பயங்களாக நம்முடைய மனதில் நிலைபெற்று விடுகிற போது, எதிர்பாராத சந்தர்ப்பங்களில்கூட நம்மைத் தாக்கி செயற்பட முடியாமல் செய்து விடுகிறது. இதைப் பெரிய மனோதத்துவ விடயமாக எண்ணிக் குழப்பம் அடைய வேண்டியதில்லை. சிறிய உதாரணத்தின் மூலமாக இதைத் தெளிவு படுத்திவிடலாம்.



இரவு நேரத்தில் தனி வழி சென்று கொண்டிருக்கையில் திடீரென்று இருட்டில் எதையோ ஒன்றை மிதிக்கிறீர்கள். உடனே பயந்து போய் தாண்டிக் குதிக்கிறீர்கள். அந்தப் பொருளை மிதித்ததால் நீங்கள் தாண்டிக் குதிக்கவில்லை. அந்தப் பொருளைப் பற்றி நீங்கள் கொள்ளும் எண்ணமே உங்களைத் தாண்டிக் குதிக்க வைத்திருக்கிறது. மிதித்தது பாம்பு போன்ற விஷ ஜந்துவாக இருக்குமோ என எண்ணிப் பயப்படுகிறீர்கள். அந்த எண்ணமே உங்களை தாண்டிக் குதிக்கவைக்கிறது. உண்மையில் அது விஷ ஜந்துவாய் இல்லாமல் ஒரு கயிறாகக் கூட இருக்கலாம். அல்லது வாழை நாராகவும் இருக்கலாம். அந்தப் பொருள் பற்றி உங்கள் மனதில் ஏற்பட்ட எண்ணம், பயத்தை உண்டாக்க, நீங்கள் அதன் கடியிலிருந்து தப்பவேண்டும் என்கிற தற்காப்பு உணர்ச்சியால் தாண்டிக் குதிக்கிறீர்கள்.

ஆக பயம் என்பது நமது எண்ணத்தின் ஒரு நிலையே தவிர பயம் என்று தனியாக எதுவும் இல்லை.

நல்லது, தீயது, விரும்பத்தக்கது, விரும்பத்தகாதது, அவசரப்படவேண்டியது, அன்பு செலுத்த வேண்டியது போன்ற எண்ணங்கள் பெற்றோர்களாலும், கல்வியாலும், சமூகச் சூழ்நிலைகளாலும் குழந்தை மனதில் உருவாக்கப்பட்டு விடுகின்றன. நிலைத்துவிட்ட இந்த எண்ணங்களே நம்முடைய பல்வேறு நடவடிக்கைகளுக்கும் காரணமாகி. விடுகின்றன.

பேய் இருக்கிறது என்கிற எண்ணத்தை ஒரு குழந்தையின் மனதில் ஏற்படாமல் செய்துவிட்டால் பேயைக் கண்டு அந்தக் குழந்தை ஒரு போதும் பயப்படப்போவதில்லை. காரணம் எண்ணம் வராத பொழுது அதற்குத் தொடர்பான பயமும் வர நியாயமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் என்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கோவை நகரத்தில் சில மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நண்பரிடம் தினசரி சில காரியங்களை முடித்துவிட்டு இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்கு மேல் சைக்கிளில் கோவை நகருக்குத் திரும்பி வருவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தேன். இது ஒரு மாதம் நடந்திருக்கும். ஒரு நாள் நண்பர் ஒருவரிடம் இதுபற்றி நான் பேசிக் கொண்டிருந்த பொழுது "அந்த வழியிலா இரவு நேரத்தில் வருகிறீர்கள்?" என்று கேட்டார். நானும் "ஆம்" என்று பதில் சொன்னேன். உடனே அவர் "வழியில் சுடுகாட்டைத் தாண்டி அல்லவா வருகிறீர்கள். அந்த நேரத்தில் அந்தப் பக்கம் இனி வரவேண்டாம். வந்தால் காற்று சேஷ்டை உங்களை பாதிக்கும்" என்றார்.

மறுநாள் இரவு நான் திரும்பி வந்த போது, சரியாக அவர் சொன்ன இடத்துக்கு வந்தவுடன் சுடுகாடு ஞாபகம் வந்து விட்டது. அந்த இடத்துக்கு வந்தவுடன் அவர் சொன்ன காற்று சேஷ்டை, விஷயம் என் நினைவுக்கு வந்தது. சைக்கிளை வேகமாக மிதித்தேன்.

திடீரென்று பின்னாலிருந்து யாரோ கூப்பிடும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்க்கப் பயந்து போய் சைக்கிளை இன்னும் வேகமாக மிதித்தேன்.

அந்தக் குரல் பின்னால் ஒலித்துக்கொண்டே வந்தது. பயத்தின் மிகுதியால் சைக்கிளை ஓட்ட முடியாமல் நிறுத்தினேன். சார் என்று ஒரு சத்தம். ஓர் உருவம் என் தோளைப் பற்றியது. வியர்க்க விறுவிறுக்கத் திரும்பினேன். அந்த உருவமும் சைக்கிளில் தான் வந்திருந்தது.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# முன்பள்ளி மாணவர்களின் செயற்பாட்டில் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும்

## தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைநகர், செப்.10

முன்பள்ளி மாணவர்களின் செயற்பாட்டில் பெற்றோர்கள் எவ்வளவு அக்கறை காட்டுகின்றார்களோ, அதே அக்கறையை தொடர்ந்தும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் செலுத்தி வந்தால் மாணவர்கள் கல்வியில் உயர் நிலையை அடைவார்கள்.

கல்வியின் வளர்ச்சி பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. பெற்றோர்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் இணைந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. புவனேந்திரன் தெரிவித்தார்.

காரைநகர் ஆரம்பப் பாலர் பாடசாலையின் 4 ஆவது வருடாந்த விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே புவனேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் தே. சத்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்பள்ளிகளில் மாணவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

> இன்று ஆங்கிலமும் கணினியும் அடிப்படைத் தேவைகளாக மாறி வருகின்றன.

இன்று ஆங்கிலமும் கணினியும் அடிப்படைத் தேவைகளாக மாறி வருகின்றன. எனவே மாணவர்களைச் சிறப்பாக பயிற்றுவிக்க வேண்டும்.

காரைநகர் பாடசாலைகளில் தேவையான ஆசிரியர் வளமும் போதியளவு பௌதிக வளமும் காணப்படுகின்றன. எனவே இங்குள்ள பெற்றோர்களும் மாணவர்களும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி உயர்ந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்த காரைநகர் பிரதேசம் இடப்பெயர்வினால் சற்று தளர்வடைந்த போதிலும் தற்போது வீறுநடை போட ஆரம்பித்துள்ளது. இடப்பெயர்வுடன் மீள ஆரம்பிக்கப்படாமல் இருந்த பல பாடசாலைகள் அண்மைக் காலத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வருட ஆரம்பத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதை அடுத்து கல்விக்காக காரைநகரை விட்டு வேளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையை அறிந்து மகிழ்வடைகின்றோம்.

இந்தப் பாடசாலை. மேலும் வளர சந்தர்ப்பம் இருப்பதால் பௌதிக வளங்களை மேம்படுத்த எமது வலயம் அதிக அக்கறையை செலுத்தும். உங்கள் கிராமத்திலேயே நீங்கள் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு முன்மாதிரியாக திகழும் இந்த கல்வி நிறுவனங்களையும் அதனை முன்நின்று செயற்படுத்துபவர்களையும் பாராட்டுகின்றேன் - என்றார்.

(எ-250)



தம்பசிட்டி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவின் போது மூத்த ஊடகவியலாளர் சி.தில்லைநாதன் யாழ். பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (எ)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.10

வலி.வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதேச மட்ட சமாசத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமாசத்தின் தலைவராக எ.சின்னத்தம்பி, உபதலைவராக து.வத்சலா, செயலாளராக சோ.செல்வரத்தினம், பொருளாளராக திருமதி வி.நகுலேஸ்வரி, உபசெயலாளராக சி.இராஜனி மற்றும் பத்துப் பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய சமாசம் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டப கட்டடத்திலேயே இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# தொழில்நுட்ப தகவல்களைப் பெறுவதில் 3 வயதுப் பிள்ளைகளும் ஆர்வமாக உள்ளனர்

## சிவஸ்ரீ சுதானந்த சர்மா தெரிவிப்பு

சங்கானை, செப்.10

மூன்று வயதுப் பிள்ளைகள் தொழில்நுட்ப தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருப்பதை இன்று காணக்கூடியதாக உள்ளது. கைபேசி இயக்குதல், கணினி இயக்குதல் போன்றவற்றை மிகவும் இலகுவாக அறிந்து கொள்கின்றார்கள் என்று சிவஸ்ரீ சுதானந்தா சர்மா தெரிவித்தார்.

சங்கானை 'பட்டர்பிளை இன்டநஷனல் பாடசாலை' சிறார்களின் கலை விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிவஸ்ரீ சுதானந்த சர்மா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஈரமான சிமெந்து போன்றவர்கள் சிறுபிள்ளைகள். எதனையும் தமது மனதில் எடுத்துக்கொண்டால் அவற்றை இறுகப் பற்றிக் கொள்கின்றனர். கல்வி என்பது இன்றைக்கு எமக்கு மிகமிக அவசியமான ஒன்றாகும். எல்லாவற்றையும் இழந்து விட்டோம், ஆனால் கற்கின்ற கல்வியை நாம் ஒரு போதும் இழக்கமாட்டோம்.

இந்தப் பாடசாலையில் மூன்று வயது முதல் ஐந்து வயது வரை சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், கலை ஆர்வத்துக்கும் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் தொண்டாற்றி வருகின்றார்கள். ஒவ்வொரு பிள்ளையும் நன்கு கவனிக்கப்பட்டு, அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட்டு, அவர்களைச் சமூகத்தின் சிறந்த நற்பிரஜைகளாக்குவதற்கு ஆசிரியர்கள் தம்மாலான பங்கைச் செலுத்தி வருகின்றனர்.

இங்கு ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஆங்கிலப் பாட்டுக்கள், ஆங்கிலக் கதைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டு, சிறார்களை மனனம் செய்யச் சொல்கின்றார்கள். ஒரு மூன்று வயதுப்பிள்ளை ஆங்கிலத்தை கற்று வருவதால் இந்தப் பிள்ளையின் ஆங்கில அறிவு எதிர்காலத்தில் மிகச் சிறந்ததாக அமையும். இன்று ஆங்கிலம் பேசுதல், எழுதுதல், கதைத்தல் தகவல் தொடர்பாடலுக்கு அத்தியாவசிய தேவையாக உள்ளது. அந்த ஆங்கில அறிவை இங்கு கற்றுக்கொண்டு, வேறு, கல்லூரிகளில் ஆரம்பப் பிரிவில் சேரும் பிள்ளை மிக இலகுவாகத் தனது மேற்படிப்பை தொடர வாய்ப்பாக அமைகின்றது.

பெற்றோர்களும் பாடசாலையில் பிள்ளை படிக்கின்றது என நினைத்து வாளாதிருக்கக் கூடாது. வீட்டிலும் உங்களால் இயன்றளவு பிள்ளைக்கு கல்வி புகட்ட வேண்டியது உங்கள் கடமையாகும். அவர்களின் ஒவ்வொரு செய்கையையும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். இன்று எமது சமூகத்தின் கலாசார சீரழிவுக்கு பெற்றோரால் பிள்ளைகள் கவனிக்கப்படாமல் இருப்பதும் ஒரு காரணமாகும் - என்றார்.

இந்த நிகழ்வில் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் தி.சிவகுமார் உட்பட பெற்றோர்கள், பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(எ-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021228 0065
தொலைநகல்: 021228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி [illegible]' – மத்திய சந்தையடி, மல்லாவி : 07[illegible]116, 'கோபி எலக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கொண்டாட முடியா வெற்றி

கடந்த ஒரு மாதகாலமாக களைகட்டியிருந்த மாகாண சபைத் தேர்தல் திருவிழா முடிவுக்கு வந்துவிட்டது. தேர்தல் நடைபெற்ற மூன்று மாகாணங்களிலும் அரச தரப்பே வெற்றியீட்டியுள்ளது. ஆயினும் வடமத்திய, சப்பிரகமுவ மாகாணங்களில் பெற்ற அமோக வெற்றிபோல கிழக்கு மாகாணத்தில் அரச தரப்பால் வெற்றி பெறமுடியவில்லை என்பதே யதார்த்தம்.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 20 ஆசனங்களையும், ஐக்கியதேசியக் கட்சி 15ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தன. ஆனால் இந்தமுறை அரசதரப்பால் 14 ஆசனங்களையே பிடிக்க முடிந்திருக்கிறது. கடந்த தேர்தலில் களமிறங்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தமுறை தேர்தல் கோதாவில் குதித்ததே அரசின் வாக்கு வீழ்ச்சிக்கு பிரதான காரணம். இதேவேளை 2008 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தமுறை தனித்து களமிறங்கி 7 ஆசனங்களைப் பெற, ஐ.தே.க. வெறும் 4 ஆசனங்களோடு திருப்திப் படவேண்டிய நிலை.

இப்போது 14 ஆசனங்களைப் பெற்று கிழக்கில் அரச தரப்பு முன்னிலை வகிக்கின்ற போதும், யாருக்கு வெற்றி என்பது இன்னமும் குழப்பமாகவே உள்ளது. அரச தரப்பு வெற்றிபெற்றிருந்தாலும் அது அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. ஆயினும் கைக்குவர முதலே நெய்க்கு விலைபேசத் தொடங்கியிருக்கிறார்கள் அரச தரப்பிலுள்ள முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனும் [பிள்ளையான்], பிரதி அமைச்சர் முரளிதரனும் [கருணா]. ஏற்கனவே இவர்கள் இருவரும் கீரியும் பாம்புமாக சீறிக் கொண்டிருந்தனர். இப்போது யாருக்கு முதலமைச்சர் மகுடம்? என்ற போட்டியில் இந்த இருதரப்பும் குதித்துள்ளன. ஆயினும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு அரச தரப்புக்கு இன்னமும் நான்கு ஆசனங்கள் தேவைப்படும் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் கட்சியே அரியணையில் ஏற முடியும்.

முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பேரத்தை அரச தரப்பிடமும் கூட்டமைப்பிடமும் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கு மாகாணத் தேர்தலில் முதலிரு இடங்களைப் பிடித்த கட்சிகளை விடவும், மூன்றாவது இடத்தைப் பிடித்துக் கொண்ட கட்சியான முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக வருவதற்கான சாத்தியங்கள் அதிகமுண்டு. ஏனெனில் அந்தக் கட்சியின் தயவில்லாமல் அங்கு ஆட்சியமைப்பது முடியாத விடயம். ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கின்ற நிபந்தனைகளுக்கு தலையாட்டினால் மட்டுமே ஆட்சிக் கனவு நிறைவேறும். முஸ்லிம் காங்கிரஸோ முதலமைச்சர் பதவியை முன்னிறுத்தியே தன்னுடைய காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் தமது உழைப்பால் பெறப்பட்ட வெற்றிக்கு, மூன்றாம் தரப்பாக போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் முடிசூடுவதை முதலமைச்சர் கனவிலிருக்கும் பிள்ளையானும் கருணாவும் ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குறியே. எனவே அரசதரப்பு ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தாலும் கூட பதவிக் கதிரைக்கான பெரும் இழுபறியில் வெற்றி என்ற பானையை போட்டுடைக்க வேண்டிய இக்கட்டான நிலை அரச தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அத்தகைய அதிகார இழுபறி எதுவும் இல்லாததால் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தால், முதலமைச்சர் பதவி பற்றி சுமுகமாக முடிவொன்று எட்டப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம்.

தமிழர்களின் தாயக பூமியான கிழக்கில் இவ்வாறு தொங்குபறி நிலை ஏற்படுவதற்கும், அரச தரப்பு முன்னிலை பெறுவதற்கும் ஒரேஒரு காரணியே முதன்மையானது. அது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் அதனூடாக தமிழர் தரப்பின் குடிப்பரம்பல் வீதத்தில் உண்டாக்கப்பட்ட வீழ்ச்சியும் தான்.

இதேபோன்று வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழர்களின் குடிப்பரம்பலைக் குறைத்து, தானே வாகை சூடுதவதற்காகத் தான் வடமாகாணத் தேர்தலை அரசு பிற்போட்டு வருகிறதோ?

# கிழக்கு மாகாண சபை தே
# அரசின் போக்கில் மாற்றத்

சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து...

■ தொகுப்பு: கோகுலன்

இலங்கை அரசின் செல்வாக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடந்து முடிந்த மூன்று மாகாணங்களுக்குமான மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகளை வைத்தே இ ப் பொ கணிக்கப்படவிருக்கின்றது. பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அரசு பலராலும் பலவிதமாக விமர்சிக்கப்பட்டு வந்த போதிலும் இன்னமும் மக்களின் ஆதரவை இழந்துவிடவில்லை என்பதை உலகுக்கும் உள்நாட்டுக்கும் எடுத்துக் காட்ட வேண்டிய இக்கட்டில் அரசு இருந்துவருகின்றது. அதனால் முழு அமைச்சரவையுமே தேர்தல் பிரசாரத்தில் களமிறக்கப்பட்டிருந்தது.

சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் அரசு வெற்றி வாகை சூடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கிழக்கு மாகாணத்தில் தொங்கு மாகாண சபையொன்று ஏற்படக் கூடிய சாத்தியமே காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தைப் போலில்லாமல் கிழக்கில் வாக்காளர் எண்ணிக்கை பெரும்பாலும் சம நிலையிலேயே சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பிரிபடக் கூடிய நிலை காணப்படுகின்றது. அரசு திருப்தியளிக்கும் வகையில் கிழக்கில் வாக்குப் பலம் காணப்படுமானால் அரசின் கொள்கைகளுக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டதாகக் கூறிக் கொள்ளலாம். வேறு விதமாக இருப்பின் அது தொடர்பான கருத்தும் எதிர்மாறான செய்தியையே வழங்குவதாய் இருக்கும்.

தொங்கு மாகாண சபை உருவாகும் நிலையேற்படுமானால் பெருமளவில் அரசியல் பேரம் பேசும் செயற்பாடுகள் மும்முரமடையும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பங்காளி கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது வேட்பாளர்களைத் தனியாகவே போட்டிக்கு நிறுத்தியிருந்தமையால் பேரம் பேசுதல் மிகவும் கெடுபிடியாகவே இருக்கும் என்று சொல்லலாம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து செயற்படுமா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முடிவெடுக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இன்னொரு பக்கம் முஸ்லிம் காங்கிரஸ் கவலை தெரிவித்துக் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்ள முடிவு செய்யுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

தேர்தல் பிரசாரங்கள் பெரும் போராட்டங்களாக மாறியிருந்தன. அரசு சார்ந்த கோஷ்டிகள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரிவினர் மீது பல கழுத்தறுப்புத் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள். அரசு தரப்பின் கசப்புணர்வுகள் அமைச்சர் டலஸ் அளகப்பெருமாவின் கருத்தில் வெளியாகியிருந்தன. அமைச்சரவை சகாவும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் அமைச்சரவையில் ஒரு கருத்தையும் கிழக்குத் தேர்தல் களத்தில் [illegible] வெளியிடுகின்றார் என்று [illegible] ருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸையும் மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளை தனித்தனியேயும் போட்டியிடவிட்டதன் புத்திசாலித்தனம் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இந்தச் செயற்பாடு கட்சியின் வாக்குப் பலத்தை சிதறடித்துவிட்டதாகக் கருதப்படுகின்றது.

இந்த மாகாண சபை தேர்தலானது ஜனதா விமுக்தி பெரமுனைக்கும் அதன் பலத்தை சோதிக்கும் சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. கட்சியில் பெரிய அளவில் பிரிவு ஏற்பட்டதன் பின்னர் முதல் தடவையாக ஜே.வி.பி. இந்த தேர்தலுக்கு முகம் கொடுத்திருக்கிறது.

### தேர்தல் பணிக்கு அரச வளங்கள்

நேற்று முன்தினம் நடந்து முடிந்த மகாண சபைகளுக்கான தேர்தலின்போது ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அரச வளங்களை பெருமளவில் தமது தேர்தல் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்ற வகையில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களாகும். தங்கள் ஆதரவாளர்கள் அரச தரப்பு ஆதரவாளர்களால் பல சந்தர்ப்பங்களில் தாக்கப்பட்டதாகவும் சில இடங்களில் அரச தரப்பினருக்குப் பொலிஸார் சாதகமாக நடந்து கொண்டார்கள் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டுச் சென்றிருப்பது இந்த விவகாரத்தில் எதிர்வு கூறல்தல்களை அதிகரித்துள்ளது. கிழக்கில் தேர்தல் பிரசார பணிகளுக்கு அரசு சார்பில் அவரே பொறுப்பாக இருந்து வந்தார்.

எதிர்த்தரப்பினர் தாக்கப்பட்டது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.ராஜவ ரோதயம் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருந்தார். கடிதத்தின் பிரதிகள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

### அரசுக்குள் கருத்து மோதல்

அரசுக்குள் கருத்து மோதல்கள் உருவாகியிருப்பதாகக் கூறப்படுவதற்கு உதாரணமாக ஜெனிவா செல்லவிருக்கும் பிரதிநிதிகள் குழுவில் ஜனாதிபதியின் மனித உரிமைகளுக்கான சிறப்பு பிரதிநிதியான அமைச்சர் மஹிந்த சமரசிங்க சேர்த்துக் கொள்ளப்படாமல் இருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. கடந்த நான்கு வருடங்களாக அரசு மனித உரிமைகள் விடயத்தில் செயற்பட்ட விதம் குறித்து மனித உரிமைகள் சபையில் இலங்கை தயாரித்து வழங்கியுள்ள தேசிய செயற்றிட்டம் பற்றி உலகளாவிய பருவகால ஆய்வு நடக்கும்போது இந்தக் குழு கலந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பருவகால ஆய்வுக்கான தேசிய அறிக்கையை அமைச்சர் சமரசிங்கவே தயாரித்து வழங்கியிருந்தார். அந்த அறிக்கை இப்பொழுது மனித உரிமைகள் சபையின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் அல்லது ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்பான



பிரச்சினைகளில் அமைச்சர் சமரசிங்கவுடன் கலந்து பேசுவதை வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் நிறுத்திக் கொண்டுவிட்டதாகவும் அறியப்படுகின்றது.

மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான மனித உரிமைகள் சபை தீர்மானத்துக்கிணங்க அடுத்த வாரம் இலங்கைக்கு ஆலோசனை வழங்குவதற்காக இங்கு வரவிருக்கும் மனித உரிமைகள் சபை நிபுணர்கள் வரவு பற்றியும் கூட அமைச்சர் சமரசிங்கவுடன் கலந்து பேசப்படவில்லை என்று கூறப்படுகின்றது. ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் அமைச்சர் சமரசிங்க நடந்து கொண்ட விதம் குறித்து வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தமை இங்கு நினைவு கூரத்தக்கது.

அந்த சமயத்தில் ஜனாதிபதி அமைச்சர் பீரிஸைக் கடிந்து கொண்டு அரசு பொது எதிரியுடன் போராடிக் கொண்டிக்கும்போது பிரிவினைகள் தேவையில்லையென்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலைமையில் அமைச்சர் சமர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ... தேர்தல் முடிவுகள் ...த்தை ஏற்படுத்துமா?



★ கிழக்கில் தேர்தல் வன் செயல்கள் எதிர்க்கட்சிகள் முறைப்பாடு.
ஜெனிவா மாநாட்டுக்கு அமைச்சர் சமரசிங்க செல்வார்
★ 12 ஆம் திகதி றொபேர்ட் பிளேக் வருகிறார்
★ யாத்ரீகர்கள் தாக்கப்பட்ட சம்பவம் புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டம்.

சிங்க ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் கடுமையான ஆட்சேபனையொன்றை வெளியிட்டதாகத் தகவல் கசிந்துள்ளது.

இதன் காரணமாக, வெளியுறவு அமைச்சு ஏற்கனவே அதன் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம மூலமாக நவம்பரில் பருவகால ஆய்வு மனித உரிமைகள் சபையில் எடுத்துக் கொள்ளப்படும்போது இலங்கையில் இருந்து அமைச்சர்கள் மட்டத்தில் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று விடுத்திருந்த அறிக்கையில் மாற்றம் செய்துள்ளது. அந்த விடயத்தில் இன்னும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர் இப்போது கூறுகிறார். கடந்த வாரம் அவர் விடுத்த அறிக்கையில் இலங்கைத் தூதுக்குழுவுக்கு ஜெனிவாவிலுள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமை வகுப்பார் என்று கூறியிருந்தார். அமைச்சர் சமரசிங்க தாமே தயாரித்த தேசிய அறிக்கையை ஆதரித்து வாதிடுவதற்கு ஜெனிவாவுக்குச் செல்வார் என்று இப்போது தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவைக்கான சட்ட ஆலோசகர் மோகன் பீரிஸ், சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ மற்றும் அமைச்சு அதிகாரி ஒருவரும் அவருடன் செல்வார்கள் என்று தெரிகிறது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் மாநாட்டில் ஏற்கனவே சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ள விதம் குறித்து ஆராய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னதாக உலகளாவிய பருவகால ஆய்வு நடைபெறவிருக்கின்றது.

### அமெரிக்க உதவி செயலர் வருகிறார்

தெற்கும் மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க உதவி செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் செப்ரெம்பர் 12 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை கொழும்பில் தங்குவார். அப்போது இரு நாடுகளுக்குமிடையிலான விடயங்கள் மற்றும் ஜெனிவா தீர்மானம் குறித்தும் இலங்கைத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவார். கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வந்து சேர்ந்த அமெரிக்காவின் புதிய தூதுவர் மிக்செல் சிஸனும் இந்த சந்திப்புகளின் போது உடன் இருந்து கலந்துகொள்வார்.

### இலங்கையர் தாக்கப்பட்ட விவகாரம்

கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர்களுடனான ஒரு சந்திப்பில் தமிழ் நாட்டில் இலங்கையர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசுவீர்களா? என்று கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ராஜபக்ஷ, பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளன. இந்திய மத்திய அரசின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு சென்றுள்ளோம். சாதகமான பதிலும் கிடைத்துள்ளது. செப்ரெம்பர் 19 ஆம் திகதி இந்தியாவுக்கு நான் செல்லவிருக்கிறேன். சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த விடயத்தையும் எடுத்துப் பேசுவேன். சிறிய குழுவினர்தான் இதனை செய்கிறார்கள். இந்திய ஊடகங்களும் ஏனைய கட்சிகளும் நல்லபடியாக செயற்பட்டுள்ளன என்று கூறினார்.

கடந்த வியாழக்கிழமை புறக்கோட்டையிலுள்ள இந்திய வம்சாவளியினரான வர்த்தகர்களைக் கொண்ட தமிழ் வர்த்தகர்கள் சங்கத்தினர் தமது வர்த்தக நிலையங்களை மூடி விட்டு காலி வீதியிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் நிலையத்துக்கு பவனியாகச் சென்று உயர் ஸ்தானிகர் அஷோக் காந்தாவிடம் மனு ஒன்றை கையளித்தார்கள். இலங்கையில் இருந்து வரும் யாத்ரீகர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அதில் இந்திய பிரதம மந்திரி மன்மோகன் சிங்கையும் தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியையும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிரதி எதுவும் அனுப்பப்பட்டதாகக் குறிப்பு எதுவும் தரப்பட்டிருக்கவில்லை.



கறுப்பி

# போருக்கு பின்னர் கிடைத்த இடம்

கடந்த காலங்களில் பொருளாதார ரீதியாகவும் அரசியல் தலையீடு காரணமாகவும் பல நெருக்கடிகளை சந்தித்த குடாநாட்டு விவசாயிகள் தற்போது போருக்குப் பின்னர் தமக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துள்ளனர்.

போருக்குப் பின்னரான காலகட்டத்தில் குடாநாட்டு விவசாயிகள் தமது உற்பத்தி முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

நெல் உற்பத்திக்கு மேலதிகமாக உப உணவுப் பயிர்ச் செய்கை, பணப் பயிர்ச் செய்கை ஆகியவற்றை மேற்கொள்வதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டு விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் பணப் பயிர்ச் செய்கையில் திராட்சை முக்கிய இடத்தை வகித்துள்ளது என்பதற்கு இரு வேறுபட்ட கருத்துகளுக்கு இடம் இல்லை.

யாழ். குடாநாட்டில் 40 ஆண்டுகளுக்கு முன்னர் திராட்சை செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

குடாநாட்டிலுள்ள 62 ஆயிரத்து 269 விவசாயிகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் திராட்சை செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர். அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டுமே இந்தப் பணப் பயிரில் வெற்றி கண்டுள்ளனர்.

மண்வளம் நிறைந்த புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய், இளவாலை, அளவெட்டி, அச்சுவேலி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவில் திராட்சை உற்பத்திசெய்யப்படுகிறது. தற்போது மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் 10 ஆயிரம் திராட்சைக் கொடிகள் பயனளிக்க ஆரம்பித்துள்ளன என்று விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆரோக்கியமான திராட்சைக் கொடிகள் விதி முறைகளுக்கு ஏற்ப வளர்க்கப்படின் பத்து தொடக்கம் பதினைந்து வருடங்கள் தொடர்ந்து பலன்தரும் என உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த இந்தத் துறை சார்ந்த விவசாயி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

இந்த விவசாயி தான் மேற்கொள்ளும் திராட்சை செய்கையின் அனுபவம் பற்றியும் அதன் சூழ் நிலைகள் காரணிகள் பற்றியும் விளக்கம் தந்தார்.

நல்ல செம்மண் நிறைந்த நிலத்தில் பயிரிடுவதே சாலச் சிறந்ததாகும். பண்படுத்தப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் சராசரியாக 320 செடிகள் நடலாம். இதற்காகவே விசேடமாக தயாரிக்கப்படும் 3 அடி சதுரக் குழிகளில் பதிவைக்கப்பட்ட திராட்சைசெடிகளை நட வேண்டும்.

பின்னர் 3 நாள்களுக்கு ஒரு தடவை வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சப்படுகிறது. செடிகள் துளிர்விட்டு தழைத்து வரும் சமயம் உறுதியான பந்தல்களில் கொடிகள் படரவிடப்பட வேண்டும். இதற்காக சிமெந்திலான நீள தூண்கள் அறுக்கப்பட்டு பந்தல்கள் போடப்படும். இவை நிரந்தரமாகவே காணப்படும்.

திராட்சை கொடிகளுக்கு போதுமான சூரிய ஒளியும் காற்றோட்டமும் தேவை. 10 தொடக்கம் 20 அடி இடைவெளி இருக்குமாறு கொடிகள் நடப்படும். சாதாரணமாக நடப்பட்ட கன்று 60 நாள்களில் கொடிகளில் படரவிடப்படும். கொடி நடப்பட்டு 8மாத காலத்தின் பின் முதல் வெட்டு மேற்கொள்ளப்படும். இது கொய்தல் எனப்படுகிறது. கொய்தல் மேற்கொள்ளப்பட்டு இரு வார காலத்தில் கொடிகள் பூக்க ஆரம்பித்து விடும் எந்த விதமான நோய் தாக்கத்துக்கும் உட்படாத திராட்சை செடிகளாயின் பூ மலர்ந்து 100 நாள்களின்பின் அறுவடைக்குதயாராகி விடும்.

ஒரு தடவை அறுவடை மேற்கொண்ட பின்னர் அடுத்த அறுவடைக்கு 2 மாத காலம் காத்திருத்தல் வேண்டும். வருடத்தில் இரு தடவை பழ அறுவடை மேற்கொள்ளலாம். இந்த திராட்சை பயிர்ச் செய்கைக்கு ஆரம்ப மூலதனமாக பெருந்தொகைப் பணம் தேவைப்படுகிறது. நீண்ட காலமாக பராமரிப்புக்கு பொருளாதார வசதியும் கவனிப்பும் தேவைப்படுகிறது.

பசளையிடல், இடைவிடாது நீர் பாய்ச்சுதல், கிருமி நாசினிகள் பிரயோகித்தல் ஆகியவற்றுக்கும் பெருந்தொகையான பணம் செலவிட நேரிடுகிறது.

ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் கொடியில் அறுவடையில் போது 4 ஆயிரம் கிலோ திராட்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது ஏ - 9 பாதை திறக்கப்பட்டதன் பின் குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் திராட்சை உற்பத்தியை கொள்வனவு செய்வதில் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் ஒரு கிலோ திராட்சைப் பழத்தை 200 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடிகிறது.

சாதாரணமாகப் பழுக்கும் திராட்சை தேன்போன்று இனிப்பாக இருக்கும். வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு விரைவாக பழுக்க வைத்தால் புளிப்புத் தன்மை உருவாகும்.

திராட்சை செய்கைக்கு மழை ஒன்றே எதிரியாக உள்ளது. பழங்களில் மழைத் துளி பட்டுவிட்டால் பழம் வெடித்து விடும். அத்துடன் பழுதாகிவிடும்.

குடாநாட்டு விவசாயிகளின் விவசாயத் துறையை வளர்ப்பதற்கு விவசாயத் திணைக்களம் போதுமான பொருளாதார வசதிகளையும், குறைந்த கடன் திட்டங்களையும் போதிய அறிவுரைகளையும் வழங்கும் பட்சத்தில் விவசாயிகளின் வாழ்வு பிரகாசிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகள் சந்தித்தால்

இரண்டு பெரிய ஞானிகள் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வார்கள்?

அதை விளக்குகிறது இந்தக்கதை.

ஷேக்பரீத் என்ற ஒரு பெரிய ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஒவ்வொரு ஊராகப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் காசிக்கு வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய சீடர்கள் சிலரும் கூட வந்து கொண்டிருந்தார்கள்.

காசியில் கபீர்தாசர் தங்கியிருக்கும் விடயம் அந்தச் சீடர்களுக்குத் தெரியவந்தது. உடனே அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது, ஷேக்பரீத்தும், கபீர்தாசரும் சந்தித்துப் பேச வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

'இரண்டு ஞானிகளைச் சந்திக்க வைத்தால் அரிய தத்துவங்களை அவர்கள் பேசுவார்கள். அதைக் கேட்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும் ' என்று அவர்கள் நினைத்து தங்களின் இந்த விருப்பத்தை ஷேக்பரீத்திடம் தெரிவித்தனர்.

''சரி... கபீரைச் சந்திக்கலாம்... ஆனால் அவருடன் பேசுவதைப் பற்றி நான் எதையும் சொல்வதற்கில்லை!'' என்றார் பரீத்.

''ஏன் கபீருடன் நீங்கள் எதுவும் பேசமாட்டீர்களா? '' என்று சீடர்கள் ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

''அவருடன் நான் பேசுவதற்கு எதுவுமில்லை! ஏனெனில்... எனக்கு என்ன தெரியும் என்பது அவருக்குத் தெரியும். அவருக்கு என்ன தெரியும் என்பது எனக்குத் தெரியும்! அப்படி இருக்கும் போது நாங்கள் இருவரும் பேசிக் கொள்வதற்கு என்ன விடயம் இருக்கப்போகிறது ?'' என்றார் ஷேக்பரீத்.

இங்கே இப்படி நிலைமையிலிருந்த போது, கபீர் இருக்கும் இடத்தில் என்ன நடந்தது தெரியுமா?

பரீத் காசிக்கு வந்திருக்கிறார் என்ற விடயம் கபீரின் சீடர்களுக்கு தெரியவந்தது. உடனே அவர்களும் கபீரிடம், ''நீங்கள் ஷேக்பரீத்தைச் சந்தித்துப் பேச வேண்டும்'' என்று கேட்க ஆரம்பித்தனர்.

அதற்கு கபீர், ''நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால் கட்டித் தழுவிக் கொள்வோம்- ஆனந்தக் கண்ணீர் வடிப்போம்- இதைத் தவிர வார்த்தைகளால் பரிமாறிக் கொள்ளும் வகையில் எங்களிடம் விடயம் எதுவுமில்லை!'' என்று கூறினார்.

இருந்தாலும் இருவரிடமும் இருந்த சீடர்கள் அப்படி நினைக்கவில்லை. எப்படியும் இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டால் சிறிதளவாவது பேசாமல் இருக்கமுடியாது. ஏதாவது பேசுவார்கள்!' என்றே நினைத்தார்கள். அதனால் தொடர்ந்து தங்கள் விருப்பத்தைக் கூறி வற்புறுத்தினர்.

கபீர், பரீத்தைத் தன்னுடைய ஆச்சிரமத்துக்கு அழைத்தார். அந்த ஊரின் எல்லைக்குச் சென்று அவரை அழைத்து வந்தார். இருவரும் சந்தித்து, ஒருவரையொருவர் அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டனர். ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடியே நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தனர் இருவரிடமிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கபீரின் ஆச்சிரமத்தில் இரண்டு மகான்களும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

இவர்கள் ஏதாவது பேசுவார்கள்!' என்று எதிர்பார்த்து இரண்டு பக்கங்களிலும் சீடர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள் 'பேசுங்கள்' என்று சொல்லியுங்கூடப் பார்த்தார்கள். அதைக் கேட்டதும் இருவரும் இலேசாகச் சிரித்தார்களே தவிர எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

ஒரு நாள் முழுவதும் அப்படியே கழிந்தது. அதன் பின்னர் பரீத் கபீரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.


''நீங்கள் ஏன் அவருடன் பேசவேயில்லை? '' என்று கபீரின் சீடர்கள் கேட்டார்கள். அதற்கு கபீர் சொன்னார்: 'நாங்கள் இருவரும் உணர்ந்ததைச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது! எல்லாம் உணர்ந்த பரீத்திடம் பேசுவதற்கு என்னிடம் எதுவுமில்லை! ஆதலால் பேசவில்லை.''

இது போலவே பரீத்தின் சீடர்களும் அவரிடம், ''நீங்கள் ஏன் கபீருடன் பேசவே இல்லை'' என்றனர்.

''எங்களில் யாராவது ஒருவர் பேச ஆரம்பித்திருந்தாலும் அதைப்போல முட்டாள் தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது!'' என்றார் பரீத்.

இந்தச் சந்திப்பின் மூலம், ஞானிகள் இருவரும் பேசியிருந்தால் என்ன ஒரு தெளிவு கிடைக்குமோ- அதைவிட அதிகமான தெளிவு அந்தச் சீடர்களுக்குக் கிடைத்ததாம்.


''உண்மையின் வடிவமான பரம்பொருள் - பேசப்பட வேண்டிய ஒன்றல்ல; அது உணரப்பட வேண்டிய ஒன்று'' என்ற உண்மையை இரண்டு பக்கங்களையும் சேர்ந்த சீடர்கள் புரிந்து கொண்டார்கள்.



சுகி.சிவம்

# இன, மத பேதங்கள் இன்றி அடைக்கலம் தரும் மடு அன்னை

(கடந்தவாரத் தொடர்ச்சி....)




எஸ்.ஆர்.லெம்பேட்

அன்னையின் அருகில் இருக்க, அவளது பாதத்தில் அமர்ந்து தம் குறைகளைச் சொல்ல, அவளது தாயன்பில் திழைத்திருக்க அவளது பிள்ளைகள் இலங்கையின் நாலா திசைகளில் இருந்தும் வந்து குவிகின்றார்கள். அன்னையிடமிருந்து ஆறுதலையும் தேறுதலையும் பெறுகின்றார்கள்.

**ஆன்மீகப் புதுப்பித்தல்**

மடுத்திருப்பதிக்கு வருவோரிடம் ஓர் ஆழமான ஆன்மீகப் புதுப்பித்தல் நடைபெறுவது ஒரு சிறப்பான அம்சமாகும். இதற்கான அகச்சூழலும் புறச்சூழலும் மடுத்திருப்பதியிலே நிறைவாக அமைந்துள்ளன. வெறும் பொழுது போக்கிற்காகவோ, அல்லது கேளிக்கைக்காகவோ மக்கள் இங்கு வருவதில்லை. தமது ஆன்மீக வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும், புதிய வாழ்வைக் காண வேண்டும் என்ற தாகத்தோடும் வேகத்தோடும்தான் மக்கள் இத்திருப்பதியை நோக்கி வருகின்றார்கள்.

இத்திருத்தலத்தின் நுழைவுப் பகுதியை அண்மித்தவுடனேயே திருப்பயணிகள் செபமாலையைச் செபிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அல்லது தேவதாய்க்கு பாடல்களைப் பாடத்தொடங்கி விடுவார்கள். மிகுந்த பக்தி சிரத்தையோடு மடு அன்னையின் புண்ணிய பூமியிலே தம் பாதங்களைப் பதிப்பார்கள்.

இத்திருப்பதியிலே தங்கியிருக்கும் நாள்களில் தங்களுடைய அதிகமான நேரங்களை அன்னையின் பாதத்தில் அமர்ந்திருந்து செபமாலை செபிப்பதிலே செலவிடுவார்கள். எல்லாவற்றையும்விட மேலாக ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று அன்னையின் திருத்தலத்தில் ஓர் ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தைப் பெறுகின்றார்கள்.

ஒவ்வொரு நாள் நவநாள் வழிபாட்டுக்குரிய கருப்பொருள்கள் மிகவும் கவனமாகத் தேர்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் காலைத் திருப்பலியும், மாலை நற்கருணை ஆராதனையும் மறையுரையும் இடம்பெறும். ஒவ்வொரு நாளும் மூன்று வேளையும் ஒலிபெருக்கி ஊடாக செபமாலை ஒலித்துக்கொண்டே இருக்கும். அன்னையைப் புகழும் பாடல்கள் காற்றில் கலந்து வந்து கொண்டே இருக்கும். இப்பதியில் தங்கியிருக்கும் நாள்களில் திருப்பயணிகள் ஆன்மீகப் பாதையில் வழிநடத்தப்படுகின்றார்கள். இப்பதியிலிருந்து தமது இல்லிடம் நோக்கிச் செல்லும்போது ஒரு ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தோடுதான் அவர்கள் செல்கின்றார்கள்.

> மடுத்திருப்பதி ஒற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மையமாகவும் மத்திய நிலையமாகவும் திகழ்கின்றது. இனமத பேதமின்றி மக்கள் ஒன்று சேர்ந்து வந்த ஒரு தாய் மக்களாக ஒரே குடையின்கீழ் நிற்பது மடுத்திருப்பதியில் தான்.

மடுத்திருப்பதி ஒற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மையம் மடுத்திருப்பதி ஒற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மத்திய நிலையமாகத் திகழ்கின்றது. ஆம்! எக்குலத்தவராயினும், எம்மொழியினராயினும், எவ்வினத்தவராயினும் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே என்ற உணர்வுடன் இத்திருப்பதி அனைத்து மக்களையும் வரவேற்கின்றது.

இத்திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சுருபம் 'வரவேற்பு மாதா' என்று அழைக்கப்படுகின்றது. மடு அன்னை இரு கரங்களையும் விரித்தவளாய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரையும் தன் கைகளை நீட்டி அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும்.

எல்லா மக்களையும் வரவேற்று ஒன்றுசேர்க்கும் இலங்கை ஒற்றுமையினதும், ஒன்றிப்பினதும் மையமாக இத்திருப்பதி திகழ்கின்றது. போர் முடிவடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும்தான் ஓய்ந்துள்ளன. யுத்தத்தின் வடுக்கள் இன்னும் மாறவில்லை. மனக்காயங்கள் இன்னும் ஆறவில்லை. இந்நிலையில் மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்துவற்கு அவர்கள் ஒன்றுசேரக்கூடிய ஒரே இடம் இந்த நாட்டில் மடுத்திருப்பதிதான்.

இனமத பேதமின்றி மக்கள் ஒன்றுசேர்ந்து வந்த ஒரு தாய் மக்களாக ஒரே குடையின்கீழ் நிற்பது மடுத்திருப்பதியில்தான். ஆகவேதான் அன்று தொட்டு இன்றுவரை மடுத்திருப்பதி இந்த நாட்டு மக்கள் மத்தியல் ஒற்றுமையை, ஒன்றிப்பை, சமாதானத்தை ஏற்படுத்துவதில் பெரிய பங்களிப்பை ஆற்றிவருகின்றது. ஒருவர் மற்றவரை எதிரியாக நினைத்துக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் ஒருவர் மற்றவரைப் பார்க்க, சிரிக்க, பேச, புரிந்து கொள்ள தக்கதோர் தளமாக மடுத்திருப்பதி விளங்குகின்றது.

நிறைவாக மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே கருணைஅருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே!'

காற்றில் கலந்துவரும் இக்கானத்தைக் கேட்கும்போதெல்லாம் மடுத்திருத்தலத்தின் நினைவுகள் நம் நெஞ்சில் நிழலாடும். மடு அன்னையின் மாறாத தாயன்பிலே நம் உள்ளம் உறவாடும். ஆம்! மடு அன்னை மனுக்குலத்தின் தாய்தான்! பாவப்பட்ட இம்மனுக்குலத்திற்கு அவள் தான் நம்பிக்கை நட்சத்திரம்.

பவம் செய்தோம் பாரினிலே
தவம் செய்தோம் உன் தயவால்.
பட்சமுடன் பாரம்மா, பாவியெம்மைக் காரம்மா!'

இந்த வரிகள் பாவ நாட்டத்தால் சீரழிக்கப்பட்ட மானிடத்தின் உள்ளக் குமுறல், பாவத்தில் சிக்குண்டு தவிக்கும் மனுக்குலத்தின் இதய ஓலம்! தாயைச் சரணடையும் ஒரு சேயின் உணர்ச்சி மிக்க உச்சரிப்புக்கள்!

ஊதாரி மகனாய் - ஊதாரி மகளாய் அலைந்து திரியும் இந்த மானிடத்திற்கு மரியன்னையின் தாயன்பே ஒரே நம்பிக்கை! ஆம் அவள்தான் பாவிகளின் அடைக்கலம்! நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் முதன்மையான பரிந்துரையாளர்.

கன்னி மரியாள் களங்கமற்ற நீர்ச்சுனை. இறைமகனையே தன் உதிரத்தில் சுமந்த திருப்பேழை. கடவுளையே தாங்கி நின்ற பதிர்ப்பாத்திரம். ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்றமடைந்த அன்னை மரியாவுக்கு மடுப்பதியில் பெருவிழா.

அலகையை வென்று அகிலத்தைக் காத்த அந்த அன்னைக்கு இறைவன் அளித்த அன்புப்பரிசு அவரை விண்ணகத்திற்கு அழைத்துக்கொண்டது. தாய் விண்ணேறிச் சென்றால் சேய்கள் நமக்கெல்லாம் அது பெருவிழாதானே! அதனால்தான் மடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டுள்ளது. மக்கள் வெள்ளத்தினால் நிரம்பி வழிகின்றது.

மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே' என்ற கான வரிகள் காற்றில் என்றும் கலக்கட்டும். அதன் வழி மடுத்தாயின் புகழ் என்றும் நிலைக்கட்டும்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்ற ஹற்றன் நகரசபை மீளாய்வுக் கூட்டம்

ஹற்றன் - டிக்கோயா பிரதேச அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஹற்றன் - டிக்கோயா நகர சபைத் தலைவர் அலகமுத்து நந்தகுமார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகியதை அடுத்து அந்தச் சபையில் தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரம்

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகியதை அடுத்து அந்த மாநகர சபையில் தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரம் கைநழுவிப் போனது.**

கைநழுவிப் போனது.

எனினும் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கினிகத்தேன பிரதேச செயலகத்தின் ஊடாக முன்னெடுப்பதாகவும் அதன் பொருட்டு நகர சபையின் அனுமதி தனக்கு அவசியமில்லை என்றும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

## சாராயப் போத்தல்களுடன் சென்ற ஆளும் கட்சியின் ஆதரவாளர் கைது

அம்பாறை மாவட்டத்தில் சாராயப் போத்தல்களுடன் சென்ற ஆளும் கட்சியின் ஆதரவாளரை கல்முனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒரு மணிக்கு 59 சாராயப் போத்தல்களை கார் ஒன்றில் கடத்திச் சென்ற அரசாங்கக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் ஒருவரின் ஆதரவாளர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் அவர் கடத்திச் சென்ற சாராயப் போத்தல்களையும் காரையும் பறிமுதல் செய்துள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கடும் காற்றால் 36 வீடுகள் மட்டக்களப்பில் சேதம்




மட்டக்களப்பு கோரளைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றால் 36 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையப் பிரதிப் பணிப் பாளர் பிரதீப் கொடிப் பிலி தெரிவித்தார்.

மேலும் நான்கு வீடுகளின் கூரைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடும் காற்றால் ஏற்பட்ட சேத விவரங்களைத் திரட்டுவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப் பதிகாரிகளை ஈடுபடுத் தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# த.தே.கூட்டமைப்பு வேட்பாளரை கடத்த எடுத்த முயற்சி தோல்வி

### ஆரையம்பதியில் ஆளும் கட்சியின் வேட்பாளர் அடாவடி



மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியில் தேர்தல் வாக்களிப்பு நிறைவுபெற்ற பின்னர் வாக்குப்பெட்டியை சீல் இடும் பணியைப் பார்க்கச் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் மகேந்திரலிங்கத்தைத் தாக்கி கடத்திச் செல்ல முற்பட்டுள்ளதுடன் அவரது வாகனமும் தாக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30மணியளவில் பெட்டி சீலிடப்படுவதை பார்த்துக்கொண்டிருந்த போது அங்குவந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் பிரசாந்தன், அவரது சகோதரன் கரன், உதவியாளர் நித்தி மற்றும் ஒப்பந்தகாரர் சந்திரகுமார் உட்பட சிலர் இந்த அடாவடிச் செயலில் ஈடுபட்டதாக வேட்பாளர் மகேந்திரலிங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்

இவர் வாக்குப்பெட்டியை சீல் வைப்பதை பார்த்துக் கொண்டிருந்தபோது திடீரென வந்த அவர்கள் தாக்குதல் நடத்தி தன்னை கடத்த முற்பட்டுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில்,தனது ஆதரவாளர்கள் இது தொடர்பில் உயர் பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து தடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தனது வாகத்தின் மீது தாக்குதல் நடத்தியதுடன் தன்னைக் கொலை செய்யப்போவதாக மிரட்டியதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பிலான விசாரணையை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் குழுக்களிடையே மோதல் மூவர் படுகாயம்

திருகோணமலை, அன்பு வழிபுரம் பிரதேசத்தில் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்று இரவு இடம்பெற்ற மோதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

அன்பு வழிபுரத்தில் உள்ள மைதானமொன்றில் திருகோணமலை பிரபல பாடசாலை ஒன்றின் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் குடிபோதையில் ஏற்பட்ட இம்மோதலில் போத்தலால் தாக்கப்பட்டு மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

படுகாயமடைந்த மூவரும் திருகோணமலை தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அன்புவழிபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதா கவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## எரிபொருள் நிலையத்தில் திருடியவர் மடக்கிப் பிடிப்பு

கண்டி, மஹிய்யாவை பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் 7ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்து தப்பிச்சென்ற சந்தேக நபரை பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் மடக்கிப் பிடித் துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்து பணத்தைக் கொள்ளையடித்து தப்பி ஓடிக்கொண்டிருந்த சந்தேக நபரை கண்டி அருகில் கடமையில் இருந்த பொலிஸ் கான்ஸ் டபில் துரத்திப் பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. மேற்படி சந்தேக நபரிட மிருந்து கொள்ளையடிக் கப்பட்ட பணமும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் கட்டுஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகனப் போக்குவரத்தை மட்டுப்படுத்த நுரெலியா அரச அதிபர் கோரிக்கை

ஹற்றன் - நுவரெலியா வீதி ஊடான வாகனப் போக்குவரத்தை மட்டுப்படுத்துமாறு அரச அதிபர் டீ.பீ.ஜீ. குமாரசிறி சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வீதியில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படுவதால் வாகனப் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக ஹற்றனில் இருந்து நுவரெலியா நோக்கிச் செல்வதற்காக மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

வீதி விஸ்தரிப்பு பணிகள் இடம்பெறுவதால் இருபுறங்களிலும் மண்ணை வெட்டி அகற்றும் நடவடிக்கைகளில் கனரக வாக னங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் அந்த வீதியூடாக போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஒரே காணியை 41 தடவை விற்பனை செய்த கில்லாடிப் பெண்

பூகொட ஓவிட்டிக மவிலுள்ள 5.5 ஏக்கர் காணியை 41 பேருக்கு விற்பனை செய்ததாக சந்தே கிக்கப்படும் 36 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிற்குச் சென்று மீண்டும் இலங்கை திரும்பிய நிலையில் இவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

நுகேகொடை, மஹரகம, கொஸ்கம, பூகொட, மொறட்டுவை, ஹோமாகம ஆகிய பிரதேசங் களை சேர்ந்த பல வர்த்த கர்கள் ஒரே காணியை 5 மில்லியன் ரூபா வரை கொடுத்து வாங்கியதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்திலுள்ளவர்களின் உதவியை இப்பெண் பெற்றுள்ளதாக மேற்படி வர்த்தகர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கம்பஹா பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## தப்பியோடிய கைதி மீண்டும் கைது

மட்டக்களப்பு, செப்.10

வீரவில திறந்த வெளி சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய சிறைக் கைதி ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை திருடிய குற்றத்துக்காக மேற்படி நபர் இரண்டாண்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வந்தார். இந்த நிலையில் அந்த சந்தேக நபர் கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி தப்பியோடியிருந்தார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து இந்தநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடே நான் தேர்தலில் பெற்ற வெற்றி

### கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர் சுபைர்

அம்பாறை, செப். 10

"என் கடந்த கால சேவையில் மக்கள் கொண்ட திருப்தி, நம்பிக்கையின் வெளிப்பாடு காரணமாகவே நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணசபைக்கு உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளேன்" என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுகந்திரக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எம்.எஸ். சுபைர் தெரிவித்தார். இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

"கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான் அடைந்துள்ள வெற்றி எம் மக்களின் வெற்றியாகும். அவர்கள் என்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு மாகும்.

இதற்காக எனக்கு வாக்களித்து உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட வழி வகுத்த சகலமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக காத்தான்குடி, கல்குடா பிரதேச மக்களுக்கும் விசேடமாக ஏறாவூர் பிரதேச மக்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளதுடன் என் பெரு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேவேளை எமது கட்சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாட்பதியுதீன் வகுத்த வியூகம் மூலம், [illegible] சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கியமக்கள் சுகந்திரக்கூட்டமைப்பில் போட்டியிட்ட மூவரும்வெற்றிபெற்றுள்ளோம்.

இது எம் தலைவர் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் அரசியல் நேர்மைக்கும், அனுபவத்திற்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

எனது அரசியல் வழிகாட்டிகளான முன்னாள் அமைச்சர் அமீரலி, பிரதிஅமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோரையும் இச்சந்தர்பத்தில் நன்றிப்பெருக்குடன் நினைவுகூர வேண்டிய கடப்பாடும் எனக்குண்டு

எனது அரசியல் வாழ்க்கை ஆறுவருடங்களேயாயினும் இந்த அரசியல் தலைவர்களின் வழிகாட்டலும், மக்கள் தந்த உற்சாகமும் எனது தன்னலமற்ற சேவைகளுக்கு உந்துசக்தியாக இருந்துவருகின்றது. என்றுள்ளது. (வ-30)

## சட்டவிரோதமாக ஆஸி செல்ல முயன்றோர் கரையில் மறைந்திருந்த போது கைது

### படகு கோளாறு காரணமாம்

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்று படகு கோளாறு காரணமாக மீண்டும் கரைக்குத் திரும்பி காட்டில் மறைந் திருந்த சிலர் திஸ்ஸமகாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து திஸ்ஸ மகாராம பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

ஆமதுவ கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த ரோலர் படகொன்றை மீட்ட பொலிஸார் அருகில் உள்ள காட்டில் மறைந்திருந்த சிலரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10 சிங்களவர்களும் 7 தமிழர்களும் ஒரு முஸ்லிம் நபரும் அடங்குவர்.

இவர்கள் கடந்த 15ஆம் திகதி ஹுங்கம - ரெக்கவ பிரதேச கடல் வழியாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

மேலும் விசாரித்த போது, பயணித்த படகில் 32 பேர் இருந்ததாகவும் படகு கோளாறு காரணமாக மீண்டும் கரைக்குத் திரும்பியதாகவும் சிலர் அருகில் உள்ள காட்டில் தங்கியிருக்கலாம் அல்லது தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கரை திரும்பிய நபர்களை அழைத்துச் செல்ல வென்னப்புவ பகுதியில் இருந்து வந்த 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கண்டேனர் வாகனம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.திஸ்ஸமகாராம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனதில் புத்துணர்வு பிறக்கும். வேற்றுமை பாராமல் பலருக்கும் உதவுவீர்கள். தொழில் வளம் அபிவிருத்தியாகும். தாராள பணவரவில் முக்கிய தேவை நிறைவேறும். பூர்வீக சொத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். குடும்பப் பெரியவர்களின் வார்த்தையை மதித்து செயல்படுவது நல்லது. கூடுதல் உழைப்பு தொழில் தடையை சரி செய்யும். புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம். எதிர்கால நலன் பற்றிய அக்கறை வளரும்.

**மிதுனம்:** நீங்கள் உயர்ந்த செயல்களால் புகழ் பெறுவீர்கள். வாழ்க்கைத்தரம் உயர தகுந்த வழி பிறக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. உடல் பிணி தொந்தரவு குறையும்.

**கடகம்:** நீங்கள் திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். முக்கிய தருணத்தில் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரும். பணவரவை விடசெலவு அதிகரிக்கும். நீண்டநாள் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**சிங்கம்:** உங்கள் ஆலோசனை மற்றவர்களுக்கு நல்வழி காட்டும். அளவுடன் பேசி நற்பெயரை பாதுகாப்பீர்கள். தொழில் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். வாழ்க்கை வசதி திருப்திகரமாக இருக்கும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் வளரும்.

**கன்னி:** பிறர் நலத்தில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். சமயோசித பேச்சு அனுகூல பலன் உருவாக்கும். தொழில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். பணவரவும், நன்மையும் மனதை மகிழ்விக்கும். அதிர்ஷ்டவசமாக கூடுதல் சொத்து சேர்க்கை உண்டாகும்.

**நாளை**

ஆவணி - 26 செவ்வாய்க்கிழமை 11.09.2012
திதி: தசமி மு.ப. 09.27 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி. இ. 02.39 வரை
சுபநேரம்: 10.33- 12.03 வரை
ராகு காலம்: 03.03- 04.33 வரை

**துலாம்:** தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். அயலவருடன் தேவையற்ற பேச்சைத் தவிர்க்கவும். தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். பணவரவு குறைவதால் செலவுகளை ஈடுகட்ட சிறு அளவில் பணக்கடன் பெறுவீர்கள். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** பிடிவாத குணத்தால் சிலரது அதிருப்திக்கு உட்படுவீர்கள். முக்கிய பணியில் கூடுதல் கவனம் வேண்டும். தொழிலில் வழக்கத்திற்கு மாறான தன்மை இருக்கும். பணச் செலவு அதிகரிக்கும். அடுத்தவர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்கக் கூடாது.

**தனுசு:** உங்கள் செயலில் கூடுதல் அறிவுத்திறன் பரிமளிக்கும். உங்கள் உதவியை நண்பர், சகதொழில் சார்ந்தவர் பெற விரும்புவர். தொழில் வளர்ச்சியால் வாழ்க்கை வசதி அதிகரிக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப்போவர்.

**மகரம்:** உங்கள் மனதில் கூடுதல் உற்சாகம் பிறக்கும். எதிரியின் கெடுசெயலை சமயோசிதமாக மாற்றுவீர்கள். தொழிலில் வளர்ச்சித்தன்மை மேலோங்கும். உபரி பணவருமானம் கிடைக்கும். சுற்றுலா சென்று வர பயணத்திட்டம் உருவாகும்.

**கும்பம்:** நீங்கள் ஒவ்வொரு செயலையும் கூடுதல் பொறுப்புடன் நிறைவேற்றுவது அவசியம். சுற்றுப்புற சூழ்நிலை சிறு அளவில் தொந்தரவு தரலாம். தொழில்வளர்ச்சி பணக்கடன் பெறுவதைத் தவிர்ப்பது நல்லது. பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் அருமை, பெருமை செயல்களை பிறரிடம் பேசுவதால் அவமதிப்பு ஏற்படலாம. மௌனம் பின்பற்றி சொந்தப்பணிகளை பொறுப்புடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். பணவரவுக்கு காத்திருக்கும் நிலை உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 2 | | | 7 | 1 |
| | | | 8 | | | 6 | 3 | 9 |
| 1 | | | | 7 | | | 5 | |
| 6 | 1 | | | 8 | 7 | | 4 | 3 |
| | 7 | | | | | | 1 | |
| 3 | 9 | | 5 | 1 | | | 2 | 6 |
| | 2 | | | 6 | | | | 5 |
| 7 | 8 | 1 | | | 5 | | | |
| 9 | 5 | | | 4 | | 3 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 3 | 7 | 2 | 4 | 1 | 8 |
| 1 | 7 | 4 | 8 | 9 | 5 | 2 | 6 | 3 |
| 8 | 2 | 3 | 4 | 6 | 1 | 5 | 7 | 9 |
| 7 | 4 | 2 | 5 | 8 | 3 | 1 | 9 | 6 |
| 6 | 8 | 5 | 7 | 1 | 9 | 3 | 2 | 4 |
| 9 | 3 | 1 | 2 | 4 | 6 | 7 | 8 | 5 |
| 4 | 1 | 7 | 9 | 5 | 8 | 6 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 6 | 2 | 7 | 8 | 4 | 1 |
| 2 | 6 | 8 | 1 | 3 | 4 | 9 | 5 | 7 |

சடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஈழத்தின் ஏற்றமிகு இசைத்தூண் ஒன்று சரிந்தது

அமரர்

## சிவசிதம்பரம் பரம்தில்லைராஜா

தோற்றம் 14★11★1925

மறைவு 11★08★2012



ஈழத்து இசை மரபின் அசையாத் தூண்களில் ஒன்று சரிந்து விட்டது
தனது வலிமை மிக்க இசைஞானத்தால்
ஈழத்து இசை ரசிகர்களை ஆண்டு நின்ற பரம்தில்லைராஜா அவர்களின் மறைவுச் செய்தி
ஈழத்து இசை உலகை அதிரச் செய்தது
கணீரென்ற நாதம் சேர்ந்த தன் குரலால் கேட்போர் அனைவரையும் மயங்க வைத்தவர்
திரு. பரம்தில்லைராஜா அவர்கள்
ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து இசை விழாக்களின்
நிறைவுக்கச்சேரி பரம்தில்லைராஜா அவர்களது தான் என்பது எழுதப்படாத சட்டமாகவே இருந்தது
இசைஞானத்தைப் பரம்பரையாய்ப் பெற்றவர் இவர்
வட இலங்கைச் சங்கீத சபையை ஸ்தாபித்தவர்களுள் இவரது தந்தையாரும் ஒருவர்
பிற்காலத்தில் இலங்கை சங்கீத வித்வத் சபையை ஸ்தாபிக்க இவரும் முன் நின்று உழைத்தார்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில்
எம்.ஏ. பட்டம் பெற்றுக்கொண்ட பரம்தில்லைராஜா அவர்கள்
இசை உலகில் தனக்கென ஒரு தனிப்பாணியை அமைத்துக்கொண்டு
அப்பாணியில் பல மாணவர்களை தயார் செய்தவர்
இசை சார்ந்த பல அமைப்புக்களிலும் இணைந்து செயலாற்றி நற்பணி புரிந்தவர்
எனது தந்தையார் வயலின் வித்துவான் வி.கே. குமாரசாமி அவர்கள்
அமரரோடு நெருங்கிய நட்புப் பூண்டிருந்தார்
அந்நட்பினால் அருகருகில் இருந்த வீடுகளில்
அவர்கள் குடும்பமும் எங்கள் குடும்பமும் ஒரு காலத்தில் வசித்து வந்தன
அக்காலத்தில் இந்தியாவிலிருந்து தமிழக இசைக்கலைஞர்களை மட்டுமல்லாது
வடநாட்டு இசைக்கலைஞர்களையும் அழைத்து வந்து யாழ்மண்ணில் பாட வைத்தவர் அவர்
நாங்கள் கம்பன் கழகம் ஆரம்பித்த பின்பு
முதன்முதலாக நாம் நடத்திய பாரதி விழாவில்
பாரதி பாடல்களை மட்டும் பாடி எமது உள்ளம் கலந்தார்
அத்தோடல்லாமல் கம்பன் கழகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும்
தவறாது கலந்து கொண்டு எம்மை ஊக்குவித்தார்
எமது கிளைக்கழகமாகிய அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் அண்மையில் தனது கம்பன் விழாவில்
பரம்தில்லைராஜா அவர்களைப் பாராட்டி கௌரவித்தது
அம்மகிழ்ச்சி நீங்கும் முன்பாக அவரது மறைவுச்செய்தி வந்து எம்மைத் துயரில் ஆழ்த்திற்று
அமரர் பரம்தில்லைராஜாவின் மறைவு ஈழத்து இசையுலகிற்கு பேரிழப்பு என்பதில் எவ்வித ஐயமுமில்லை
அவ் இசை மேதையின் ஆத்ம சாந்திக்காய் கம்பன் கழகத்தின் சார்பிலும்
எங்கள் குடும்பத்தின் சார்பிலும் எனது ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

**மருத்துவர்- கு.இரத்தினகுமார் குடும்பத்தினர்**

**ஆஸ்திரேலியா**

[சி/3116][45-6-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்புள்ள நகர் வெள்ளத்தடுப்பு திட்டத்தைச் செயற்படுத்த முடிவு

காலத்துக்குக் காலம் தம்புள்ள நகரில் ஏற்படும் வெள்ளத்தாக்கத்திலிருந்து தம்புள்ள நகரைப் பாதுகாக்க தம்மென்னா ஆற்றை அபிவிருத்தி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தம்மென்னா ஆற்றை அபிவிருத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள ஊழல் மற்றும் மோசடிகளைக் கண்டறிய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரி வித்தார்.

'தம்மென்னா' ஆற்றின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற போது ஊழல் மோசடிகள் என்பன இடம் பெற்றுள்ளன என்று கூறி தம்புள்ள மாநகர சபையின் பிரதி மேயர் உட்பட ஆளுங் கட்சி உறுப்பினர்கள் ஆறு பேர் ஒப்பமிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு செய்த முறைப்பாட்டை அடுத்தே மேற்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார். (வ)



கோட்டே, ரஜமஹா விகாரையின் வருடாந்த தலதா பெரஹரா நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

## தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளதாம்

### தேர்தல் கண்காணிப்பாளர்கள்

பல்வேறு பகுதிகளில் தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல் வெற்றியை அமைதியான முறையில் நடத்துமாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார். தேர்தல் முடிவடைந்த பின்னர் நேற்றைய தினம் அட்டாளைச்சேனை பகுதியில் தாக்குதல் சம்பவ மொன்று குறித்து முறைப் பாடு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது தவிர, மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் தகவல் பதிவாகியது.

தாக்குதலுக்கு இலக்கானவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றார்.

இதுதவிர வேறு பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்பதுடன் தேர்தல் காலப் பகுதியில் அசம்பாவிதங்கள் பதிவாகிய இடங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தி பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளவும்-ஏன்றார். (வ)

## கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து தொடர்ந்தும் எண்ணெய்க் கசிவு

பாணந்துறையை அண்மித்த கடற்பரப்பில் மூழ்கிய கப்பலில் இருந்து தொடர்ந்தும் சிறு அளவில் எண்ணெய் கசிவதாக சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபைப் பொது முகாமையாளர் ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே கசிந்த எண்ணெய் இரண்டு தொடக்கம் மூன்று கிலோமீற்றர் தூரத்துக்குப் பரவியுள்ளது. குறித்த கப்பல் கடலில் மூழ்குவதற்கு காரணமான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

வணிக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் குற்றவாளிகளிடமிருந்து 4 மில்லியன் தொடக்கம் 15 மில்லியன் ரூபா வரை அபராதம் அறவிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. எண்ணெய் கசிவு காரணமாக சமுத்திர வளத் திற்கு ஏற்படுகின்ற பாதிப்பால் எதிர்நோக்க நேரிடும் பொருளாதார நட்டத்தை ஈடு செய்யும் வகையிலும் அபராதம் அறவிட முடியும் -என்றார். (வ)

# ஆலயங்கள் பேரில் நாட்டில் மீண்டும் இரத்தம் சிந்த இடமளிக்கமாட்டேன்

### பிரபாகரனுக்கே சவால் விட்டவன் நான்-மேர்வின் வீராவேசம்

முப்பது வருடங்களாக இரத்தம் சிந்திய இந்த நாட்டில் ஆலயங்கள் என்ற பெயரில் மீண்டும் இரத்தம் சிந்த நான் ஒரு போதும் இடமளிக்கமாட்டேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பலி பூசையை நிறுத்தினால்
தெய்வத்தின் கோபத்
துக்குள்ளாக வேண்டுமென
யாராவது கூறினால்
தெய்வம் எனது கழுத்தை
வெட்டட்டும். எனது
இரத்தத்தை உறிஞ்சட்டும்.



சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நடைபெறும் பலி பூசையை நிறுத்தும்படி ஓமாரே காசியப்பதேரர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் இந்த விடயத்தை சிலாபம் நீதி மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தச்சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர் மேர்வின் சில்வா அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனுக்கே நான் சவால் விடுத்திருக்கின்றேன். அதேபோல் நான் எவ்வாறாயினும் இந்த மிருக பலி பூசையைத் தடுத்து நிறுத்தியே தீருவேன். முதலில் நாம் நீதிமன்றத்தை நாடுவோம், மதிக் கின்றோம். இருந்தும் நான் மிருகங்கள் பலியிடுவதை எவ்வாறாயினும் தடுத்து நிறுத்துவேன் என்று உறுதி யளிக்கிறேன்.

பலி பூசையை நிறுத்தினால் தெய்வத்தின் கோபத்துக்குள்ளாக வேண்டுமென யாராவது கூறினால் தெய்வம் எனது கழுத்தை வெட்டட்டும். எனது இரத் தத்தை உறிஞ்சட்டும். எந்த விதத்திலாவது நான் இந்த மிருக பலி பூசையைத் தடுத்து நிறுத்துவேன்-என்றார். (வ)

## போலி நாணயத்தாள்களுடன் நால்வர் கைது

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த நால்வர் நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா மதிக்கத்தக்க போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 149 போலி ஆயிரம் ரூபா நாணயத் தாள்களும் அடங்குகின்றன. கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் 30 வயதுக்கும், 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, போலி நாண யத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர். (வ)


## ஹக்கீமுக்கு எதிராக நடவடிக்கை அந்தக் கட்சித் தீர்மானம்

கொழும்பு, செப்.10

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக கட்சியின் அதி உயர் பீடம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள் இந்த யோசனையை முன்வைக்க உள்ளனர்.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறி ஹக்கீம் செயற்பட்டு வருகிறார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



மாகாணசபைத் தேர்தலின்போது கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஆளும் கட்சியினர் பிரயோகித்த அழுத்தங்களுக்கு, கட்சித் தலைவர் உரிய பதிலடி கொடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வேண்டுமென்றே ஆளும் கட்சிக்கு எதிராக குரல் கொடுக்காது ஹக்கீம் மௌனம் சாதித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் யாப்பு விதிகளில் சந்தர்ப்பம் காணப்படுவதாக சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## தமிழ் இளைஞர்களே தொடர்ந்தும் ஏமாறாதீர்

### ஆஸி. பயணம்குறித்து குகவரதன் ஆலோசனை

வடபகுதியில் தமிழ் மக்களின் குழுமத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சதித் திட்டமே ஆஸ்திரேலிய புகலிடப் பயணங்களாகும். இதற்கு தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் ஏமாறாது தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ். குகவரதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரால் அனைத்தையும் இழந்த தமிழ் சமூகத்தில் எஞ்சியுள்ள இளம் சமூகத் தையும் நடுத்தெருவில் தவிக்க விடுவதே இந்தப்பயணங்களில் இலக்காகும்.

இன்று நாட்டில் நாளிதழ்களிலும், இலத்திரனியல் ஊடங்களிலும் நாம் வாசிக்கும், கேட்கும், பார்க்கும் செய்திகளில் ஆஸ்திரேலி[illegible] சட்டவிரோதமாகச் சென்ற குழுவினர் கைது என் பதாகும்.

காலி, நீர்கொழும்பு உட்பட பல பகுதிகளில் இவ்வாறான படகுகள் படையினரால் சுற்றி வளைக்கப்படு கின்றன.

இவ்வாறு பயணிப்போரில் மூவினத்தவர்களும் இருந்தாலும் அதிக எண் ணிக்கையில் வடபகுதி தமிழ் இளைஞர்கள், யுவதி கள், குடும்பஸ்தர்களே காணப்படுகின்றனர்.

### சிறைகளில் வாடும் நிலை

படகுகளில் பயணம் செய்த பெரும்பாலான வடபகுதித் தமிழர்கள் தமது பணத்தையும் இழந்து சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவிக்கின் றனர்.

வடபகுதி தமிழ் இளைஞர்களை நிர்க்கதியாக்கும் திட்டமிடப்பட்ட நடவடிக்கையே ஆஸ்திரேலிய புகலிடப் பயணமாகும்.

போரால் பாதிக்கப் பட்டு நிர்க்கதியாகி நிற்கும் வடபகுதி தமிழ் மக்கள் குழுமத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அங்கு பெரும்பான்மை இனத்தவரை குடியேற்றி தமிழ் சமூ கத்தை முற்றாக இல்லா தொழிக்கும் நோக்கி லேயே அதிகார குழுவொன்று இந்தத்திட் டத்தை முன்னெடுத்து வருகிறது.

தமிழ் சமூகத்தை பொருளாதார ரீதியில் முடக்கி மூடர்களாக்கு வதன் மூலம் அந்தச் சமூகம் உரிமைகளை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்து நடுத்தெருவில் நிற்கும். இதனையே இந்தக் குழுவினர் எதிர்பார்க்கின்றனர்.

எமது சமூகம் போரால் அனைத்தையும் இழந்து விட்டது. எஞ்சியுள்ள இளம் சமூகமும் அழிய வேண்டுமா?

சிந்தியுங்கள். ஆஸ்திரேலிய புகலிடம்' என்ற மாயையில் சிக்கி பணத் தையும் உரிமைகளையும் இழந்து விடாதீர்கள் மாறாக சுயதொழில்கள் அல்லது இலங்கைக்குள் தொழில் களில் ஈடுபடுங்கள். இல்லாவிட் டால் சட்ட ரீதியாக வெளிநாடு செல்லுங்கள்-என்றார். (வ)

## தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.10

சுமார் 60 லட்சத்துக் கும் அதிகமான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் தனது உடலில் 8 தங்க பிஸ்கட்டுகளை மறைத்து இந்தியாவின் மும்பை நகருக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்கள் சுமார் ஒரு கிலோகிராம் நிறையைக் கொண்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சந்தேகநபருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு அவரை விடுவிக்கப் பட்டுள்ளதுடன் தங்க பிஸ்கட்டுகள் அரச உடைமையாக்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு நாடுகளில் அதிக சம்பளத்துடன் தொழில்வாய்ப்பு

பெண்கள் (கணவன்/ மனைவி Couples) சவுதி அரேபியா/ கட்டார்/ ஓமான் போன்ற நாடுகளிலுள்ள செல்வந்த வீடுகளில் தொழில்வாய்ப்பு, அதிக சம்பளம், உணவு தங்குமிடம், மருத்துவம் இலவசம் Passport இல்லாதவர்களுக்கு Passport பெற்றுக்கொடுக்கப்படும் (மிக குறுகிய காலத்தில் பயணம்) விரையுங்கள்.

Lanka Voice, Vavuniya,
T.P. 077 147 2484, 071 288 6525.
(20876) (45.6.7)


# மரண அறிவித்தல்

## திருமதி கலாவதி சுப்பிரமணியம்



இல.26,காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி சுப்பிரமணியம் கடந்த (08.09.2012) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா சங்கரபாலசூரியர்- செல்வமணிஅம்மாள் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற புலோலியூர் பிரபலவர்த்தகர் சோமசுந்தரம் சரவணமுத்து-சிவகாமசுந்தரி தம்பதியரின் மருமகளும் சுப்பிரமணியம்(முன்னாள் கணக்காளர், வர்த்தகத் திணைக்களம், சிரேஸ்ட கணக்காய்வாளர் V.அரியரட்ணம், (அரியரட்ணம் அன் கொம்பனி-Cahrtered Accountant) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சுந்தரவதனி பவானந்தன் (டென்மார்க்), சுந்தரேசன்(UK),திருமதி செல்வகௌரி பாஸ்கரன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானந்தன்(டென்மார்க்),பாஸ்கரன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவாதரணி, பவகருணி, பவசங்கர், ஆதித் தியா ஆகியோரின் பேர்த்தியும், நவபாலசூரியர்,திருமதி அமிர்தவல்லி, சிவபாலசூரியர்(கனடா), குகபாலசூரியர் (USA), காலஞ்சென்ற செல்வி.சாந்தவல்லி,சசிபாலசூரியர் ஆகியோரின் சசோதரியும்,கண்மணி, திருத்தணிகாசலம், சுசிலா, யசோதா, காலஞ்சென்ற சோமசுந்தரம், திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2012) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரவணமுத்து சுப்பிரமணியம் (கணவர்)
இல.26, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,யாழ்ப்பாணம்.
(சி/3174)(5-6-7)


## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு A9 வீதிக்கு அருகில் மாவடிப் பிள்ளையார் கோயில் மேற்கில் அமைந்துள்ள 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: R. நடேசன் - தொ.பே. 075 4733 902
(21521) (45.6.7)

## நாஹா மருத்துவ நிலையம்

நீராதமூட்டு வாதம், அல்சர், ஆஸ்மா, சிறுநீரக செயலிழப்பு, புண்கள், குழந்தை இன்மைக்கான விசேட சிகிச்சையும்
T.P : 077 321 2740
கிழமை நாள் : 3pm - 7pm
சனி, ஞாயிறு : 8.30 - 2 pm
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,
வங்கி முன் லேன், மானிப்பாய் (ஜெகபதிவீடு)
(22730)(6-7-5)

## RENT - A - CAR

* Self drive
* With driver
* Wedding & Special events
* Special tour packages
* Weekly, monthly & term rental

Please Contact :-
0772208048, 0771190011
(22467)(3.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1972 - பூரட்டாதி 3 ஆம் பாதம், பாவம் 10¼ தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் எவ்வித தீய பழக்கங்களுமற்ற, நல்லொழுக்கம் உடைய மணமகனுக்கு மண மகள் தேவை.
மணமகனுக்கு அரச உத்தியோகம் உள்ள பெண் விரும்பத் தக்கது.
தொடர்பு : 077 3587156
(22565)(6-7-8)

## மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்

**Knowledge Universe**
No 75,Temple Road,Jaffna
Call : 0213208342/0776458253
www.kugroup.info (சி/3129)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தேவை

யாழ். மாவட்டத்திற்குள் பொருள்களை விநியோகிக்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு

**பணம் வசூலிப்பவர் தேவை (Cash Collecter)**

சிட்டையின் பிரகாரம் பொருள்களை விநியோகித்து பணத்தினை வசூலிக்க வேண்டும்.
தொடர்பு: 021 4925 102
(22731) (45.6.7)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயிலில் இருந்து 1½ km தூரத்திலும் யாழ். கல்வி வலயத்துக்கு அருகில் இலக்கம் 151, பிரதான செம்மணி வீதி, ஓரமாக இரண்டு (02) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :077 1851803
(22658)(6-7-8)



# நன்றி நவிலல்

காலஞ்சென்றவர்களான மூளாய் பிரபல சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான தாமோதரம்பிள்ளை வன்னியநாதன் - வரலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனாகிய ஞானசூரியன் (அப்பன்) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டும் அறிந்தும் தொலை பேசி மூலமும், தந்தி மூலமும், (03.09.2012) அன்று நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் நேரில் வந்து கவலையும் அனுதாபமும் தெரிவித்து எங்கள் துயரில் பங்கு கொண்ட - கொள்கின்ற அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஞானவாசம்",
மூளாய், சுழிபுரம்
குடும்பத்தினர்.
(22733)(6.7.8)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் கமலாம்பாள் (கிளி)



கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலாம்பாள் நேற்று முன்தினம் (08.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மனோன்மணி, அன்னபூரணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவா, சந்திரா, ஈஸ்வரி, சன்நிதிநாதன் (கனடா), சித்திரா ஆகியோரின் அன்புத்தாயும், யேசுதாசன், பத்மநாதன், மகாதேவன், ஜெயந்திமதி (கனடா), நடராசா ஆகியோரின் அன்பு மாமியும், தாட்சாயினி (சுவிஸ்), தாரணி, தயாலினி (பிரான்ஸ்), சிற்சபேசன் (கொழும்பு), பிரதாஜினி (லண்டன்), சிற்சொறுபன் (பிரான்ஸ்), மயூரனி, கிருபாலினி, துஸ்யந்தன் (கனடா), யதுர்சன் (கனடா), சுயந்தன், சுலோஜன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிதுர்சன் (சுவிஸ்), நிஷா (சுவிஸ்), ஜானுஜா (லண்டன்), லயா (லண்டன்), தனிஸ் (லண்டன்), ஸ்ரேயா (பிரான்ஸ்), லயன் (பிரான்ஸ்), சக்ஷன் (பிரான்ஸ்), சிந்துஜா, அபிலாஷினி, பிரதீசன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி பூனாவளை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கறைப்பிட்டி பிள்ளையார் கோயிலடி, அராலி தெற்கு, அராலி.
(சி/3180) (45.6.7)

தகவல்:
**சன்நிதிநாதன்**
**(மகன்- கனடா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## மூன்று மண் வீதிகளுக்கு நல்லகாலம் பிறக்கிறது

தென்மராட்சி, செப்.10

பளைப் பிரதேசத்தில் மணல் வீதியாக மாறியுள்ள மூன்று வீதிகள் 'பிரக்டிக்கல் அக்ஸன்' நிறுவனத்தினரால் புனரமைக்கப்படவுள்ளன.

பண்டமாவடி- சின்னத் தாளையடி வீதி, பாலமோட்டை- சோரன் பற்று வீதி, அறத்தி நகர் பிரதான வீதி ஆகிய மூன்று வீதிகளும் ஊரி போட்டு புனரமைக்க 'பிரக்டிக்கல் அக்ஸன்' நிறுவனம் முன்வந்துள்ளதாக பளைப் பிரதேச சபைத் தலைவர் எவ்.டி. அன்ரன் தெரிவித்தார். (ம-90)

## வல்லிபுரத்தில் வெள்ளியன்று கொடியேற்றம்

வடமராட்சி, செப்.10

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் தேர்த் திருவிழா 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், சமுத்திரத் தீர்த்தம் 29 ஆம் திகதி சனிக்கிழமையும், கேணித் தீர்த்தம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் சமயக் கோட்பாட்டுக்கு கலாசாரத்துக்கும் ஏற்ற வகையில் ஆடைகள் அணிந்தும், பெறுமதியான தங்க ஆபரணங்களைத் தவிர்த்தும் உற்சவ காலங்களில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3-8-122)

## மணவாளக்கோல சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.10

மண்கும்பான்- வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல திருவிழாவும் 1008 சங்காபிஷேகமும் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 7மணிமுதல் நடைபெறவுள்ளது. (3)

## வடக்கின் அபிவிருத்தியை ஆராய ஆபிரிக்கக்குழு யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், செப்.9

தென்னாபிரிக்க பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வர்த்தக தூதுக் குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக இந்தக் குழுவினர் வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் குழுவினரை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அந்தக் குழுவினருடனான சந்திப்பு யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றது. அதன்போது வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி தொடர்பாக பிரதம செயலாளர், அரச அதிபர் ஆகியோரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அக்குழுவினர் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்று அதனைப் பார்வையிட்டனர் வேறு சில இடங்களுக்கும் அவர்கள் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர். (ம-14)

## வரணி வடக்கு பாடசாலையில் திருட்டு

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் தண்ணீர் தாங்கியில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டர் கடந்த வாரம் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மக்கள் இடப்பெயர்வின்போதும், இந்தப் பாடசாலையின் பாவனையில் இருந்த மின் ஜெனரேட்டர் களவாடப்பட்டது. அன்று தொடக்கம் 2011 ஆம் ஆண்டு இறுதிவரை இந்தப் பாடசாலை மின்மோட்டர் ஏதும் இல்லாமல் இயங்கியதுடன் 2012 இல் திருத்த வேலைகளுக்கு கல்வித் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கப்பட்டதுடன், புதிய மின்சார மோட்டார் ஒன்றும் பொருத்தப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் குடி தண்ணீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டது. இந்த நிலையில் மேற்படி மின்சார மோட்டரையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-122)

## நடமாடும் சேவை மூலம் பயன் பெற்றனர் 400 பேர்

வடமராட்சி, செப்.10

பருத்தித்துறை நகரசபை முதலாம் வட்டாரத்தில் முதன் முதலாக நடத்திய நடமாடும் சேவையில் 400 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என்று பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தெரிவித்தார்.

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் சைக்கிள்கள், வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கல் ஆதன இடாப்புகள் பெயர் மாற்றம், கட்டடங்கள் அமைப்பது தொடர்பான சட்ட ஆலோசனைகள், ஆதன வரிகட்டல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வரியிறுப்பாளர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நடமாடும் சேவைக்கு வரியிறுப்பாளர்களின் வரவேற்புகிடைத்ததைத்தொடர்ந்து ஏனைய வட்டாரங்களிலும் வரியிறுப்பாளர்களுக்கான நடமாடும் சேவைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

**நடமாடும் சேவையில் சைக்கிள்கள், வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கல் ஆதன இடாப்புகள் பெயர் மாற்றம், கட்டடங்கள் அமைப்பது தொடர்பான சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.**

நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுடன் சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (3)

## ஆஸி. செல்ல முற்பட்ட 95 இலங்கையரும் பணம் பறித்த 13 பேரும் கைது

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த இலங்கை அகதிகள் இந்தியாவின் கர்நாடகா மாநிலப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 95 இலங்கை அகதிகள் உள்ளடங்குகின்றனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 22 பெண்களும், 6 சிறுவர்களும் உள்ளனர்.

இதேவேளை, இந்த அகதிகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிப் பணம் பறித்த 13 சந்தேகநபர்களையும் கர்நாடகா மாநிலப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (3)

இணையத்தள கற்கைநெறிகள் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி
- Professional Web Designing (40 hours)
- Professional Web Development (120 hours)
- Web-Based System Development

உங்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் கற்கைநெறி ஒன்றினைக் கற்றுக் கொள்ளுங்கள். இணையத் துறையில் முன்னணி நிறுவனத்துடன் இன்றே இணையுங்கள். எமது கற்கை நெறி உங்களை ஒரு சிறந்த இணையத்தள வடிவமைப்பாளர் ஆக்குவதுடன் நேர்த்தியான வழிமுறைகளில் இணையம் மூலம் பணம் ஈட்டுவதற்கும் வழிகாட்டுகின்றது.

webster networks MAKING DREAMS REALITY
Webstar Info Systems (Pvt) Ltd
(22719)
இல 94, யாழ்-மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]
021 222 0261, 0779 471 771 www.websternetworks.lk

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
கர்ஜன்




கண்ணகுமார் - புஷ்பமாலா தம்பதியின் செல்வப் புதல்வன் கர்ஜன் இன்று (10.09.2012) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவர் கற்கோவளம் ஸ்ரீகும்பி முருகன் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களோடும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்று அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், அத்தான்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றனர்.

கற்கோவளம்,
பருத்தித்துறை.

தகவல்:
கண்ணகுமார் - புஷ்பமாலா தம்பதியினர்,
077 2298914

(22595)(6.7.8)

## திருட்டுப்போனது ஆடு

வரணி வடக்கு, கறுக்காய் பிரதேசத்தில் கடந்தவாரம் இரண்டு பால் ஆடுகள் களவாடப்பட்டுள்ளன. வீட்டில் கட்டியிருந்த நிலையில் இந்த ஆடுகள் களவாடப்பட்டு சிறு வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேற்படிசம்பவம்இடம்பெற்ற போது ஆள் அரவம் கேட்டு தான் எழுந்ததாகவும் அப்போது வாகனம் ஒன்று புறப்பட்டுச் சென்றதாகவும் ஆட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (3-122)

## விற்பனை நிலையங்களுக்கு அனுமதி பெறுக

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய உற்சவ காலப் பகுதியில் தற்காலிகமாக அமைக்கவுள்ள ஐஸ்கிறீம், திண்பண்டங்கள் , கச்சான் கடலைகள் நடமாடும் உணவுப் பொருள் விற்பனையாளரும் உரிமையாளர்களும் ஒவ்வொரு விற்பனை நிலையத்துக்குமாக அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதி பெறப்பட வேண்டும் அதே வேளை வேலணை பிரதேசசபையின்தலைவர் எஸ். சிவராசா, அறிவித்துள்ளனர். (3-7)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கைதடியைச் சேர்ந்த தயாகரன் சங்கீதா தம்பதியரின் செல்வப்புதல்வன் கஸ்வின் இன்று (10.09.2012) திங்கட் கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை கனடாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர் மாமா - மாமி குடும்பத்தினர் (ஜேர்மனி), சித்தப்பா (கனடா), அம்மப்பா, அம்மம்மா குடும்பத்தினர் (லண்டன்), அம்மப்பா - அம்மம்மா குடும்பத்தினர் (ஜேர்மனி), இலங்கையில் வசிக்கும் பூட்டியம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார், உற்றார், உறவினர் அனைவரும் இணுங்கித் தோட்ட கந்தன் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி

திரு.திருமதி. மதியாபரணம் குடும்பத்தினர்,
(அம்மப்பா, அம்மம்மா)

(சி/3179)(6.7.8)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
ஆதன பெயர் மாற்றம்

**வட்டாரம்:06**
**யாழ். மானிப்பாய் வீதி,**
**ஆதன இல. 133.**

வட்டாரம் 06, யாழ். மானிப்பாய் வீதி, ஆதன இலக்கம் 133 இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று, சுதுமலை இறை "நாவிவரக்காடு" எனும் பெயருள்ள, விஸ்தீரணம் நிலப்பரப்பு (4) நான்கு கொம்பு ஆதனம்) ஆதனமாவது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை கூளாவடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் மகேஸ்வரன் என்பவரால், அறுதியாக விற்கப்பட்டு, ஜேக்கப் நிக்சன் பேரறக்ஸ்கம் பெண் பெவிற்றாவும் ஆகிய இவர்களால் குறித்த ஆதனம், பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 3943 ஆம் இலக்க, 14.06.2010ஆம் திகதிய அறுதி உறுதி மூலம், குறித்த ஆதனமாவது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி, எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாவிடத்து, இவ்வாதனம் ஜேக்கப் நிக்சன் பேரறக்ஸ்கம் பெண் பெவிற்றாவும் ஆகியவர்களின் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(22713) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஓர் ஆலயம்...

உயிர் கொடுத்து உலகுக்கு அளிப்பவள்
உதிரத்தை பாலாக ஊட்டி வளர்ப்பவள்
உறவுகள் கூறி உலவ விடுபவள்– என்
உயிர்மேல் தன் உயிரை வைத்து பாதுகாப்பவள்

தந்தையைக் காட்டி தாலாட்டுப் பாடுவாள்
தன்னை வருத்தி என்னை வளர்ப்பாள்
தன்னலம் கருதாமல் என்னலம் காப்பாள்
தரணியில் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டுவாள்

பார் மீது பக்குவமாய் பழக விட்டவள்
பாச மழை பொழிந்து வளர்த்துக் கொண்டவள்
பார்த்துப் பார்த்து வழிமேல் விழி வைத்து காப்பவள்
பார் போற்ற வாழ வழி காட்டியவள்
பாரினில் அன்னை ஓர் ஆலயம்

சொக்கலிங்கம்.தர்மகுலசிங்கம்
நாயன்மார்கட்டு



# பெண்கள் உண்மையிலேயே விரும்புவது என்ன?



"பெண்கள் மிகவும் சாதாரண விடயங்களைத்தான் விரும்புகின்றனர் அதை ஆண்கள் நிறைவேற்றாமலோ அல்லது புறக்கணிப்பதாலோ தான் பெண்கள் வெறுப்படைகின்றனர்!" என்கிறார் பிரபல மனோதத்துவ ஆராய்ச்சியாளர் பேகோ அன்டர்கில் என்பவர்.

அமெரிக்காவைச் சேர்ந்த இவர், வெறும் 25 விடயங்களை சரி செய்து விட்டால் போதும், பெண்கள் உற்சாகமாக இருப்பர்! என்கிறார். இதோ அந்த விடயங்கள்.

1. **கொழுப்பு குறைய வேண்டும்:** உடலில் சதை போடுவது பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது. கொழுப்பு, சதையைக் குறைக்க ஒரு மருந்து கிடைத்தால் போதும்.

2. **சமையலை கணவர் பாராட்ட வேண்டும்:** உங்கள் அம்மா போல் யாராலும் சமைக்க முடியாதுதான். ஆனாலும், மனைவியின் சமையலை ஆகா, ஓகோ என பாராட்ட வேண்டும். அவர்களும் நன்றாக சமையலைக் கற்றுக் கொள்ள கொஞ்சம் நாள்கள் ஆகும் அல்லவா?

3. **ஊமை அல்ல:** வாய் பேச முடியாத வேலைக்காரி போல மனைவி இருக்க வேண்டும் என ஆசைப்படக் கூடாது. சினிமாவில் தான் அப்படிப்பட்ட கதாபாத்திரத்தை எதிர்பார்க்க முடியும். உண்மையான வாழ்க்கையில் மனைவியையும் சரிசமமாக நடத்த வேண்டும்.

4. **ஆண் மகன்:** தனது கணவர் சிறந்த ஆண் மகனாக, எல்லோராலும் பாராட்டப்படக் கூடியவராக இருக்க வேண்டும். திறமையை வெளிப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

5. **பொறுப்பு:** காலையில் வேலைக்குச் செல்லும் போது, கண்ணாடி எங்கே, திறப்பு எங்கே என்றெல்லாம் கேட்டு, தொந்தரவு செய்யக் கூடாது. பொறுப்பாக அவர்களும் நடந்து கொள்ள வேண்டும்.

6. **கட்டுப்பாடு:** உணவில் கட்டுப்பாடு வேண்டும். எப்போதும், ஏதாவது நொறுக்குத் தீனிகளை உள்ளே தள்ளிக் கொண்டே இருக்கக் கூடாது.

7. **விடுமுறை:** விடுமுறை நாள்களில் விரும்பியபடி ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும். அன்றும் விசேஷமாக சமையல் செய்ய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது.

8. **தொந்தரவு:** எல்லாவற்றையும் அவசர, அவசரமாகச் செய்ய வேண்டும் என தொந்தரவு செய்யக் கூடாது

9. **உதவி:** சமையல் அறையில் மனைவிக்கு கணவரும் உதவ வேண்டும்.

10. **பாராட்டு:** இந்த உடை உனக்கு நன்றாக இருக்கிறது எனப் பாராட்ட வேண்டும்

11. **இளமை:** நாம் எப்போதும் இளமையாக இருக்க மாட்டோம். அதை நினைவில் கொள்ள வேண்டும்

12. **சாரதி:** கணவன் கார் ஓட்டும் போது மனைவியோ, மனைவி கார் ஓட்டும் போது கணவனோ பின் சீட்டில் உட்காரக் கூடாது.

13. **ஒத்துழைப்பு:** குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மனைவியைத் திட்டக் கூடாது. குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பு இருவருக்கும் உண்டு.

14. **நல்ல முடிவு:** தினமும் ஒருமுறையாவது இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

15. **சமஉரிமை:** வருமானம் முழுவதும் கணவனிடமே இருந்தால், மனைவியை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

16. **அவசரம் கூடாது:** படுக்கை அறையில் போர் அடிக்கும் வகையில் கணவர் நடந்து கொள்ளக் கூடாது.

17. **ஆச்சரியம்:** வைர மோதிரம் வேண்டும் என பெண்கள் விரும்புவது கிடையாது. ஆனால், பெண்களை மகிழ்விக்கும் வகையில் திடீரென சிறு சிறு பரிசுகளை கொடுத்தாலே போதும்.

18. **புது உடை:** ஒரே மாதிரி உடைகளையே தொடர்ந்து போட்டுக் கொண்டிருக்க முடியாது. பெண்களுக்கு புதுப்புது உடைகளை எடுத்துக் கொடுக்க வேண்டும்.

9. **குழந்தைகள்:** நன்றாக, சிரித்த முகத்துடன் குழந்தைகள் படுக்கைக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளை அடிமை போல் நடத்தக் கூடாது. இதில் கணவர்களின் பங்கு முக்கியம்.

20. **பொருத்தம்:** நாம் அணியும் உடை எப்போதும் பொருத்தமாக இருக்க வேண்டும். அவலட்சணமாக இருக்கக் கூடாது.

21. **பெண்கள் எப்போதும் அதிகம் பேசுவர்:** ஐயோ தொலைபேசிக் கட்டணம் அதிகமாகி விட்டதே! என கூச்சல் போடக் கூடாது.

22. **சுற்றுலா:** அவ்வப்போது குடும்பத்துடன் சுற்றுலா செல்ல வேண்டும். திருப்தியான, கை நிறைய சம்பாதிக்கும் வேலை வேண்டும்.

23. **சுத்தம்:** படுக்கை எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். அடிக்கடி அதை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அதே போல் அலுமாரியில் உள்ள பொம்மைகள், பொருள்களையும் சுத்தம் செய்ய வேண்டும்.

24. **சிக்கல்:** பெண்களுக்கு தலை வலி தருவதே, உடைக்கு ஏற்ற செருப்பு முதல் சட்டை வரை எதுவும் கிடைக்காதது தான். அதை சரி செய்ய உதவ வேண்டும்.

25. **பொழுதுபோக்கு:** சனிக்கிழமை இரவு உறவினர்களுடன் விருந்துக்கு செல்வது, சினிமா செல்வது என பொழுதைப் போக்க வேண்டும். வேலை இருக்கிறது, ரிவியை பார்த்துக் கொண்டு தூங்கு! என கணவர் சொல்லக் கூடாது.

பெண்கள் விரும்புவது இவ்வளவு தான். இவற்றை கணவரோ, பெற்றோரோ, குழந்தைகளோ நிறைவேற்றினால் போதும். அந்தக் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.

# பெண்களே உங்களுக்காக சில சமையலறைக் குறிப்புகள்

**பாத்திரங்கள் பராமரிப்பு**

சமையலறையில் பாத்திரங்களை அடுக்கி வைப்பதே ஒருகலை எனவே கரண்டிகள் அடுக்கி வைப்பதற்கு ஏற்ற இடத்தில் கரண்டிகளையும், தட்டுகள் வைப்பதற்கு ஏற்ற இடத்தில் தட்டுக்களையும், கிண்ணங்களையும் அடுக்கிவைக்கவும். அப்பொழுதுதான் அவசரத்திற்கு எடுப்பதற்கு வசதியாக இருக்கும். பாத்திரங்களை அதற்குரிய இடத்தில் போட்டு வைப்பது இடைஞ்சலை தவிர்க்கும். சமையல் முடிந்த உடன் உடனே கழுவி வைப்பது வேலையை எளிதாக்கும். சமையலறையை அழகாக்கும்.

**சரக்குச் சாமான்கள்**

சமைக்கத் தேவையான சரக்கு பொருள்களை அந்தந்த பாத்திரங்களில் போட்டுவைத்து பத்திரப்படுத்துவது அவசியம். குறித்த போத்தல்களின் மேல் ஸ்டிக்கர் எழுதி ஒட்டி வைப்பது அனைவரும் எடுக்க எளிதாக இருக்கும். எளிதில் பார்க்க ஏற்ற பாத்திரங்களில் போட்டு வைப்பது மிகவும் எளிதானது.

**குறிப்பெடுத்து கொள்ளுங்கள்**

பல நேரங்களில் சமையலுக்குத் தேவையான பொருள்கள் முழுவதும் தீர்த்த பின்னரே... அதை நாம் கவனிப்போம். இதனால் அடிக்கடி பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படும். இதற்கு சமையலறையில் நோட்டு மற்றும் பேனா வைத்து, அவ்வப்போது குறிப்பெடுத்துக் கொண்டால் அந்தப் பொருள்களை வாங்கி தயார் நிலையில் வைத்துக் கொள்ளலாம். சமையலறையில் எடுக்கும் பொருள்களை அந்தந்த இடங்களில் வைத்து பழகினாலே, எளிதில் எடுக்கலாம். தேடும் நேரம் மிச்சமாகும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# உயர உயர...

சிறகுகள் செய்து
பறக்கக் கற்றுக்கொண்டவள்
கேள்விக் குறியை [–?]
ஆச்சரியக் குறியாக்கியவள் [!]
வானில் பறக்கிறாள்
வானவில்லை பிடிக்கிறாள். ...
செய்மதி செய்கிறாள்
செய்திகள் சொல்கிறாள்...
கப்பல் ஓட்டுகிறாள்
கடலுக்குள் நீந்துகிறாள்...
வைத்தியம் செய்கிறாள்
வள்ளுவன் ஆகிறாள்...
கட்டியம் சொல்கிறாள்
கட்டடம் கட்டுகிறாள்....
வாதம் செய்கிறாள்
நீதி காக்கிறாள்
பேர் செய்கிறாள்
பார் ஆழ்கிறாள்...
எங்கும் அவள் தான்...
ஏற்றிவிடும் ஏணியிவள்
கசங்கிவிட மாட்டாள்
காணாமல் போகமாட்டாள்
எழுத்துப் பிழைகளால் உருவானவள்
இப்போது கவிதை ஆகிவிட்டாள்

தமிழ் நிலா
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
23 ★ 02 ★ 1946

விண்ணில்
11 ★ 08 ★ 2012

### அமரர் ஆறுமுகம் செல்வமாணிக்கம்

கடந்த 11.08.2012 அன்று சிவபதமடைந்த அமரர் ஆறுமுகம் செல்வமாணிக்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.09.2012) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூம்பொழில்
111/13, இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
(சி/3190)(6.7.8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
31 ★ 03 ★ 1975

மறைவு
11 ★ 08 ★ 2012

அமரர்

### சந்திரகுமார் பிறேமறதி (றதி)

இன்று (10.09.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்கள் குடும்பசகிதம் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

F.R.சந்திரகுமார் (குட்டி)
(கணவர்)

அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

டக்ஸன், கஜீபன், அபிராம்
(பிள்ளைகள்) மற்றும்
குடும்பத்தினர்.

(22749)(3)




# அரசின் மோசடி வெற்றியை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் அரசு வெற்றி பெறும் என நாமும் மக்களும் எதிர்பார்த்தது சரியாகத்தான் நடந்துள்ளது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் முறைமைக்கு எதிராகத் தமது அதிகாரத்தையும், பணத்தையும் பிரயோகித்து அரசு பெற்றுக்கொண்ட வெற்றியே இது. மோசடிகளை நடத்தி அரசு பெற்றுக் கொண்ட வெற்றியை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

- இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மூன்று மாகாணசபைத் தேர்தல்கள், தேர்தல் முடிவுகள் குறித்து 'சுடர் ஒளி'யிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் நாம் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளோம். நாம் எமது கட்சியின் கொள்கைகள், அரசியல் நோக்கங்களுக்கமைய எமது தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இந்தத் தேர்தலில் மக்களின் உண்மையான பிரதிபலிப்புகள் இருந்திருந்தால் மூன்று மாகாணங்களிலும் எமது வெற்றி உறுதிசெய்யப்பட்டிருக்கும்.

இந்தத் தேர்தல் முடிவுகளால் எமது கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எமது அரசியல் நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் வழமைபோல் முன்னெடுப்போம்.

மூன்று மாகாணங்களிலும் தமது அதிகாரத்தையும் பணத்தையும் பயன்படுத்தி அரசு பெற்றுக்கொண்ட வெற்றி தற்காலிகமான ஒன்றாகும். அதன் வெற்றிப்பயணம் நீடிக்காது.

தேர்தல் முடிவுகளுக்கமைய மூன்று மாகாணத்திலும் உள்ள மக்கள் தம்பக்கமே என அரசு பெருமைகொள்ளமுடியாது. ஏனெனில், இது மக்களினால் வழங்கப்பட்ட நியாயமானதொரு முடிவல்ல.

இந்த அரசிடமிருந்து மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தொடர்ந்தும் வீதிக்கு இறங்கியே போராட வேண்டும். அந்த மாபெரும் மக்கள் போராட்டத்திற்குத் தலைமைதாங்க நாம் தயாராக உள்ளோம்.

விசேடமாகக் கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகளை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது என அரசு கூறியமை பொய்யானதாகும். கிழக்கைப் பொறுத்தவரையில் அரசு சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூவினங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழினத்தையும், முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் இனத்தையும் முதன்மைப்படுத்தி தமது இனவாத ரீதியிலான பிரசாரங்களை மேற்கொண்டன.

இனவாத அடிப்படையிலான கட்சி அரசியலை இந்த அரசால் ஒருபோதும் நாட்டை விட்டு இல்லாதொழிக்க முடியாது. அதை நாம் செய்வோம். நடைபெற்ற தேர்தலில் நாம் வெற்றிபெறாவிட்டாலும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி, மக்களுக்குத் தமது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க நாம் மேற்கொள்ளும் பயணம் ஓயாது - என்றார் ரில்வின் சில்வா.

## கிழக்கில் கூட்டமைப்புக்குக் கிடைத்த விருப்பு வாக்குகள்

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்களது விருப்பு வாக்குகள் நேற்றுமாலை வெளியிடப்பட்டன.

இதன்அடிப்படையில் கிழக்கு மாகாண சபையில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சிஉறுப்பினர்களின் விருப்பு வாக்குகள் வருமாறு

மட்டக்களப்பு மாவட்டம்

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் 29,148 வாக்குகளையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைராஜசிங்கம் 27,719 வாக்குகளையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை என்று அழைக்கப்படும் ஞா.கிருஷ்ணபிள்ளை 20,200 வாக்குகளையும் வர்த்தகர் இந்திரகுமார் பிரசன்னா 17,304 வாக்குகளையும் முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் மா.நடராசா 16,681 வாக்குக்ளையும் ஜனா என்று அழைக்கப்படும் கோ.கருணாகரன் 16,536 வாக்குகளையும் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டம்

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் கிழக்கு மாகாண முன்னாள் கல்வி பணிப்பாளரான எஸ். தண்டாயுதபாணி 20,850 வாக்குகளையும் குமார்சுவாமி நாகேஸ்வரன் 10,910 வாக்குகளையும் யாழ். பல்கலைக் கழக மாணவரான ஜெஹதீஸன் ஜனார்த்தனன் 8,560 வாக்குகளையும் பெற்று மாகாண சபை உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம்

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் தவராஜா கலையரசன் 12,122 வாக்குகளையும் ஐ. முருகேசு 10,812 வாக்குகளையும் பெற்று மாகாண சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

**கார் வாடகைக்கு, விற்பனைக்கு**

குறுகிய நீண்ட நாள் வாடகைக்கு சாரதி உட[illegible] நோ
இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 0779361427
(22748)(3)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை யோசவ் கில்பேட்

மாத்தளனைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அ.யோசவ் கில்பேட் நேற்று (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அஞ்சலீனம்மா தம்பதியரின் அன்பு மகனும், மேரி யூக்கரிஸ்டாவின் அன்பு கணவரும், உதயா, நெல்சன், ஜெனி, சாம்சன், கில்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்பணி அகஸ்ரீன் (சக்கோட்டை பங்குத்தந்தை) அவர்களின் அன்புமிகு தமையனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (10.09.2012) திங்கட் கிழமை பி.ப 3.00 மணிக்கு செல்வபுரம் தூய யூதா ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து முல்லைத்தீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்பணி.அ.அகஸ்ரீன்
பங்குத்தந்தை சக்கோட்டை.

(22747)(3)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை தமிழ் ஆசிரியை திருமதி தயாவதி சிவஞானசீலன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கந்தையா வல்லிபுரம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அல்லைப்பிட்டி
பராசக்தி வித்தியாகலயம்.


அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(22750)(3)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தனபாலசிங்கம்

(பிராந்திய முகாமையாளர் (வடக்கு மற்றும் கிழக்கு)
Commercial Credit PLC)



கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரி வீதியைச்சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் நேற்று (09.09.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் சின்னத்தம்பி- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தீப்தகுமார் (UK), ராஜேஸ்குமார் (வல்வெட்டித் துறை நகர சபை), லலித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.பாலேந் திரன், திருமதி ந.பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி T.உமையாள், திருமதி R.சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமனும், அவந்தி, ஆரணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/3191)(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

**IT Diploma Courses**

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip in Video Production & Multimedia
Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

75% OFF




புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு II - 10/09/2012
பிரிவு III - 15/09/2012
பிரிவு IV - 17/09/2012

75% நேரடிக் கட்டணச்சலுகையைப் பெற்று குறைந்த கட்டணத்தில் முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வியை இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட DMI COMPUTER EDUCATION இல் தொடருங்கள். (C/3159)

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | சாவகச்சேரி No.174, கண்டி வீதி (HNB அருகில்) Tel. : 021-227 0243 | சுன்னாகம் JET Tel. : 021-224 1970


# வலி. கிழக்குப் பிரதேசத்தில் கல்வி விழிப்புணர்வு செயற்பாடு

வலி.கிழக்கில் பாடசாலைக்குச்செல்லாமல் இருக்கும் சிறுவர்களை, கிராமங்களில் தேடிக்கண்டுபிடித்து பாடசாலைக்கு அனுப்பும் கல்வி விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

வலி.கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் இருபாலை கிழக்கு, கலைமதி, அச்செழு கிராமங்களில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைத் தேடிக்கண்டுபிடித்து பாடசாலையில்ஒப்படைக்கும் வேலைத்திட்டம் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபனின் வழிப்படுத்தலில் குறித்த பிரிவுகளின் கிராமஅலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சிறுவர் நலன்காக்கும் அலுவலர்கள் மற்றும் பட்டதாரி பயிலுநர்கள் உள்ளடங்கியோர் 15 பேர் கொண்ட குழுவினர் இந்தப்பணியில்ஈடுபட்டுள்ளனர்.

சிறுவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் உள்ளூர் அமைப்புக்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். வீடுகளில் பதுங்கி இருத்தல், சுகவீனம் என காரணம் கூறல், புதர்கள் மரங்களில் மறைந்திருத்தல், அணியினரை கண்டதும் ஓடி ஒளித்தல் போன்ற நிலையில் பல சிறுவர்களைக் கண்டுபிடித்ததோடு, அவர்களுக்கும் பெற்றோருக்கும் பாடசாலைக்கு செல்லவேண்டியதன் அவசியம், கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான பொருத்தமான விளக்கமும் அளிக்கப்பட்டது. தேடிக்கண்டுபிடிக்கப்பட்டசிறுவர்கள்கல்வி கற்கும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலையிலும் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தப் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் செயற்பாடுகள் இனங்காணப்பட்ட சிலகிராமங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட தினங்களில் கணிசமான எண்ணிக்கையான சிறுவர்கள் இவ்வாறு இனம் காணப்பட்டு பாடசாலைக்கு அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது.


## ஆனந்தி திருமண சேவை
### மணமகன் தேவை

1985 இல் பிறந்த ஆயிலியம், செவ்வாய் தோஷமற்ற உயரம் 160cm, கிரக பாவம் 43, முகாமைத்துவ பட்டம் பெற்று தனியார் துறையில் பணிபுரியும் பெண்ணுக்கு வெளியூர் மணமகனை நாடுகின்றோம். நேரடியாக அஞ்சல்வழி, தொலைபேசி 021 2228708 மூலம் தொடர்பு கொள்க. V.A.சிவராசா சோதிடர் 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் (22734)(6.8)

5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான SCC இன் விசேட கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

காலம் 3 மாதம்
12,15.09.2012 (3.00pm)



பயிற்சி கட்டணம் 1500/- மட்டும்

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்

(C/3182)

Softview Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P: 021 2225170


# யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவுனர் நாள் - 10.09.2012

## அமரர் மழவராயர் கந்தையா அவர்களுக்கு சமர்ப்பணம்



உள்ளத்தில் கருவாகி
உணர்வெலாம் கலந்து
வள்ளல் மனதில் வடிவமைத்து
வரம் எனப்பெற வழி செய்தாய்

அஞ்ஞான இருளகற்றி
அற ஒளி பெருக்க - நல்
ஆலயம் தந்தாய்
கல்விச் சாலையும் தந்தாய்

அந்நியர்பால் கையேந்தி
அவலமுற வேண்டாமென்று
அன்னசத்திரம் அமைத்தாய்
அனைவர்க்கும் உணவளித்தாய்

தன்காலத்திற்கு அப்பாலும்
தளர்வுறாது பணி தொடர
புத்தியோடு வழி செய்தாய்
பொன்மனச் செம்மல் தான்

புத்தூரின் நல் முத்தே
பெறற்கரிய பெரும்பேறே
பக்தியோடு நின் மலரடிக்கு
இம் மலர் சமர்ப்பணம்

**இன்று**
காலை 7 மணி : நிறுவுனர் நாள் நிகழ்வு
காலை 9 மணி : பரிசளிப்பு விழா
பி.ப. 2.30 மணி : சோமஸ்கந்தன் மலர் வெளியிடுதல்

மலர்க்குழு

(சி/3187)(6.7.8)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 • 01 • 1934



மறைவு 22 • 09 • 2011

## அமரர் கதிரவேலு திலகவதி

*திதி. 10.09.2012 அபரபக்கதசமி*

அன்புக்கோர் இலக்கணமாய் அறிவுக்கோர் அகல்
விளக்காய்பாசத்தின் இருப்பிடமாய் எங்கள்
குலவிளக்காய் வந்துதித்த
எங்கள் அம்மாவே மாமியே அப்பம்மாவே அம்மம்மாவே

இறைவனடி சென்று ஓராண்டு ஆனதுவே அன்புத் தெய்வமே உங்கள் பசுமை நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது அம்மா.

*108, கலைமகள் வீதி,*
*அரியாலை.*

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(22530)(6.7.15)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன் **சு. சுந்தரேசன்** (பழைய மாணவன் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கலாவதி சுப்பிரமணியம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

வீரமாகாளி அம்மன் கோயிலடி.

நண்பர்கள்.

(சி/3181)(6.7.8)

# மரண அறிவித்தல்



## திருமதி தியாகராசா இராசம்மா

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டையை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தியாகராசா இராசம்மா நேற்று (09.09.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தியாகராசாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான குழந்தைவேலு - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.09.2012) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் தற்காலிக வசிப்பிடமான "சுந்தரிவாசா" வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. மோகனபாலன்
(மருமகன்- ஆசிரியர் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்).

வட்டு வடக்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினரைச் சந்தித்த கைதிகள்





யாழ்ப்பாணம், செப்.10

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் உள்ள கைதிகள் தமது உறவினர்களுடன் ஒன்றிணைந்து உணவருந்த யாழ். சிறைச்சாலை நலன்புரி சங்கம் நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் உறவினர்களும், கைதிகளும், கலந்துரையாடிய பின், நலன்புரி சங்க அங்கத்தவர்கள், கைதிகளின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

இந்தச் சந்திப்பு பற்றி யாழ். சிறைச்சாலை பிரதான ஜெயிலர் எஸ். இந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ். சிறைச்சாலையில் தண்டனை பெற்ற கைதிகளில் தமது உறவினர்களைப் பார்ப்பதற்கு சம்மதம் தெரிவித்த 20 பேரைத் தேர்வு செய்து இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கைதிகளின் மனநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடனும் இந்த நிகழ்வு அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பெண் கைதிகளின் விழிப்புணர்வு நாடகம் இடம்பெற்றது. அத்துடன் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

யாழ். சிறைச்சாலை பிரதான ஜெயிலர் எஸ். இந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறைச்சாலை நலன்புரி சங்கத் தலைவி சட்டத்தரணி எஸ். சாந்தா அபிமன்னசிங்கம், உபதலைவி திருமதி கே. பொன்னம்பலம், செயலாளர் கே.குருவரன், பொருளாளர் யூவியாஸ், தேவைநாடும் மகளிர் அமைப்பின் பணிப்பாளர் திருமதி த.சுமதி, சட்டத்தரணி திருக்குமரன் மற்றும் நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-13)

# கொழும்புத்துறை, மணியம்தோட்டம் வீதிகள் தாரிட்டுப் புனரமைப்பு



கொழும்புத்துறை,செப்.10

கொழும்புத்துறை, மணியந்தோட்டப் பகுதியின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில் பிரதான மற்றும் உள் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நல்லூர்ப் பிரதேச சபை நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்த வீதிகளைப் புனரமைத்து வருகிறது.

மணியந்தோட்டத்தையும் அரியாலை நாவலடியையும் இணைக்கும் 8 ஆம் குறுக்கு வீதி நெல்சிப்திட்டத்தின்கீழும் மற்றும் மணிப்புரி உள்ளக வீதிகள் நல்லூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலும் தார் வீதியாக அமைக்கப்படுகிறது.

இதுவரை காலமும் மணற்பாங்கான இந்தப் பகுதியில் மக்கள் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

# விஸ்தரிக்கப்பட்ட வீதிகளில் குறியீடு இன்மையால் விபத்து

அச்சுவேலி, செப்.10

விஸ்தரிப்பு செய்யப்பட்ட பிரதான வீதிகளில் உரிய குறியீடுகள் இடப்படாமையால் நாளாந்தம் வாகன விபத்துக்கள் நடைபெறுகின்றன. இதனால் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி கோப்பாய் பிரதேச செயலகத்தடியில் இருந்துநெல்லியடிவரையான பகுதி விசாலிப்பு செய்யப்பட்டு 'காப்பெற்' போடப்பட்டுள்ளது. ஆனால் இருவழிப்பாதை தொடர்பான பிரிப்பு மற்றும் வீதியை கடக்க வேண்டிய இடங்கள் மற்றும் விவரங்கள் உள்ளடங்கிய குறியீடு எதுவும் இதுவரை இடப்படவில்லை.

பொருத்தமான குறியீடு இடப்படாமையால் மிக வேகமாகச் செலுத்தப்படும் வாகனங்களால் நாளாந்தம் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற முறையில் வீதியை இரண்டாகப் பிரிக்கும் குறியீடு இல்லாமல் இருப்பதால் இரண்டு பக்கத்தையும் உரிய அளவு மீறிய நிலையில் பயன்படுத்துவதும், பாதசாரிகள் வீதியை கடப்பதற்கான குறியீடுகள் அடையாளங்கள் இல்லாமல் இருப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதும் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன.

உரிய குறியீடுகளைப் போட்டு சீர்படுத்துவதன் மூலம் வாகன விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளலாம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-11)

# காரைநகர் சாம்பலோடையில் மிகப் பெரிய ராணுவ முகாம்

## அடிப்படைத் தேவைகளை மக்கள் இழக்கும் நிலை

*யாழ்ப்பாணம், செப்.10*

*காரைநகர் சாம்பலோடைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருவதால் காரைநகர் பிரதேச மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.*

காரைநகரில் நன்னீர் அதிகம் உள்ள பிரதேசம் சாம்பலோடைப் பகுதியே.

அத்துடன் மக்கள் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றும் சிறு மயானங்களும் இந்தப் பகுதியிலேயே காணப்படுகின்றன.

இராணுவ முகாம் விஸ்தரிப்பதால் இவற்றை மக்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே அங்கு இராணுவமுகாம்விஸ்தரிக்கப்படும் பணியை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என காரைநகர் பிரதேச சபை உபதலைவர் எஸ்.துர்க்கேஸ்வரன் கோரிக்கைவிடுத்துள்ளார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்ததாவது:-

காரைநகர் சாம்பலோடையில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதால் காரைநகர் மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதன் காரணமாக இங்கு மீளக்குடியமரும் மக்களின் எண்ணிக்கையும் குறைவடையும். இதனால் காரைநகரில் மக்களை விட இராணுத்தின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

காரைநகரில் மிகச் சிறியதாக அமைக்கப்பட்ட கடற்படை முகாம் இன்று பெரிய பிரதேசத்துக்கு விஸ்தரிக்கப்பட்டு நூறுக்கு மேற்பட்டவர்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

அதே சமயம் சாம்பலோடையில் அமைக்கபடும் இராணுவ முகாமால் இங்குள்ள மக்கள் தங்கள் வளங்களும், நிலங்களும் பறிபோய்விடுமோ என்றஏக்க நிலையில் உள்ளனர்.

எனவே ஆரம்பத்திலேயே இராணுவ முகாம் அமைப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், இந்த விடயம் குறித்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார். (ம-60)

# புல்லுக்குளத்தை ஆழமாக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பம்



கொழும்புத்துறை,செப்.10

யாழ்.புல்லுக்குளத்தை ஆழமாக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குளத்தில் தண்ணீர் முற்றாக வற்றியதையடுத்து ஆழப்படுத்தி புனரமைக்கும் வேலைத் திட்டம் இடம்பெறுகிறது.

தண்ணீரின்றி உலர்ந்து காணப்படும் குளம் கனரக இயந்திரங்களின் உதவியுடன் யாழ்.மாநகர சபையால் ஆழமாக்கப்பட்டு வருகிறது.

யாழ்.நகரக் கழிவு நீர் புல்லுக்குளத்தில் சேர்வது தடுத்து நிறுத்தப்பட்டு தனியான நிலத்தடிக் கால்வாய் வழியாக கடலுக்கு அனுப்பப்பட்டதை அடுத்து இம்முறை குளம் முற்றாக வற்றியுள்ளது.

இனி வருங்காலங்களில் மழை நீரைச்சேமித்து நீர்கொள்ளளவை அதிகரித்து சிறந்த நீர்த்தடாகமாக அமைப்பதற்கு குளம் ஆழப்படுத்துவது அவசியமானது என சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மழைநீரை அதிகளவில் தேக்கி வைப்பதனால் இந்தப் பகுதிகளின் நிலத்தடி நீரை பாதுகாக்க முடியும் என்றும் கூறப்படுகிறது. (ம-135)

# மு.காவின் ஆதரவு யாருக்கு? தொண்டர்களின் கைகளிலேயே

## அமைச்சர் ஹக்கீம் உறுதி

கொழும்பு, செப்.10

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் சொல்லாமல் கொள்ளாமல் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையில் மீண்டும் ஆட்சியை ஏற்படுத்த முஸ்லிம் காங் கிரஸிடமே கோரிக்கை விடப்படும் விசித்திரம் ஏற் பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு அரசியலில் அடுத்து என்ன முடிவெடுப்பது என்பது குறித்து அடிமட்டத் தொண்டர்கள் வரை சென்று பேச்சுநடத்தியேதீர்மானம்எடுக்கப்படும் என்றும் சொன்னார்.

தேர்தல் முடிவுகள் குறித்தும், கிழக்கு மாகாணசபையின் ஆட்சியமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் நேற்று கருத்து வெளியிட்ட ரவூப் ஹக்கீம், மக்களின் தீர்ப்பு சரியான விதத்தில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எங்களிடம் கேட்காமலே அரசுக்குள் இருக்கும் முஸ்லிம் அமைச்சர்மாரின் பேச்சைக் கேட்டுத்தான் இந்தத் தேர்தல் கொண்டுவரப்பட்டது. கிழக்கின் அரச அடியாட்களின் அடாவடித்தனங்களுக்கு மத்தியில் இந்த ஆதரவை எமது மக்கள் எமக்கு வழங்கியிருக்கின்றனர். இதற்கு நன்றி சொல்லாமல் இருக்கமுடியாது.

இந்தத் தேர்தலில் கிழக்கின் முக்கியமான இடங்களில் எமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. மக்களின் மன உணர்வுகளை நாங்கள் மதிக்கிறோம்.

எவ்வாறாயினும், எங்களைக் கேட்காமல் கலைக்கப்பட்ட ஒரு மாகாணசபையில் மீண்டும் ஆட்சியை ஏற்படுத்த எங்களிடமே ஆதரவு கேட்கப்படும் ஒரு சூழ்நிலையில் இதுகுறித்து உடனடித் தீர்மானம் எடுக்கமுடியாது. கட்சியுடனும் எமது தொண்டர்களுடனும் பேச்சுநடத்த வேண்டியுள்ளது. இதன் பின்னரே முடிவு எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

# வெட்டுக் காயத்துடன் ஒருவர் ஆஸ்பத்திரியில்

பற்றைக்குள் மறைந்து இருந்தவர்கள் வீதியில் சைக்கிளில் வந்த இளைஞரை வாளால் வெட்டி தாக்கிவிட்டு தப்பி ஓடிய சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு மந்துவில் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சீவரத்தினம் [illegible] காயங்களுக்கு இலக்கான நிலையில் [illegible] சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-9)

# நிகழ்வுகள் இன்று

**நிறுவுநர் தினம்**

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று கல்லூரி அதிபர் எஸ்.இராசமனோகரன் தலைமையில் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை அமர்வு, மாலை அமர்வு என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள நிகழ்வுகளில் காலை அமர்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், மாலை அமர்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவனும், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் ஆசிரியருமான க.துஸ்யந்தன் நிகழ்த்துவார். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி வெற்றிக் கிண்ணமும் ஆவரங்கால் இந்து அணி வசம்

பண்டத்தரிப்பு, செப் 10

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 46 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி சனசமுக நிலையமும், வளர்மதி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வட மாகாணத்தின் முன்னணி கரப்பந்து அணியான ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக்கொண்டது. இந்த வெற்றியின் மூலம் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் வெற்றிக் கிண்ணப் பயணம் தொடர்கின்றது.



கடந்த வெள்ளிக்கிழமை வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டி சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக நீடித்தது.

போட்டியின் ஆரம்பத்திலிருந்தே இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று வந்தன. எனினும் முதலாம் சுற்றின் இறுதியில் சிறப்பாகச் செயற்பட்ட கலைமதி அணியினர் அந்தச் சுற்றை 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்று இந்து இளைஞர் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். எனினும் இரண்டாம் சுற்றில் எழுச்சி பெற்ற இந்து இளைஞர் அணியினர் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்த, இரண்டாம் சுற்று 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இலகுவாக இந்து இளைஞர் வசமானது.

ஆனால் மூன்றாம் சுற்றில் மீண்டும் நெருக்கடி கொடுத்தது புத்தூர் கலைமதி அணி. அந்த அணி மூன்றாம் சுற்றை 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக் கொண்டது. ஆயினும் நான்காம் சுற்றில் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் நான்காம் சுற்றை 25:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தமதாக்கினர்.

தலா இரு சுற்றுக்களில் வெற்றி பெற்ற இரு அணிகளும் போட்டியின் வெற்றியைத் தீர்மானிக்க ஐந்தாவது சுற்றில் உத்வேகத்துடன் களமிறங்கின. ஐந்தாவது சுற்றில் இரு அணிகளும் மாறி, மாறி புள்ளிகளைப் பெற போட்டி விறு விறுப்பான கட்டத்தை அடைந்தது. எனினும் இறுதியில் இரண்டு புள்ளிகளை தொடர்ச்சியாகப் பெற்று இறுதிச் சுற்றை கைப்பற்றிய, இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று போட்டியின் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

(130)

# இன்றைய ஆட்டங்கள்

கொற்றாவத்தை சிவானந்தா வி.க. நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விபரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணிக்கு:-** விண்மீன் வி.க. எதிர் பொம்மர்ஸ் வி.க.

**பி.ப. 4.30 மணிக்கு:-** ஆதிசக்தி வி.க. எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்

★ ★ ★

இளவாலை சென்.லூட்ஸ் வி.க. நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3 மணிக்கு:-** ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் கலைமதி வி.க.

**பி.ப. 4 மணி:-** சென்.பீற்றர்ஸ் வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.க.

★ ★ ★

முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்

**மகளிர் அணி('ஏ' பிரிவு):-** போட்டி நடைபெறும் இடம்-மாங்குளம் மகா வித்தியாலய மைதானம் சீனிகம மகளிர் அணி எதிர் கிழக்கு மாகாண அணி, இராணுவ மகளிர் அணி எதிர் சக்தி மகளிர்'அணி

**மகளிர் அணி('பி' பிரிவு)** போட்டி நடைபெறும் இடம்-வவுனியா மத்திய கல்லூரி மைதானம் வடமாகாண அணி எதிர் நிட்டம்புவ மகளிர் அணி, விமானப்படை அணி எதிர் குருநாகல் மகளிர் அணி

**ஆண்கள் அணி (' சி' பிரிவு)** போட்டி நடைபெறும் இடம்-யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் யாழ்ப்பாண அணி எதிர் மன்னார், வவுனியா இணைந்த அணி கண்டி திருத்துவக் கல்லூரி அணி எதிர் மற்றும் எதிர் தெபரவெவ மகாவித்தியாலயம்

**ஆண்கள் அணி ( 'டி' பிரிவு)** போட்டி நடைபெறும் இடம்-ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானம் அனுராதபுர மத்திய கல்லூரி அணி எதிர் தர்மசேன நாயக்க கல்லூரி முல்லைத்தீவு இணைந்த அணி எதிர் மாலிக தோவ அணி

**ஆண்கள் அணி ( 'ஈ' பிரிவு)** போட்டி நடைபெறும் இடம்-கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம் கிளிநொச்சி இணைந்த அணி எதிர் மட்டக்களப்பு , திருகோணமலை இணைந்த அணி சீனிகம (எப்.சீ.) சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி எதிர் சென்.பீற்றர்ஸ் கல்லூரி

(ங-400-23-)

# முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ணம் மகளிர் ஆட்டங்களின் முடிவுகளில் சில

முரளி வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் மகளிர் பிரிவு ஆட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாங்குளம் மகாவித்தியாலைய மைதானத்திலும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இதில் கிழக்கு மாகாண பெண்கள் அணி, இராணுவ அணி, சீனிகம அணி அனுராதபுரசக்தி அணி, வடமாகாண பெண்கள் அணி, விமானப் படை அணி, குருநாகல் அணி, நிட்டம்புவ அணி ஆகியன அணிகள் பங்குபற்றின.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இராணுவ அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதிக் கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இராணுவ அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிழக்கு மாகாண அணி 19.4பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மட்டுமே 11 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இரண்டாவதாக இடம் பெற்ற போட்டியில் அனுராதபுரம் பெண்கள் சக்தி அணியை எதிர்த்து சீனிகம அணி மோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அனுராதபுர பெண்கள் சக்தி அணி, 20 பந்துப் பரிமாற்றங்களால் சகல இலக்குகளையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என துடுப்பெடுத்தாடிய சீனிகம அணி20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களை மட்டுமே பெற்று 5 ஓட்டங்களால் அனுராதபுரம் அணியிடம் தோற்றது.

(ங-400-422)

# இறுதியாட்டமும் கௌரவிப்பும்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெறவுள்ளன.

இதில் "ஏ" பிரிவு இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியும், "பி" பிரிவு இறுதியாட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் பிரதம முகாமையாளர் கி.யோசுதாசன், சிங்கர் நிறுவனத்தின் சுன்னாகம் முகாமையாளர் கோபிகிருஸ்ணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது முன்னாள் கரப்பந்தாட்ட வீரர்களான வி.ரி செல்வராஜா (கே.கே.எஸ் விளையாட்டுக்கழகம்), வி.மகாலிங்கம் (மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம்) எஸ்.அப்புத்துரை (நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்) ஆகியோரும்,

சிறந்த கரப்பந்தாட்ட நடுவராக கே.நாகேந்திரம். 2011,2012 ஆண்டு சிறந்த கரப்பந்து வீரராக தெரிவு செய்யப்பட்ட சிவசெரூபன் (ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்) 2011,2012 சிறந்த கரப்பந்து வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்ட புகழரசி (கே.கே.எஸ். விளையாட்டுக் கழகம்) மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தேசிய கரப்பந்தாட்ட அணி தெரிவு செய்யப்பட்ட பி.பானுசாந்தன் ஆகியோருக்கான கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

(ங-23-288)

# மானிப்பாய் பரிஷ், யாழ்.சென்றல் எதிர் அணிகளை துவம்சம் செய்தன

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'நியூஸ்ரார் பிறிமியர்' வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம், யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி களமிறங்கியது. நாணயச் சுழற்றியில் வெற்றிபெற்ற அரியாலை அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனுசன் 21 ஓட்டங்களையும், கிருபாகரன் 16 ஓட்டங்களையும், நிரோஜ் 10 ஓட்டங்களையும் ஏகநாதன் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் அணி சார்பாக வினோத் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளையும், டில்சான் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 18.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதில் துசிந்தன் 48 ஓட்டங்களையும் வினோத் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், துவாரகன் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்று தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

பந்து வீச்சில்அரியாலை விளையாட்டுக்கழக அணி சார்பில் ஏகநாதன் 2 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி வீரர் வினோத் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தேசிகன் 39 ஓட்டங்களையும், அனோஷன் 12 ஓட்டங்களையும் இராஜேந்திரம் 24 ஓட்டங்களையும், டிசாந்த் 14 ஓட்டங்களையும், சுவேந்திரன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பாக விமலநாத் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஓர் இலக்கினையும், றொகான் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

123 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 18 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக் குகளை இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் கலிஸ்ரன் 27 ஓட்டங்களையும் விமலகாந்தன் 28 ஓட்டங்களையும் யசிந்தன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி சார்பாக சுவேந்திரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், ஆதித்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் அனுசன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணிவீரன் விமல காந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

(ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்டி முர்ரே இறுதிக்குத் தகுதி



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் அரையிறுதிச்சுற்றில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே வெற்றி பெற்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தாண்டின் கடைசி கிராண்ட்சிலாம் போட்டியான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 3 ஆம் நிலை வீரரான இங்கிலாந்தின் அன்டி முர்ரே, 6 ஆம் நிலை வீரரான செக்குடியரசின் தோமஸ் பெர்டிச் மோதினார்கள்.

இதில் முர்ரே 5-7, 6-2, 6-1, 7-6 (9-7) என்ற செற் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். அவர் அமெரிக்க பகிரங்க இறுதிப் போட்டிக்கு நுழைவது 2 ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2008 ஆம் ஆண்டு தகுதி பெற்றார்.

ஒட்டு மொத்த கிராண்ட்சிலாமை பொறுத்தவரை 5 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளார். ஆனால் இதுவரை கிராண்ட்சிலாம் பட்டம் வென்றது இல்லை. முதல்முறையாக பட்டம் வெல்லும் ஆர்வத்துடன் முர்ரே உள்ளார்.

# ஆபிரிக்காவிடம் அடங்கியது இங்கிலாந்து



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இலகுவாக வெற்றிபெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 6 பந்துகள் மீதமிருக்க 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

றிவேர்ஸ் சைட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 27 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த அணி, ஒரு கட்டத்தில் 6 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் காணப்பட்டது.

ஆனால் அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக வீழ்த்தப்பட அந்த அணி 15.3 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

அதன் பின்னர் 8 ஆவது இலக்குகாக 33 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், இங்கிலாந்து அணி போட்டித்தன்மையான இலக்கொன்றைப் பெற முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கீஸ்வெட்டர் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், சுவான் 13 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும், புரோட் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் போத்தா 4 பந்துப் பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரொபின் பீற்றர்சன் 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 4 பந்துப் பரிமாற்றங்களில் 13 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், அல்பி மோர்க்கல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணி ஒரு கட்டத்தில் 3 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும் 4 ஆவது இலக்குக்காக 90 ஓட்டங்கள் பிரிக்கப்படாமல் பகிரப்பட அந்த அணியின் வெற்றி உறுதியானது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக கலிஸ் 44 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 54 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக டேர்ண்பக் 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(5

**ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் ஸ்ரெய்ன் தெரிவானார்.**

# 'குட்பை கான்சர், வெல்கம் சிக்ஸர்'

புற்று நோயிலிருந்து மீண்ட பின்னர், நியுசிலாந்து அணிக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்தில் விளையாடும் நாள், உலக கிண்ண இறுதி ஆட்டத்தை விட முக்கியமானது, என்று யுவராஜ் சிங் கூறினார்.

2011 இல் உலகக் கிண்ணத்தை வென்ற பின், யுவராஜின் நுரையீரலில் புற்றுநோய் கட்டி ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின்னர், புற்றுநோயிலிருந்து முழுமையாக விடுபட்டார். பத்து மாத இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு திரும்பிய இவர், நியுசிலாந்து அணிக்கு எதிரான 'ரி-20' தொடரில் பங்கேற்கிறார்.

இதற்காக மைதானத்தில் இவரை வரவேற்று பெரிய 'பனர்கள்' வைக்கப்பட்டு இருந்தன. இதில், 'குட்பை கான்சர், வெல்கம் சிக்சர்' என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.



இதுகுறித்து யுவராஜ் சிங் கூறுகையில், மீண்டும் சர்வதேச போட்டியில் களமிறங்குவது மகிழ்ச்சி. இந்தத் தொடருக்காக நன்றாக தயாராகியுள்ளேன். ஆனால், மழையால் ஆட்டம் ரத்தானது துரதிருஷ்டவசமானது, என்றார்.

முக்கியமான நாள்:

முதன் முதலாக களமிறங்குவது குறித்து யுவராஜ் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், நியுசிலாந்து அணிக்கு எதிராக களமிறங்கும் நாள், உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தை விட முக்கியமான நாளாக இருக்கும். எனக்கு அன்பும், ஆதரவும் தந்து, வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவரையும் நினைத்து மகிழ்ச்சி கொள்கிறேன், என்றார்.

(5)

# டிராவிட், லக்ஸ்மன் எனக்கு எப்போதுமே உதவி



கிரிக்கெட் அரங்கில் எனது வெற்றிக்கு டிராவிட் மற்றும் லக்ஸ்மன் உதவியாக இருந்தனர், என்று கும்ளே தெரிவித்தார்.

இந்திய அணியின் சுழல் ஜாம்பவான் கும்ளே (வயது-41). 2008 இல் ஓய்வு பெற்ற இவர், டெஸ்ட் அரங்கில் 619 இலக்குகள் வீழ்த்தியுள்ளார். இதில் லக்ஸ்மன், டிராவிட் சேர்ந்து 81 பிடியெடுப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இவர்களை பாராட்டிய கும்ளே கூறியதாவது:

ஒரு சுழற்பந்து வீச்சாளருக்கு, நெருக்கமாக களத்தடுப்பு செய்யும் வீரர்கள் அமைய வேண்டும். இந்த வகையில் டிராவிட், லக்ஸ்மன் எனக்கு கிடைத்தது அதிர்ஷ்டம்.

நான் எப்படி பந்து வீச்சு செய்வேன் என்று இவர்களுக்குத் தெரியும். பந்து வீசும் போது, இவர்களிடம் எப்போதும் விவாதிக்க மாட்டேன். எப்படி களத்தடுப்பு செய்ய வேண்டும் எனவும் சொல்லமாட்டேன். சில நேரங்களில் மட்டும் எப்படி நிற்க வேண்டும் என்று கூறுவேன். பெரும்பாலும் அவர்களாகவே சரியான இடத்தில் நிற்பர்.

துடுப்பாட்ட வீரருக்கு நெருக்கமாக நிற்பதற்கு இவர்கள், ஒருபோதும் பயந்தது கிடையாது. களத்தில் 100 சதவீதம் களத்தடுப்பு திறமை வெளிப்படுத்துவர். இதனால், பயம் இன்றி பந்து வீச்சு செய்வேன்.

போட்டிக்காக டிராவிட் தயாராகும் விதம், என்னை கவர்ந்தது. இவரது நோக்கம், கவனம் நம்ப முடியாத அளவில் இருக்கும். இதுபோன்று என்னால் இருக்க முடியாது. லக்ஸ்மனை பொறுத்தவரை எப்போதும் நேரியதாக நினைப்பார்.

ஆடுகளத்தின் தன்மை மோசமாக இருந்தாலும், சூழ்நிலை சாதகமாக இல்லாவிட்டாலும் மனதை தளர விட மாட்டார். லக்ஸ்மனின் இந்த குணம் தான், இந்திய அணியை பெரும்பாலான நேரங்களில் சரிவில் இருந்து மீண்டு வர உதவியது.

இவர்கள் களத்தில் இருந்தால் போதும், நாங்கள் ஓய்வாக இருப்போம். ஆஸ்திரேலிய தொடரில் ஏமாற்றிய லக்ஸ்மன், நியூசிலாந்து டெஸ்ட் தொடரில் எளிதாக மீண்டு வந்திருப்பார். ஆனால், தனிப்பட்ட காரணங்களுக்காக ஓய்வை அறிவித்து விட்டார். மொத்தத்தில் டிராவிட், லக்ஸ்மன் விருப்பப்படி ஓய்வு பெற்றுள்ளனர். இதை பார்த்து வியக்கிறேன் - என்றார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்சனுக்கு ஒப்பந்தம் இல்லை



இங்கிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு 2012-2013 காலப்பகுதிக்குரிய தேசிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. ஒழுக்கவியல் காரணங்களுக்காகத் தற்போது அணியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள அவருக்கு ஒப்பந்தம் வழங்கப்படாமை - அவருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்குமிடையில் இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

இங்கிலாந்தின் டெஸ்ட் தலைவராகக் காணப்பட்ட அன்ட்ரூ ஸ்ரோரஸ், பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர், அணியின் சில வீரர்கள் ஆகியோரோடு ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும், அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை தென்னாபிரிக்க வீரர்கள் சிலருக்கு அனுப்பினார் என்ற காரணத்தினாலும் கெவின் பீற்றர்சன் தற்போது இங்கிலாந்து அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்த நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள 10 பேர் கொண்ட தேசிய மத்திய ஒப்பந்தப் பட்டியலிலும், 4 பேர் கொண்ட உப தேசிய ஒப்பந்தத்திலும் கெவின் பீற்றர்சனுக்கு இடம் வழங்கப்படவில்லை.


கெவின் பீற்றர்சனுக்கும் அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்த இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை, அவை தனிப்பட்ட ரீதியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (5)


புதிய நடைமுறையில்
சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான
மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள
நேரம் மாலை: 4 - 8 மணி வரை.
* உரும்பிராயில்
சிவா மெடிக்கல் சென்ரர் - பலாலி வீதி, உரும்பிராய் சந்தி
* நாவற்குழியில்
நாவற்குழி சுகாதார நிலையம் -கேரதீவு வீதி,( நாவற்குழி.)
(22703)(3.6.7)

College of Chemistry
பழம்றோட் கந்தர்மடம்
Physics
A/L 2013 Day Class
நடைபெறுகின்றது
sat sun 9.30-11.00 Tue Thur 3.00-4.30
N.Kapilan B.Sc.
(22737)(3.6.7)

PHYSICS - M.ஸ்பெல்மன்
* A/L- 2013
✱ புலங்கள்
ஆரம்பம்
12.09.2012
புதன் 6.00 pm
(22742)(3.6)
* Day Class
✱ பொறியியல்
ஆரம்பம் 12.09.2012
புதன் 5.00 pm
(முழுப்பாடத்திட்டமும், வினாவிடையும் முழுமையாக கற்பிக்கப்படும்.)
18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகில்)

IIS CITY CAMPUS இல் இணைந்து
புத்தம் புதிய TOSHIBA i3 LAPTOP கணனி
ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்



edexcel BTEC
HND
in
COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT
மாணவர்களே!!!
September 2012 பிரிவிலே மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு TOSHIBA i3 Laptop கணனி ஒன்றினை IIS பரிசாக வழங்குகின்றது. இது வரை எந்த நிறுவனமும் சிந்திக்காத வழங்காத இச்சலுகை இப்பிரிவிற்கு மட்டுமே.
புதிய பிரிவு ஆரம்பம் : 14.09.2012 காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

யாழ் நகரில்
உயர்தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி
இலவச கருத்தரங்கு
(யாருக்கு: உயர்தர மாணவர்களுக்கும் பெற்றோருக்கும்)
இடம்: யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12-09-2012
நேரம்: 30நிமிட கற்கைநெறி அறிமுகம்
மு.ப.10.30 முதல் பி.ப 5.00 வரை நடைபெறும்
ACCA + UK Degree
Association of Chartered Certified Accountants-UK
BSc(Hons) in Applied Accounting (Oxford Brookes University) UK
@ K-AIMS
We Make You Progress Everyday..
ALP STUDENT TUITION ACCA GOLD 1/4/2012-31/3/2013
077 2 555 814
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
No. 35-1/1, Upatissa Road, Colombo-4

பெற்றோர்கள், மாணவர்களுக்கு . . . .
உயர் தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012
ACCA[Association of Chartered Certified Accountants (UK)]
நிறுவனம் தனது அங்கீகரிக்கப்பட்ட வடக்கின் ஒரேயொரு கல்வி வழங்குனரான K-AIMS உடன் இணைந்து நடாத்தும் உயர்தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012
பிரதம விருந்தினர் :T . VELNAMBY அவர்கள்
[பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ் பல்கலைகழகம்]
திகதி : செப்டம்பர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமை
நேரம் : காலை 10 .30 மணிக்கு
இடம் : யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
இலங்கையை பொறுத்தவரையில் பல்கலைக்கழக தெரிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டதுடன் இன்றைய நவீன உலகில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு பட்டப்படிப்பு மாத்திரமல்லாது , தொழில் சார் கல்வியும் [Professional Qualification] இன்றிஅமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இது சம்பந்தமான விடயங்கள் பேராசிரியர் வேல்நம்பி அவர்களாலும் ACCA பிரதிநிதிகளினாலும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தருணம் உயர்தர மாணவர்களின் பங்களிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை திட்டமிட உதவிபுரியும். இந்நிகழ்விற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்களை அழைக்கின்றோம்.
நன்றி
K-AIMS
We Make You Progress Everyday..
NO : 3 , 2/1 , Sirambiyadi Lane
Jaffna
TP : 0772 555 814
E-Mail : kumanan@k-aims.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.